மஞ்சரி

நந்தன - கார்த்திகை

நவம்பர், 1952

எகிப்தின் சர்வாதிகாரி
கோஹூர் அழகன்
பாகிஸ்தான் கோஷ்டி
கொலேகாரன் (சிறு கதை)
திருமணம் (நாவல் சுருக்கம்)

-6-
அணா

எல்லாம் அறிந்தவன்

தவமே கருமம்; பரம்பொருளே அமுதம். இந்த விஷயத்தை அறிந்தவன் எல்லாவற்றையும் அறிந்தவனாவான்.

—முண்டகோபனிஷத்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.
மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 5] நந்தன - கார்த்திகை :: நவம்பர் 1952 [இதழ் 12

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

சென்னை விவகாரம் மறுபடியும் கிளம்பியிருக்கிறது. அது யாருக்குச் சொந்தம்? தமிழருக்கா, தெலுங்கருக்கா? பூசி மெழுகாமல் பட்டவர்த்தனமாக ராஜாஜி இதைச் சொல்லி விட வேண்டும் என்று யாரோ ஒருவர் கேட்டுக்கொண்டார். "தமிழருக்குத்தான் சொந்தம். ஏனென்றால், சென்னையில் இன்று தமிழர்களே அதிகமாக வசிக்கிறார்கள்" என்று அழுத்தமாகச் சொன்னார் ராஜாஜி. "ஆஹா! அதெப்படிச் சொல்லலாம் இவர்! ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு அஸ்திவாரக்கல் நட்டவர் கர்ணம் ராகவ பாது; இதைக் கொண்டும், பின்னால், ஒவ்வொரு தெருவும் அமைந்த வரலாறு கொண்டும், சென்னை நகரின் ஒவ்வோர் அங்குலமும் தெலுங்கருக்கே சொந்தம் என்று அசைக்க முடியாமல் நான் நிரூபிப்பேன்" என்று ஆந்திரகேசரி பிரகாசம் காரு கர்ஜிக்கிறார். இது மட்டுமா? சென்ஸஸ் கணக்கே பொய்யாம். அதை அவர் நம்ப மாட்டாராம்! இந்த அநாவசிய விவகாரம் என்றைக்குத்தான் தீரப் போகிறதோ, தெரியவில்லை. ஆந்திர ராஜ்யப் பிரிவினையை ஸௌஜன்யமாகச் செய்துகொள்ளாமல் கோணல் கட்சியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் ஆந்திரத் தலைவர்கள். அதற்குப் பதில் சொல்லத் தமிழ் நாட்டுத் தலைவர்களும் துடிக்கிறார்கள். இப்படி விவகாரத்தை வரவர முற்றவிட்டுக் கொண்டிருப்பது இரு கோஷ்டியாருக்குமே நல்லதல்ல.

* * *

நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் உள்ள கவிதைச் சுவை மிகுந்த பாடல்களுள் முக்கியமானவை ஆண்டாள் இயற்றியவைதான். அவளுடைய திருக் கோயில் அமைந்திருப்பது ஸ்ரீவில்லிபுத்தூர். தர்ம ஸ்தாபன மந்திரி ஸ்ரீ கே. வேங்கடசாமி நாயுடு சமீபத்தில் அங்கே விஜயம் செய்தார். அவருக்கு நகர சபையார் வரவேற்பு அளித்தார்கள். கோயில் நிதியில் ஒரு பகுதியைப் பெண் பள்ளிக்கூடம் நிறுவ உதவ வேண்டும் என்று அந்த வரவேற்புப் பத்திரத்தில் அவர்கள் கேட்டுக்கொண்டார்

களாம். "ஏற்கனவே அருகி வரும் கோயில் நிதியைப் பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் தொடங்குவதற்கு உதவ முடியாது. முன் காலத்தில் ராஜாக்களும் ஜமீன்தார்களும் கோயில்களுக்கு நன்கொடை அளித்தார்கள். இன்றோ நிலைமை மாறிவிட்டது" என்று கனம் மந்திரி பதிலளித்தது நியாயம். சமயம், கலை, ஐதிகம் இவைகளை உதாசீனம் செய்யக் கூடிய முறையில் எந்த யோசனையையும் சொல்வது சுலபம். ஆனால், அதனால் விளையக் கூடிய தீங்குகள் அனந்தம்.

* * *

மர வள்ளிக்கிழங்கு போன்ற சில பதார்த்தங்களைக் கொண்டு, பதில் வெட்டு அரிசி தயாரித்துப் பார்த்தார்களாம். டில்லியில் பத்திரிகை நிருபர்களுக்கு அந்தப் பதில் வெட்டு அரிசிச் சோற்றைப் போட்டபோது, அதற்கும் நிஜ அரிசிச் சோற்றுக்கும் அவர்களால் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லையாம். இப்போது இந்தப் போலி அரிசியை மிகவும் சிக்கனமான முறையில் ஏராளமாய்த் தயாரிப்பதற்குரிய வழிகளை ஆராய இந்திய யூனியன் இயற்கை வள மந்திரி ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறாராம். அரிசிப் பஞ்சத்தைத் தீர்க்க வழி காண்பது மிகவும் அவசியந்தான். ஆனால், போலி அரிசி தயாரிப்பதன் மூலம் அதைத் தீர்ப்பது சுலபமா என்பதில் நிபுணர்களுக்குள்ளேயே இன்னமும் மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. மர வள்ளிக் கிழங்கு போன்ற பொருள்களை எதற்காகப் பணம் செலவிட்டு அரிசியாக உரு மாற்றி உண்ண வேண்டும்? கிழங்கைக் கிழங்காகவே உண்ணக்கூடாதா?

* * *

தென்னாட்டில் ஹிந்தி விரோதம் சில இடங்களில் தோன்றியிருப்பதுபற்றி, சமீபத்தில் இந்தியப் பிரதம மந்திரி நேரு தமது விஜயத்தின்போது கண்டித்தார். ஏதாவது தென்னிந்தியப் பாஷை ஒன்றை, வட நாட்டில் கட்டாயப் பாடமாக வைக்கக்கூடத் தமக்கு விருப்பம் என்று அப்போது அவர் தெரிவித்தார். இது மிகவும் புத்திசாலித்தனமான யோசனை. இதை அவர் சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டும். இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஐக்கியத்துக்கும் பல பாஷைக்காரரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டு, கலை இலக்கியங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்வது மிக்க அவசியம். தென்னாட்டினர் ஹிந்தியை வெறுப்பது தவறு என்றால், ஹிந்திவாலாக்கள் தங்கள் பாஷையிலே மூர்க்க வெறி கொள்வதும் தவறுதான். அவர்களுக்கும் பணிவும் மற்றவரிடம் அநுதாபமும் அன்பும் வேண்டும். இந்தியா முழுவதற்கும் ஆதி காலத்திலிருந்து கலை, இலக்கியம், சமயம் ஆகியவைகளில் ஒற்றுமை உண்டாக்கி வைத்திருக்கும் சம்ஸ்கிருத பாஷையின் பெருமையையும் எல்லாப் பகுதியினரும் உணர்ந்து அதையும் போற்றி வளர்க்க வேண்டும். வீணே பாஷை வெறியோ குரோதமோ கொள்ளாமல், எல்லாப் பாஷைகளையுமே வளம் பெறச் செய்ய வேண்டும். கல்விமான்கள் இதற்குரிய வழிகளை வகுத்து வைத்துக்கொண்டு பாடுபடுவதே தேசம் சீரும் சிறப்பும் பெறச் செய்யும் மார்க்கம்.

எகிப்தின் சர்வாதிகாரி

★

எகிப்தில் இன்று பெரிய புரட்சிக்கு மூல புருஷராக விளங்கும் ஜெனரல் நஜீபைப்பற்றிய இந்த வரலாறு மிகவும் ரசமானது.

ஆதாரம்: 'இல்லஸ்ட்ரேடட்', லண்டன்.

சமீபத்தில் திடீரென்று எகிப்தில் ஓர் அரசியல் புரட்சி எற்பட்டது. எகிப்தின் அரசராக இருந்த ஃபரூக் முடி துறந்தார். பல காலமாக எகிப்து அரசாங்கத்தில் இருந்த பழம் பெருச்சாளிகள் தம் பதவியை இழந்தார்கள். பழைய மந்திரி சபை மாறியது. புதிய மந்திரி சபை ஆட்சியை எற்றுக் கொண்டது. இவ்வளவும் மிகக் குறுகிய காலத்தில் உள்நாட்டுக் கலகம் இல்லாமல் நடைபெற்றன. அரியணையிலிருந்து அரச போகத்தை அநுபவித்து வந்த மன்னர் ஃபரூக் இப்போது எகிப்தை விட்டு வேறு நாட்டில் இருக்கிறார்.

இவ்வளவுக்கும் காரணம் தளபதி முகம்மது நஜீப் என்பவர். ராணுவத்தைத் தம் வசமாக்கிக்கொண்டு அந்தப் பலத்தால் அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தம்முடைய ஆணைக்கு அடி பணியச் செய்து இவர் நாட்டின் நிர்வாகத்தைத் தாமே எற்று நடத்தத் தொடங்கிவிட்டார். இவ்வளவு பெரிய மாற்றம் சில நாட்களுக்குள்ளே நிகழ்ந்தாலும், இதற்குக் காரணமான சூழ்நிலை பலமாக எகிப்து நாட்டில் இருந்து வந்திருக்கிறது.

தளபதி நஜீபுக்கு இப்போது 51 வயது ஆகிறது. பாலஸ்தீனத்தில் நிகழ்ந்த போரில் அவர் ஈடுபட்டார். அவர் இப்போது செய்த காரியம் நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது. அதனால்தான் இந்தப் பெரும் புரட்சி மிக எளிதிலே நிறைவேறியது. ஃபரூக் மன்னருடைய ஆடம்பர வாழ்வும், அவருடைய தர்பாரில் தாண்டவமாடிய லஞ்ச ஊழலும், வேண்டியவர்களையெல்லாம் பதவியில் வைத்து மனம் போனபடி செய்ததும், இவை போன்ற மற்ற முறையற்ற செயல்களும் மக்களுக்கு வரவர மன்னர் மேலும் அரசாங்கத்தின் மேலும் வெறுப்பை உண்டு பண்ணி வந்தன. அது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், உள்ளுக்குள்ளே குமுறிக்கொண்டிருந்தது. நிர்வாகத் துறையில் இருப்பவர்களிலும், ராணுவத்தில் இருப்பவர்களிலும் பலர் ஆட்சி முறையின் ஊழல்களைக் கண்டு மனம் வருந்தினார்கள். இவற்றை நன்கு அறிந்த நஜீப் மிகவும் சாமர்த்தியமாகவும் விரைவாகவும் அரசாட்சியை மாற்றிவிட்டார்.

1947 - ஆம் வருஷம் முதலே ராணுவத்தினருக்கு ஃபரூக் மன்னர் செய்து வந்த காரியங்களில் அதிருப்தி எற்பட்டது. மக்களுடைய அவமதிப்புக்கு ஆளான

பல பேர்வழிகளை மன்னர் உயர்ந்த பதவிகளில் அமர்த்தித் தம்முடைய பக்கபலமாக வைத்துக் கொண்டார். சமூக நலத்துக்கு விரோதமாகப் பல காரியங்களைச் செய்து நாட்டு மக்களின் வெறுப்புக்குப் பாத்திரரான இப்ராஹிம் அட்டாலா என்பவரை ராணுவத் தலைவராகச் செய்தார். அப்போது தான் ராணுவ அதிகாரிகள் சிலர் கெய்ரோவில் கூடி அவருடைய அதிகாரத்தை எதிர்ப்பது என்று முடிவு செய்தார்கள். இந்த முடிவுக்குத் தூண்டுதலாக இருந்தவர் ராசேட் மெஹன்னு என்பவர். அவர் இப்போது ஒரு படைத்தலைவராகவும், அரசர் முடி துறந்த பிறகு ஏற்பட்ட நிர்வாகக் குழுவிலுள்ள மூன்று பேரில் ஒருவராகவும் இருக்கிறார்.

ஆரம்ப காலத்தில் மெஹன்னுவைச் சிலரே ஆதரித்தார்கள். அவர்கள் யாவரும் துடிதுடிப்புள்ள இளைஞர்கள். 'சுதந்தர அதிகாரிகள்' என்ற பெயரைத் தங்கள் ஸ்தாபனத்துக்கு வைத்துக் கொண்டார்கள். மேல்தர உத்தியோகஸ்தர்களுக்குத் தங்கள் ஸ்தாபனத்தைப்பற்றிய செய்தி சிறிதும் தெரியாமல் ரகசியமாகப் பாதுகாத்து வந்தார்கள். அந்தக் கூட்டத்தினரில் நஜீப் சேரவில்லை. அவரைப் பழம்பசலி என்று அப்போது எண்ணினார்கள். நாளடைவில் அவருக்கும் அட்டாலாவினிடம் வெறுப்பு இருப்பதைக் கண்டுகொண்டார்கள்.

1948 - இல் பாலஸ்தீனப் போர் நடைபெற்றது. மன்னரும் மற்றவர்களும் வெற்றி கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் போரின் முடிவு நஜீபைச் சேர்ந்தவர்களுக்குத் திருப்தியைத் தரவில்லை. அந்தப் போரில் அவர் முன்னணிப் படையின் தளபதியாக இருந்தார். அதில் அவர் கடுமையாகக் காயம் அடைந்தார். அப்போதுதான், 'சுதந்தர அதிகாரிகள்' என்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் அவரை அணுகித் தங்கள் கூட்டத்தைப்பற்றிப் பேசினார். 1949 ஆரம்பத்தில் அந்த ரகசிய ஸ்தாபனத்தில் நஜீபும் ஓர் அங்கத்தினர் ஆனார். பாலஸ்தீனப் போருக்கு முன் அட்டாலாவின் நிர்வாகத்தை ஒழிப்பதுதான் அந்த ஸ்தாபனத்தின் நோக்கமாக இருந்தது. அந்த யுத்தத்துக்குப் பிறகு மன்னர் ஃபரூக்கின் பதவியையே போக்க வேண்டும் என்ற முடிவு ஏற்பட்டது.

ஸ்தாபன வேலைகள் மிகமிக ரகசியமாக இருந்தன. ஸ்தாபனத்தின் நிர்வாகம் ஒரு மத்தியக் கமிட்டியின் கையில் இருந்தது. முதலில் அந்தக் கமிட்டியில் ஒன்பது பேர் இருந்தார்கள். அப்பால் பன்னிரண்டு பேர் ஆனார்கள். புரட்சிக்குரிய திட்டத்தை அவர்கள் அமைக்கத் தொடங்கினார்கள். ரகசியமாகப் புரட்சிக்கு அடி கோலும் வகையில் நஜீப் முன்பே பழக்கப்பட்டவர். 1919 - இல் பிரிட்டிஷாருக்கு எதிராக நடந்த ஒரு ரகசியத் திட்டத்தில் அவர் கலந்துகொண்டிருந்தார். ரகசியச் சபைகள், மறைமுகமான புரட்சி வேலைகள் என்பவற்றை அவர் அறிவார். இத்தகைய ஸ்தாபனங்களில் மிக முக்கியமான சபையின் உறுப்பினர்கள் எல்லோரையும் எவருக்கும் தெரியாது. இவரை யார் அந்தச் சபையிலே புகுத்தினாரோ, அவரை மாத்திரமே தெரி

யும். 'சுதந்தர அதிகாரிகள்' என்ற ஸ்தாபனமும் இத்தகைய முறையிலேயே நடைபெற்றது. நஜீபுக்கே அதில் நாலைந்து பேரைத்தான் தெரியும்.

புரட்சியை உருவாக்குவதற்கு முன் அரசாங்க ஊழல்களை நிர்வாகத்தில் உள்ளவர்களுக்குத் தெரிவித்துப் பரிகாரம் செய்யும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நஜீப் எண்ணினர். முதல் மந்திரி மஹாஸ் பாஷாவுக்கும் உள்நாட்டு மந்திரிக்கும் பல மனுக்கள் சென்றன. சுற்றுவழியாக அரசருக்கே சில விண்ணப்பங்கள் சென்றன. ஒன்றுக்காவது பதில் இல்லை. அனுப்பிய அத்தனை கடிதங்களும் அரசாங்க ஊழல் சமுத்திரத்தில் அமுங்கிப் போயின. பிறகுதான் புரட்சி நடந்தே தீரவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் நஜீப்.

எகிப்தில் ராணுவ அதிகாரிகள் அடங்கிய 'ஆபீசர்ஸ் கிளப்' என்ற ஓர் உல்லாசச் சபை இருந்தது. அதில் தம்முடைய கையாட்களையே வைப்பது மன்னர் வழக்கம். இந்த வருஷ ஆரம்பத்தில் அந்தச் சபைக்குத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. அந்தப் பதவிக்கு ஃபரூக் மன்னர் ஒருவரை நியமித்தார். ஆனல் தேர்தலில் நஜீபே தலைவராக வந்தார். ஃபரூக் மன்னருக்கு இது பிடிக்கவில்லை. அந்தக் கிளப்பையே மூடிவிட வேண்டுமென்று உத்தரவிட்டார். அதுவே வாணத்துக்குத் தீ மூட்டுவதாக அமைந்தது.

புரட்சியை இனி நடத்த வேண்டியதுதான் என்று நஜீபும் அவர் நண்பர்களும் முடிவு செய்தார்கள். ஃபரூக் மன்னருக்குச் சாதகமானவர்கள் அனைவரையும் சிறைப்படுத்தி முக்கியமான காரியாலயங்களையும் இடங்களையும் தங்கள் வசப்படுத்திக்கொள்வது என்பது அவர்கள் திட்டம். ஆகஸ்டு மாதம் 4-ஆம் தேதி இந்தத் திடீர்ப் புரட்சியை நடத்துவதாக முதலில் தீர்மானித்தார்கள். புரட்சியில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தாலும் ஒருகால் தோல்வியுற்றல் அத்தனை பேரும் சிறைக்குச் செல்ல வேண்டும். அதற்கு எல்லோரும் தயாராக இருந்தார்கள். தங்கள் திட்டத்தை மிகவும் ரகசியமாகவே வைத்திருந்தார்கள். அரசருக்கு ஏதோ சிறிய சந்தேகம் ஏற்பட்டது. ராணுவத்தின் தனித்தலைவராகிய ஹைதர் பாஷாவுக்குச் சொல்லியனுப்பி நஜீபையும் வேறு பன்னிரண்டு ராணுவ அதிகாரிகளையும் படையிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று சொன்னர். இது பற்றி விசாரித்துப் பிறகு அரசர் விருப்பப்படியே செய்யலாம் என்று படைத் தலைவர் சொன்னர். ஆனல் அவருடைய விசாரணைக்குப் போதிய அவகாசத்தை நஜீப் கொடுக்கவில்லை. திட்டம் போட்டு வைத்திருந்த காலத்துக்கு முன்பே அவர் வேலையை நிறைவேற்றத் துணிந்தார். கெய்ரோவில் இருந்த ராணுவம் முழுவதும் அவர் கைவசம் இருந்தது.

ஜூலை மாதம் பிற்பகுதியில் நிகழ்ச்சிகளெல்லாம் ஜூரவேகத்தில் நடந்தன. ஹுஸேன் ஸிர்ரி பிரதம மந்திரியாக 18 நாள் வேலை பார்த்தார். அவர் ராஜீநாமாச் செய்தார். உடனே ஹிலாலி மந்திரி சபையை அமைத்தார். இந்தச் சமயத்தில் ராணுவத்தினரின் மனக் கசப்பு அதிக

மாயிற்று. ஆபீஸர்ஸ் கிளப்பு விவகாரம் இப்போதுதான் நடந்தது. கிளப்பையே மூடிவிட வேண்டுமென்று மன்னர் உத்தரவிட்டார். அலி மேஹர், ஹிலாலி, ஸிர்ரி என்ற மூவரும் ஒருவர்பின் ஒருவராகப் பிரதம மந்திரிகளாக இருந்தார்கள். அந்த மூவரும் நஜீபை ராணுவ மந்திரியாக நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஃபரூக் மன்னர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தம்முடைய தங்கை புருஷராகிய இஸ்மெயில் செரீன் என்பவரை நியமித்துவிட்டார். இந்த இரண்டு காரியங்களும் புரட்சிக்காரர்களுக்கு வேகம் உண்டாகச் செய்தன. ஜூலை மாதம் 24-ஆம் தேதி பகல் ஒரு மணிக்குத் தங்கள் காரியத்தைச் செய்யத் தீர்மானித்தார்கள். ரகசியம் எப்படியோ சிறிது வெளிவந்ததாகத் தெரியவே, ராணுவத்தினரின் புரட்சி தொடங்கிவிட்டது.

திடீரென்று மூவாயிரம் படைவீரர்களும் முந்நூறு ராணுவ அதிகாரிகளும் தங்கள் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டுக் கெயிரோவுக்குச் சென்று முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக்கொள்ளலானார்கள். ராணுவத்தின் தலைமையை நஜீப் ஏற்றுக்கொண்டார். இன்ன இன்னபடி செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார். இரவு 1-30 மணிக்குள் ராணுவத்தினர் கெயிரோவில் ரேடியோ நிலையம், சேனையின் தலைமைக் காரியாலயம், ரெயில்வே ஸ்டேஷன், டெலிபோன் நிலையம் ஆகியவற்றை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். பீரங்கி வண்டிகளும் டாங்கிகளும் அவர்களிடம் இருந்தன. விமான நிலையத்தையும் சூழ்ந்துகொண்டார்கள்.

ராணுவத்திலிருந்த மேலதிகாரிகளையும் தளபதிகளையும் கைது செய்தார்கள். தளபதிகளில் ஒருவர் நஜீபின் சொந்தத் தம்பி. அவரையும் கைது செய்தார்கள். 23-ஆம் தேதி காலையில் சேனாபதியாகிய ஹிஷ்மத்தைக் கைது செய்துவிட்டார்கள். ராணுவத்தின் தனித் தலைமையை நஜீபே ஏற்றார். புரட்சிக் கமிட்டியின் விருப்பப்படியே அவர் அதை ஏற்றார். அதுமுதல் இன்றுவரையில் அவரே சர்வாதிகாரியாக இருக்கிறார்.

புரட்சிக்காரர்களுக்கு எதிர்ப்பே இல்லை. எங்கே போனாலும் அமைதியாகவே தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொண்டார்கள். நஜீப் சில பிரகடனங்களை வெளியிட்டார். ஜனங்கள் எதையும் எதிர்க்கவில்லை. வழக்கம்போல அவர்கள் தங்கள் வேலைகளைக் கவனித்தார்கள்.

எகிப்தின் தலைநகரம் கெயிரோ. கோடைக்காலத்தில் அலெக்ஸாந்திரியா என்ற இடத்தில் அரசாங்கத் தலைமைக் காரியாலயம் நடைபெறும். இப்போது மன்னரும் மற்றப் பெரிய அதிகாரிகளும் அங்கேதான் இருந்தார்கள். கெயிரோவில் நிகழ்ந்த புரட்சி அலெக்ஸாந்திரியாவை எட்டியது. அங்கே கப்பற் படையைச் சார்ந்தவர்கள் யாவரும் நஜீபின் புரட்சியை ஆதரித்தார்கள். அதனால் அரசர் ஒன்றும் செய்ய முடியாமற் போயிற்று. நஜீப் தம்முடைய நிபந்தனைகளை அரசருக்கு அனுப்பினார். அலி மேஹரை மந்திரிசபை அமைக்கச் சொல்ல வேண்டுமென்றார். அப்படியே நடைபெற்றது. 24-ஆம் தேதி

அலி மேஹர் மந்திரிசபை வேலை செய்யத் தொடங்கியது. அரசரிடம் அவர் பேசிவிட்டு வந்து, ராணுவத்தினர் விரும்பியவற்றையெல்லாம் மன்னர் நிறைவேற்றுவதாக உறுதிமொழி தந்துவிட்டார் என்ற செய்தியை அறிவித்தார்.

அன்றிரவு அரசர் தம் கைப்பட நஜீபையே சேனாதிபதியாக நியமித்திருப்பதாக ஒரு கட்டளையை விடுத்தார். ஆனால் ஃபரூக் மன்னரை முடி துறக்கும்படி செய்யவேண்டுமென்று ராணுவத்தினர் தீர்மானித்து விட்டார்கள்.

கெயிரோவிலிருந்து ராணுவ அதிகாரிகள் அலெக்ஸாந்திரியாவுக்குச் சென்றார்கள். அங்கே ஃபரூக் தங்கியிருந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். முதல் மந்திரி அலி மேஹர் ராணுவத்தினரின் விருப்பத்தை மன்னரிடம் சென்று அறிவித்தார். வேறு வழியில்லாமல் மன்னர் தாம் முடி துறக்க இசைவதாக எழுதிக் கொடுத்தார்.

ஏழே மாதங்களாகியிருக்கும் இரண்டாம் புவாட் என்ற குழந்தையையே மன்னராக ராணுவத்தினர் ஏற்றுக் கொண்டார்கள். ஃபரூக் மன்னருடைய இரண்டாம் மனைவி நாரிமனுக்குப் பிறந்த குழந்தை அது.

அன்றே ஃபரூக் நாட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார். அவர் சுக புருஷர். பத்தொன்பதே வயசுள்ள தம் இள மனைவியுடனும் மூத்த மனைவியின் பெண்களுடனும் முடியைத் துறந்து நாட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டார். அப்போது நஜீப் அவரைக் கண்டு பேசினார். "இனிமேல் உங்கள் நிர்வாகம் கஷ்டமானது; சுலபமானதன்று. இப்போது நடந்தது நடவாமலிருந்தால் நான் என் வேலையை நடத்தியிருப்பேன்" என்று ஃபரூக் மன்னர் அப்போது சொன்னாராம். இப்போது ஃபரூக் இத்தாலியில் தங்கியிருக்கிறார். அலி மேஹரும் முதல் மந்திரி ஸ்தானத்தை விட்டு விட்டார். நஜீபே பிரதம மந்திரியாகவும் எகிப்தின் சர்வாதிகாரியாகவும் இருக்கிறார். ராணுவம் முழுவதும் அவர் பேச்சுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. நாட்டின் சீர்திருத்தத்துக்கும் சுபிட்சத்துக்கும் வேண்டிய காரியங்களை நஜீப் யோசித்துச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்.

பழம் பெருச்சாளிகளையெல்லாம் கண்டு பிடித்து அவர்கள் கொள்ளையடித்து வைத்திருக்கும் பணத்தை அரசாங்கத்திலே சேர்க்க முயன்று வருகிறார். ஃபரூக்குக்குச் சொந்தமான நிலங்கள், இடங்கள், சொத்துக்கள் ஆகியவற்றை அவருக்கு அப்படியே கொடுத்துவிட மாட்டேன் என்று சொல்கிறார். தக்கபடி விசாரணை நடத்தி நியாயமாக அவருக்குச் சேரவேண்டியவற்றையே தருவேன் என்கிறார்.

அவசர நிலையில் தாம் அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டாலும் ஜனநாயக முறையில் அரசாங்கம் நடப்பதையே நஜீப் விரும்புகிறார். அடுத்த வருஷம் பிப்ரவரி மாதம் தேர்தல் நடத்துவதாகத் திட்டம் போட்டிருக்கிறார்.

உணவு என்ன செய்யும்?

★

பசிக்கிறது; சாப்பிடுகிறோம். உயிர் வாழ உணவு வேண்டும் என்று நம் எல்லாருக்கும் தெரியும். ஆனால் உணவுபற்றிய அபிப்பிராயங்களில் எவை சரி, எவை சரி அல்ல என்று உங்களுக்குத் தெரியுமா? இதோ சில அபிப்பிராயங்களையும் அவை சரியா, தவறா என்பதையும் 'வுமன்ஸ் ஹோம் கம்பானியன்' என்ற பத்திரிகையிலிருந்து எடுத்துத் தந்திருக்கிறோம்.

காலைச் சாப்பாடுதான் மிகவும் முக்கியம்.

உண்மைதான். காலையில் அரை குறையாகச் சாப்பிடுவதால் தேக ஆரோக்கியம் கெடும்; திறமை குறையும்; இல்லற வாழ்வும் ரச மற்றுப் போகும். இப்படி அவசரம் அவசரமாக வாயில் அள்ளிப் போட்டுக்கொண்டு போகிறவர்களுக்கு உடம்பில் சத்துக் குறைவு காரணமாகப் பதவித நோய்கள் உண்டாகும். இப்படிப்பட்டவர்கள் ஆபீஸ் வேலையில் அதிகமாகத் தப்பும் தவறும் செய்கிறார்கள்; மாணவர்களாக இருந்தால் படிப்பு விஷயத்தில் மட்டமாகத்தான் இருக்கிறார்கள். குடும்பங்களில் புருஷன் மனைவிகளுக்குள் சச்சரவு ஏற்படுவதற்கும் இந்தமாதிரி அரை குறையாகக் காலை வேளையில் சாப்பிடுவததான் காரணம் என்று சில நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

சூடச் சூடச் சாப்பிட்டால் உடம்பிலும் உஷ்ணம் பிறக்கும்.

தவறு. எல்லாம் நம் மனப் போக்கைப் பொறுத்திருக்கிறது. உணவிலுள்ள கலோரி என்ற உஷ்ண சக்திதான் உடம்புக்கு உஷ்ணம் தருகிறது. சோர்ந்திருக்கும் சமயத்தில் சுடச் சுடக் குழம்பு சாப்பிடுவதைவிட ஐஸ்-க்ரீம் சாப்பிட்டால்கூட உடம்பில் உஷ்ணம் பிறந்து தெம்பு ஏற்படும்.

வெயிற் காலத்தில் குறைவாகச் சாப்பிட வேண்டும்.

தவறு. எளிதில் ஜீரணமாகாத பண்டங்களைச் சாப்பிடாதிருப்பது நல்லதுதான். ஆனால் வெயிற் காலத்தில் உடற்பயிற்சியோ உழைப்போ அதிகமாக இருந்தால், நிறையச் சாப்பிடத்தான் வேண்டும்.

சில வகை உணவுகள் காம உணர்ச்சியைத் தூண்டும்.

தவறு. அப்படிப் பார்த்தால் எல்லா உணவுமேதான் இந்த உணர்ச்சியைத் தூண்டும் என்று சொல்லவேண்டும். எல்லா விதச்

சத்தும் பொருந்திய நல்ல உணவு உடலுக்குப் பல விதத்திலும் ஊக்கமளிப்பதுதான் இயல்பு. சத்தில்லாத உணவு சாப்பிட்டால் எதன் மேலும் வெறுப்புத்தான் தட்டும்.

ஒரு நாளைக்கு ஐந்து தரம் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது.

உண்மைதான். வழக்கமாக மூன்று தரம் சாப்பிடுகிறோம். இதோடு இடைவேளையில் இரண்டு தரம் சிற்றுண்டி சாப்பிட்டால் உடனே உடம்புக்குத் தெம்பும், வேலையில் சுறுசுறுப்பும் திறமையும் ஏற்படும்; இதனால் போஜன வேளையில் மிதமிஞ்சியும் சாப்பிடாமல் இருப்போம்.

அதிகமாகச் சாப்பிடச் சாப்பிட இன்னும் சாப்பிட வேண்டுமென்று தோன்றும்.

உண்மைதான். ஒரு நாள் நிறையச் சாப்பிட்டுவிட்டால் மறுநாள் இன்னும் அதிகமாகவே பசி எடுக்கும். அதிகச் சாப்பாடு காரணமாக வயிறு பருப்பதால்தான் பசியும் இப்படி அதிகரிக்கிறது. ஆகவே, அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடக் கூடாது. இப்படி ஓரளவுக்குச் சாப்பிட்டுப் பழகின பிற்பாடு, "அப்பா! முன்னே எப்படித்தான் அவ்வளவு சாப்பாடும் சாப்பிட்டோம்" என்று நமக்கே ஆச்சரியமாக இருக்கும்.

உடம்பு லேசாக இருக்கச் சாப்பாட்டைக் குறைப்பதைவிட உடற்பயிற்சியும் உழைப்புந்தான் சரி.

தவறு. ஒரு துண்டு ரொட்டியோ பிடி சோறோ ஜீரணமாக மாடிப்படி ஏறி இறங்கினாலும் சரி, இன்னும் ஏதாவது மந்தமான பண்டம் ஜீரணமாக ஒரு மணி நேரம் விறகு வெட்டினாலும் சரி இன்னும் அதிகப் பசிதான் எடுக்கும்.



சாப்பிடுவதற்குமுன் நம் சுபாவமே ஒருதினுசாகத்தான் இருக்கும்.

உண்மை. இது சகஜந்தான். யாரிடமாவது நமக்கு ஏதாவது தேவையாக இருந்தால் அவர் சாப்பிட்ட பிற்பாடுதான் நாம் அவரைப் போய்ப் பார்க்க வேண்டும். வியாபாரிகள், விளம்பர ஏஜெண்டுகள் இவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

சிறுவர்களைப் பொறுத்த வரையில் எவ்வளவு சாப்பிட்டாலும் அதிகம் என்று கொள்வதற்கில்லை.

உண்மைதான். 13 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அன்றாடம் 5,000 கலோரிகள் வேடிக்கை விளையாட்டில் செலவிடுகிறார்கள். இயற்கையாக அவர்கள் உடலுக்குத் தேவையான கலோரிகளைப்போல் இது மூன்று மடங்காகும். ஆகையால், அவர்கள் அதிகமாகச் சாப்பிட்டால் உடம்புக்கு ஆகாதே என்று கவலைப்பட வேண்டாம். அத்தனையும் இனிப்புப் பண்டமாக இராமல் பார்த்துக்கொண்டால் போதும்.

சோர்வை நீக்கும் சிறந்த ஔஷதம் உணவுதான்.

தவறு. சோர்வு காரணமாக

அகாலத்தில் பசி எடுக்கும். உடல் ஓய்ந்து போகும்போது அதிகமாகச் சாப்பிடக் கூடாது. அதனால் உணவு சரியாக ஜீரணமாகாமல் வயிற்றுக் கோளாறுதான் ஏற்படும்.

உணவுக்கு முன் தூங்குவதை விடப் பின்னால் தூங்குவதுதான் நல்லது.

தவறு. உணவுக்கு முன்னால் படுத்துத் தூங்கினால் சோர்வு நீங்கித் தெம்பு ஏற்படும். உணவுக்குப் பின் படுத்துத் தூங்கும்போது வயிற்றுப் பாகத்துக்கு வேலை

இராததால் உணவு எளிதில் ஜீரணமாவதில்லை. ஆகவே, உணவுக்குப் பின் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். நிமிர்ந்து இருக்கும் போதுதான் வயிற்றிலுள்ள ஜீரண உறுப்புக்கள் நன்றாக வேலை செய்யும்.

அதிகப் பருமனாக இருக்கும் பேர்வழிகள், உணவு விஷயத்தில் தாங்கள் சொல்வது போலவே செய்து வருவார்களானால், நிச்சயமாக ஒல்லியாகத்தான் இருப்பார்கள்.

உண்மைதான். இவர்கள், 'நாங்கள் என்ன, பட்சி கொறிக்கிற மாதிரி ஏதோ சாப்பிடுகிறோம்' என்கிறார்களே யொழிய அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை. சமீபத்தில் இந்த மாதிரி பேர்வழிகள் சிலருக்கு இவர்கள் சொல்லுவது போலவே உணவு அளித்துப் பரிசோதித்துப் பார்த்ததில் நாள் ஒன்றுக்கு ஐந்து பவுண்டு குறைய ஆரம்பித்தார்கள்.

படுக்கப் போகும்போது சிற்றுண்டி சாப்பிட்டாலும் நன்றாகத் தூக்கம் வராது.

இது தவறு. ஏதோ இரண்டு கொறித்தாலோ ஒரு கோப்பை பால் சாப்பிட்டாலோ ஒன்றும் கெடுதல் இல்லை. இன்னும் கேட்டால் நல்ல தூக்கங்கூட வரும். அப்போது மூளை ஓய்வு பெற்று அங்கிருக்கும் ரத்தம் ஜீரண உறுப்புக்களுக்குப் பரவுகிறது. மிதமிஞ்சிய உணவோ பிசுக்குள்ள உணவோ சாப்பிட்டால் தான் ஜீரணக் கோளாறு ஏற்படும்.

ஒரு யுக்தி

எங்கள் அண்டை வீட்டுக் குழந்தை டாமி இங்கே வந்தால் போதும்; வீடே அமர்க்களப்படும். திரும்பி வீட்டுக்கே போகாது. 'குழந்தையாயிற்றே; கோபித்துக்கொள்ளக் கூடாது' என்றுதான் சும்மா இருப்பேன். அப்புறம் ஒரு யுக்தி தோன்றிற்று; "டாமி! நீ வீட்டுக்குப் போகும் போது சொல்; ஒரு சின்னப் பொட்டலம் தருகிறேன்" என்று சொல்ல ஆரம்பித்தேன். ஐந்து நிமிஷத்துக்கு மேல் குழந்தைக்கு இங்கே இருப்புக் கொள்வதில்லை; அந்த மிட்டாய்ப் பொட்டலத்தை வாங்கிக்கொண்டு உடனே வீட்டுக்குப் போய்விடுகிறது அந்தக் குழந்தை. —'ரோடேரியன்'

மகான் தியாகையர் தம் கீர்த்தனையில்
துதித்திருக்கும் அந்தக் கடவுள்தான் –

கோவூர் அழகன்

எம். கே. ரங்கஸ்வாமி ஐயங்கார்

செங்கற்பட்டு ஜில்லாவில் செழிப்பான ஒரு கிராமத்துக்குப் போயிருந்தார், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். அங்கிருந்த கோயிலும் ஸ்வாமி சந்நிதியும் அவருக்கு மிகவும் பிடித்திருந்தன. ஒரு வார காலத்துக்குமேல் அங்கே தங்கிக் 'கோவூர்ப் பஞ்சரத்னம்' என்ற கீர்த்தனைகளைப் பாடினார்.

அவர் ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், திருப்பதி முதலிய பிரபல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டே வரும்போது, கோவூரைச்சேர்ந்த சுந்தரேச முதலியார் என்ற மிராசுதார் இங்கேயும் வந்து போகும்படி அவரைக் கேட்டுக் கொண்டார். அப்போதுதான் கோவூர்ச் சுந்தரேசுவரரையும் சுந்தரநாயகியையும் ஸ்வாமிகள் தரிசித்து மகிழ்ந்தார்.

பந்துவராளி ராகத்தில் 'சம்போ மகாதேவ' என்ற ஸம்ஸ்கிருதத் தொடர்கள் நிறைந்த அழகிய கீர்த்தனையில் சுந்தரேசுவரரின் அபார குணங்களை விவரித்து அருமையாகப் பாடியருளினார். பிறகு கல்யாணி ராகத்தில் 'நம்மி வச்சின' (நம்பி வந்த என்னைக் காத்தருள்வாய்) என்று ஒரு கீர்த்தனை பாடினார். சுந்தரேசுவரரின் அழகும் அருளும் அவரை அப்படியே மன முருகும்படி செய்துவிட்டன. சங்கராபரண ராகத்தில் 'சுந்தரேசுவருனு ஜூசி' (இரண்டாவது காசி என விளங்கும் கோவூரிலுள்ள சுந்தரேசுவரரைக் கண்ட பின் பிற கடவுளையும் வணங்குவரோ?) என்ற அருமையான கீர்த்தனையைப் பாடியருளினார். ஸஹானா ராகத்தில் அமைந்த 'ஈ வஸுதா நீவண்டி தைவமு' என்ற கீர்த்தனையில், "உன்னைப் போல் ஒரு தெய்வம் இந்த உலகெங்குமே கண்டு தொழுததில்லை. உன்னை நம்பிக் கணநேரம் இங்கே வந்து தங்கினாலும் நீ அறிவும் செல்வ



கோயில் விமானத்தின் தோற்றம்

காப்பிரைட்: ஹிந்து (ஆங்கிலம்), சென்னை.



கோயில் துவஜஸ்தம்பம்

மும் அழியாப்புகழும் தந்து அருள் புரிகிறாய்; கோவூரில் வாழும் சுந்தரேசா, கிரீசா!'' எனறு துதித்திருக்கிறார்.

'கோரி ஸேவிம்ப ராரே' என்ற கரகரப்பிரியைக் கீர்த்தனையில் தம்முடனே சேர்ந்து எல்லாருமே சுந்தரேசுவரரைத் தொழுது செல்லும்படி கோருகிறார்.

மனமுருக்கும் இந்தக் கீர்த்தனைகளைப் பலமுறை கேட்டுக் கேட்டு எனக்கும் அந்த ஸ்தலத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று வெகு நாளாக ஆவல். ஆனால் எவ்வளவு விசாரித்தும் பல நாள்வரை இது எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. சில சங்கீத வித்துவான்களைக் கேட்டுப் பார்த்தேன். அவர்களுக்கும் இதன் அருமை பெருமை தெரியவில்லை. கடைசியில் பறங்கிமலையிலிருந்து ஆறு மைல் தூரத்திலுள்ள குன்றத்தூர் வழியில் இது இருப்பதாகத் தெரிந்தது. சிரமம் வீண் போகவில்லை. மனசுக்குத் திருப்தியளிக்கும் ரம்மியமான ஊர். கோயில் சின்னதாக இருந்தாலும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருந்தது. தியாகராஜஸ்வாமிகள் வருணித்தபடியே கண்ணுக்கும் கருத்துக்கும் இனியவராகவே இருக்கிறார் சுந்தரேசுவரர். பசசைப் பசேல் என்று நெற் பயிரும் வெற்றிலைத் தோட்டமும் செழித்து விளங்கும் இந்தக் கோவூரைப் பார்த்தால், எங்கோ தஞ்சாவூரிலோ கோதாவரிப் பிரதேசத்திலோ இருப்பதுபோல் தோன்றுகிறது. பக்கத்திலே செம்பரம்பாக்கம் ஏரிப் பாசன வசதி இருப்பதுதான் இதற்குக் காரணம். இது செங்கற்பட்டு ஜில்லாவுக்குள்ளேயே சிறந்த கிராமம் என்று பெயர் எடுத்தது. இங்கே ஒரு பஞ்சாயத்து போர்டும், உயர்தரப் பாடசாலை ஒன்றும், கிராம வைத்தியசாலையும் குழந்தைப் பராமரிப்பு நிலையமும் இருக்கின்றன. கோவூரிலும் இதைச் சுற்றியும் குழாய்க் கிணறுகள் ஆழமாகத் தோண்டியிருப்பதால் கோடையிலும் இங்கே பயிர்கள் பச்சைப் பசேல் என்று செழித்துக் காட்சியளிக்கின்றன. சுந்தரேசுவரரின் கோயில் ஊருக்கு நடுமத்தியில் அமைந்திருக்கிறது. சந்நிதித் தெரு விசாலமாக 60 அடி அகலத்துக்கு இருக்கும். இரண்டு பக்கமும் சத்திரங்கள். இப்போது கோயில் சிப்பந்திகள் இங்கே வசிக்கிறார்கள்.

இந்தக் கோயில் சமீபத்தில் கட்டினதாக இருக்கும் என்று பலபேர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கர்ப்பக் கிருகத்திலும் அதைச் சுற்றியும் உள்ள கல்வெட்டுக்களைக் கவனித்தால் முதல் ராஜராஜ சோழனின் தந்தையான சுந்தர சோழன் காலத்திலேயே

இது இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆதியில் ஸ்வாமி பெயர் திருமேனீசுவரர் என்றும் தெரிகிறது. சென்னை மியூஸியத்தில் ஒரு பட்டயம் இருக்கிறது. அதில் கோவூர்க் கோயிலில் நந்தாவிளக்குக்காகக் கி. பி. 1880-இல் வைதிகப்பிராம்மணர் ஒருவர் தர்மம் அளித்திருக்கும் விவரத்தைக் காணலாம்.

முன் காலத்தில் சோழ மன்னர்கள் கோடையில் இங்கே வந்து குடும்பத்துடன் தங்கினார்கள் என்று தெரிகிறது. ஸ்வாமியைச் சோமசுந்தரேசுவரர் என்றும் அழைக்கிறார்கள். சோமாஸ்கந்த மூர்த்தியே உற்சவ விக்கிரகமாகக் காட்சியளிக்கிறது. கோயிலின் மேல்விமானம் மகாபலிபுரத்திலுள்ள சகாதேவ ரதம்போல் 'கஜப்பிருஷ்ட' (யானையின் பின்புற) உருவில் அமைந்திருக்கிறது. ஆகவே, பிற்காலப் பல்லவர் அல்லது முந்தியச் சோழர் யாரோ இதைக் கட்டியிருக்கவேண்டும். வட திருமுல்லைவாயிலைப் போலவே இதுவும் அமைந்திருக்கிறது. இந்தக் கோயில் கர்ப்பக்கிருகத்தின் மேற்குப் பக்கச் சுவரிலும் மற்றச் சோழர் கோயில்களில் உள்ளதுபோல் லிங்கோத்பவ மூர்த்தியைக் காணலாம்.

பிராகாரத்தைச் சுற்றியுள்ள அறைகளில் பல அழகான வாகனங்கள் இருக்கின்றன. கோயிலுக்குக் கிழக்கே ஒரு குளமும், மேற்கே ஒரு நந்தவனமும் இருக்கின்றன. பருவ மழை தப்பியதால் குளம் வற்றி, நந்தவனமும் சீர் கெட்டுக் கிடக்கிறது.

சென்னை - குன்றத்தூர் பஸ் மார்க்கத்தில் இருக்கிறது இந்த ஊர். கோடையில் பிற்பகல் புறப்பட்டுப் போனால் இரவு இங்கே தங்கி மறு நாள் காலை திரும்பிவிடலாம். இதற்கு அருகிலுள்ள குன்றத்தூரில்தான் சேக்கிழார் அவதரித்தார். அங்கேயும் ஒரு குன்றின்மேல் கோயிலும் பல விசேஷங்களும் உண்டு.

காணாத காட்சி

டர்னர் என்ற ஓவியர், பலவித வர்ணங்கள் ஜொலிக்கும் அற்புதமான சூரியாஸ்தமனக் காட்சி ஒன்றைச் சித்திரம் தீட்டியிருந்தார்.

"கலைஞரே, இந்தமாதிரி வர்ணங்களைச் சூரியாஸ்தமனத்தில் ஒரு போதும் நான் கண்டதில்லையே!" என்றாள் ஒரு சீமாட்டி.

தட்சணமே, "அம்மா, நீங்கள் கண்டிருக்க வேண்டாம். காண உங்களுக்கு ஆசையாக இல்லையா?" என்று பதிலளித்தார் கலைஞர்.

—'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

விதவைகள் உரிமை

அமெரிக்க ஜனாதிபதிகளின் மனைவிகளான விதவைகள், தபால் தலை ஒட்டாமல் காகிதம் எழுதிப் போட உரிமை உடையவர்கள்.

—பால் ஸ்டினர்.

மலையாளத்தில் மட்டுமல்ல; தென் கன்னடத்திலும் சில பகுதிகளில் வழங்குகிறது—

மருமக்கள் தாயம்

ஸ்ரீரங்கராவ் தலைச்சேரிகர்

எங்கேயாவது கேட்டிருக்கிறீர்களா? தந்தையின் ஆஸ்தியில் மக்களுக்கு உரிமை இல்லை. மருமக்களுக்கே உரிமை உண்டு. மனைவியும் மக்களும் கணவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. கல்யாணம் ஆன ஒரே காரணத்தை மட்டும் கொண்டு விவாகரத்துப் பெறலாம். தென் கன்னடத்தின் மருமக்கள் தாயக் கட்டுப்பாடு இது.

பாரக்கூரில் தேவபாண்டியன் என்னும் வர்த்தகன் பல படகுகளைக் கட்டினான். அவைகளைக் கடலில் வெள்ளோட்டம் விட்ட போது ஒரு படகுகூட முன்னேறவில்லை. கடலில் குண்டோதரன் என்னும் பூதம் இருந்துகொண்டு படகுகள் முன்னேறவொட்டாமல் தடுத்தது. நரபலி கொடுத்தாலொழியப் பூதம் படகுகளைப் போக விடாதென்று தெரிந்தது. நல்ல குணமுடைய தேவபாண்டியன் தன் சொந்த லாபத்துக்காகப் பிறர் மக்களைப் பலி கொடுக்க இஷ்டப்படவில்லை. தன் பிள்ளைகளில் ஒருவனையே பலிகொடுக்க உத்தேசித்தான். கணவனுடைய எண்ணத்தை அறிந்த அவன் மனைவி, பிள்ளையைப் பலி கொடுக்க இசையவில்லை. தன் மக்களெல்லோரையும் அழைத்துக்கொண்டு பிறந்த வீட்டுக்குப் போய்விட்டாள்.

இதைக் கண்ட தேவபாண்டியன் கவலையில் மூழ்கினான். அவனுக்குச் சத்தியவதி என்ற தங்கை ஒருத்தி இருந்தாள். அவள் தமையனுடைய கவலையின் காரணத்தைத் தெரிந்துகொண்டாள். குண்டோதரப் பூதத்துக்குத் தன் மகனைப் பலி கொடுக்க முன்வந்தாள்.

பூதம் தனக்குப் பலியாக வந்த சிறுவனைப் பார்வையிட்டது. அவனிடம் ராஜலட்சணங்கள் இருந்தனவாம். அதனால் அவனை ஏற்றுக்கொள்ள அது ஒப்பவில்லை. நரபலி இல்லாமலேயே படகுகளை விடச் சம்மதித்தது.

வெகுதூரம் சென்ற படகுகள் விலை மதிப்பற்ற பல பொருள்களைச் சம்பாதித்துக்கொண்டு பாரக்கூர்த் துறைமுகத்துக்குத் திரும்பின. மறுபடியும் நரபலி கொடுக்க வேண்டியிருக்குமோ என்று வர்த்தகன் மனைவி பயந்தாள். படகேறி வந்த சொத்துக்களில் தனக்கும் தன் மக்களுக்கும் எந்த வித உரிமையும் வேண்டாமென்று சொல்லிவிட்டாள். மறுதினம் தாயின் வீட்டுக்குப் போய்விட்டாள்.

பிறகு குண்டோதரனின் உத்தரவுப்படி வர்த்தகன் தன் மருமகனுக்குப் பூதாளப் பாண்டி

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்; தீபாவளி மலர், 1952), ஹுப்ளி.

யன் என்று பெயர் வைத்தான். பாரக்கூரிலிருந்த விக்கிரமாதித்தன் சிம்மாதனத்தில் அவனை உட்காரவைத்துப் பட்டாபிஷேகமும் செய்வித்தான். பூதத்தின் ஆக்ஞைப்படி அன்றுமுதல் தன் ராஜ்யத்தில் மருமக்கள் தாயத்தை ஏற்படுத்தினான் பூதாளப் பாண்டியன்.

இந்த முறையே குடிகளுக்குள்ளும் அமலுக்கு வந்தது. பாரக்கூரில் இருக்கும் அனந்தேசுவரர் கோயில் மண்டபச் சுவரில் இந்தச் செய்தியை அவன்தான் பொறித்து வைத்தான் என்கிறார்கள்.

தென் கன்னடம் அல்லது மங்களூர் ஜில்லாவுக்குத் துளு நாடு என்பது சரித்திரப் பெயர். இங்கே இருக்கும் பிராம்மணர்களையும் குடியேறிய சிலரையும் தவிர மற்ற ஜாதியாரிடையே உள்ள மருமக்கள் தாயத்துக்கு ஆதாரமாக இந்தக் கதை வழங்குகிறது.

இந்தப் பூதாளப் பாண்டியன் உண்மையிலேயே இருந்தானா கற்பனை மனிதனா என்பதை அறிய முடியவில்லை. எப்படி இருந்தாலும் சொந்த மக்களை ஒதுக்கிவிட்டு மருமக்களையே வாரிசாக ஏற்றுக்கொள்ளும் புரட்சி சாதாரணமாக ஏற்பட்டிருக்க முடியாது. நிச்சயமாக ஓர் அரசனுடைய ஆணையால் தான் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்த முறை அபூர்வமாகச் சில பூர்வகுடிகளிடம் இருப்பதாகச் சமூக சாஸ்திர அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் நாகரிகம் அடைந்த எந்த ஜாதியாரிடமும் இந்த முறை இருப்பதாகத் தெரியவில்லை. மலையாளத்திலும் தென் கன்னடத்திலும் மட்டுமே இருக்கிறது. மலையாளத்திலாவது சமூகக் கட்டுப்பாடு மற்றச் சமூகங்களிலிருந்து வேறுபட்டு மருமக்கள் தாயத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. ஆனால் தென் கன்னடம் ஜில்லாவின் சமூகக் கட்டுப்பாடுகள் மற்றக் கன்னட ஜில்லாக்களின் கட்டுப்பாடுகளுக்கு மாறுபடவில்லை. மருமக்கள் தாயம் ஒன்றுதான் மாறுபட்டிருக்கிறது.

துளு பாஷை பேசும் தென் கன்னடத்தின் தென்பகுதியில் மட்டுமன்றி, கன்னடம் பேசும் வடபகுதியிலும் இந்த முறை அமலில் இருக்கிறது.

மருமக்கள் தாய முறையில் ஒருவனுடைய குடும்பம் என்றால் அவனுடைய சகோதரிகளும் அவர்கள் மக்களும் என்று அர்த்தம்.

இப்படி இயற்கைக்கு மாறுபட்ட முறையில் அன்பு செலுத்தும்படி மருமக்கள் தாயத்தில் ஒரு கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

சமீபகாலம் வரையில் மலையாளத்தில் மனைவி தன் பிறந்த வீட்டில் இருப்பதும் கணவன் அங்கே அவளிடம் போய்வருவதும் வழக்கமாக இருந்தன.

மங்களூர் ஜில்லாவில் மனைவி கணவன் வீட்டிலேயே இருப்பாள். குழந்தைகள் சிறு வயதில் அங்கேயே வளருகிறார்கள். கணவன் இறந்தால் மனைவியும் மக்களுமே 10 நாள் தீட்டுக் காக்க வேண்டும். குழந்தைகள் பிறந்த தீட்டையே சகோதர சகோதரிகள் முதலிய மற்றவர்கள் காக்க வேண்டுமென்ற விதி வழக்கத்தில் இருக்கிறது.

மருமக்கள் தாய முறைப்படி குடும்பத்தலைவனுடைய சொத்து மனைவி மக்களைச் சேருவதில்லை என்பதனால் அவனுடைய கருமாதிகள் நடந்த பிறகு மருமக்களெல்

லாரும் அவன் சொத்தைக் கைவசப் படுத்திக்கொண்டு அவன் மனைவி மக்களை வீட்டை விட்டுத் துரத்தி விடலாம்; ஆகவே, இவர்களைக் காப்பது அவள் சகோதரர் பொறுப்பு.

நமது விவாக முறைக்கும் இவர்கள் விவாக முறைக்கும் வித்தியாசம் இருக்கிறது. கல்யாணத்தில் தாரை வார்க்கும் வழக்கம் இவர்களிடம் இல்லை. கணவனையும் மனைவியையும் ஒன்றுபடுத்துவதே தாரை வார்ப்பதன் நோக்கம். இங்கே இவர்கள் வேறு குடும்பத்தாராகவே இருந்து விடுவதால் இந்த வழக்கத்தை இவர்கள் மேற்கொள்ளவில்லை. ஆனால், "தாரை ஏறுவது" என்ற ஒரு முறையை இவர்கள் அநுசரிக்கிறார்கள். மணமகன், மணமகள் இவர்களின் வலக் கைகளை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து, மங்கலநீர் நிறைந்த குடத்தை அந்தக் கைகளின்மேல் வைப்பார்கள். இது முதல் கல்யாணத்தில் மட்டுந்தான்.

விவாக ரத்துக்குப் பின் நடக்கும் இரண்டாவது மூன்றாவது கல்யாணங்களுக்கு இது அவசியமில்லை.

இன்ன உறவினரை மணந்து கொள்ளலாம், இன்ன உறவினரை மணந்துகொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாடு இவர்களுக்கும் உண்டு.

விவாக ரத்து விஷயத்தில் இவர்கள் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். மேல்நாடுகளில்கூட இதற்குத் தகுந்த காரணம் காட்டவேண்டும். இவர்களில் விவாகரத்துச் செய்து கொள்வது சட்டையைக் கழற்றுவதுபோல. 1883-ஆம் வருஷத்தில் சென்னை ஹைகோர்ட்டில் மருமக்கள் தாய மணம் சட்டத்துக்குக் கட்டுப்படாத வெறும் ஆண் பெண் சம்பந்தம் என்று சொல்லிவிட்டார்கள்.

இந்த உத்தரவுக்குப் பிறகு இவர்கள் விவாகரத்து வேண்டுமென்று கோர்ட்டுக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும். காரணம் காட்ட வேண்டியதில்லை. கல்யாணம் ஆகியிருப்பது உண்மையென்றால் விவாகரத்து நிச்சயமாகக் கிடைத்துவிடும்.

இவர்களில் வயதில் மூத்தவர்கள் ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி, குடும்பத் தலைவர் ஆகிவிடலாம். ஹிந்து மதத்தில் வேறு எந்தச் சமூகத்திலும் இல்லாத ஆண் பெண் சம உரிமை இவர்களிடம் ஆதியிலிருந்தே இருக்கிறது. குடும்பத்தின் வேறு நபர்களுக்குச் சாப்பாட்டுக்கும் துணிக்கும் மட்டுமே உரிமை உண்டு. அதிகப்படிச் சொத்துரிமை எல்லாம் குடும்பத் தலைவருக்குத்தான். குடும்பத் தலைவன் சொத்தைச் சரியாக ஆளாவிட்டால் கோர்ட்டின் மூலமாகத்தான் அவன் உரிமையை நீக்க முடியும்; வேறு வழி இல்லை.

இந்தக் குடும்பத்தில் சந்ததி இல்லாவிட்டால் குடும்பத் தலைவன் எல்லோருடைய சம்மதத்தையும் பெற்று ஒரு பெண்ணைத் தத்தெடுத்துக் கொள்ளலாம். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் பல குடும்பத் தலைவர்கள் கூடி அதே ஜாதியைச் சேர்ந்த ஒரு பையனையும் பெண்ணையும் தேர்ந்தெடுத்து இவர்களுக்கு அண்ணன் தங்கை முறை வைத்து இவர்களை அந்தக் குடும்ப வாரிசாக்கிவிடுவார்கள்.

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞான மெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கை யால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

காவியகண்டர் பெற்ற அருள்: அண்ணாமலையில் ஞானத்தேசு பொலிய அநுபவம் பொங்கித் ததும்ப அமர்ந்திருந்த துறவரச ரின் முன்னே நின்ற காவிய கண்ட கணபதி சாஸ்திரியார் அனல் முன் மெழுகுபோல உருகி னார். "புணர்ந்த பாவமெல்லாம் பரி பூரணம் உணர்ந்த ஞானி விழிபட ஓடுமே" என்று பெரியோர் கூறு வர். ஞானப்பிரானுடைய திரு முன் நின்றபோது காவிய கண்ட ருக்கு ஒரு தனி அநுபவம் ஏற்பட் டது. புறத்தே மழை பெய்ததனால் ஏற்பட்ட குளிரால் உடல் நடுங்கும் ஒருவன் நெருப்பின் அருகிலே நின்றால், அதன் கதகதப்பு உடம் புக்கு எவ்வளவு இனிமையாக இருக்கும்? அப்படி ஏதோ ஓர் அநுபவம் அவருக்கு ஏற்பட்டது. பெருமானுடைய காலில் விழுந்து எழுந்தார். ஞானமூர்த்தி பேச வில்லை. தம்முடைய திருவிழிகளை அகல விரித்துக் கணபதி முனி வரைப் பார்த்தார். கல்வி கேள்வி களிலே வல்ல முனிவருக்குச் சாஸ் திரங்களில் ஐயம் உண்டாக வில்லை. அவரே பலருக்கு அத் தகைய ஐயங்களைப் போக்கும் ஆற்றல் பெற்றவர். ஆகவே, வார்த்தைகளால் வராத, சொல் வதற்கு அப்பால் உள்ள உணர்ச்சி ஒன்று அவருக்கு உண்டாயிற்று. அப்போதுதான், "நாம் அநுபவம் என்னும் தேன் குடத்தை அணுகி விட்டோம்" என்ற எண்ணம் கண பதி முனிவருக்கு உண்டாயிற்று. அது முதல் அவர் இந்த ஞானியை அடிக்கடி வந்து தரிசித்துச் சென்றார்.

ஒரு முறை காவியகண்ட கண பதி சாஸ்திரிகள் தலயாத்திரை செய்து வருகையில் திருவொற்றி யூருக்கு வந்தார். அங்கே கணபதி கோயிலில் பன்னிரண்டு நாட்கள் மௌனமாக இருந்தார். பன்னி ரண்டாவது நாள் விழித்துக் கொண்டே படுத்திருந்தார். அப் போது திருவருணை ஞானச்செல்வர் அருகில் அமர்ந்திருந்தது போன்ற

தோற்றம் ஏற்பட்டது. உடனே கணபதி சாஸ்திரிகள் எழுந்திருக்கலானார். அருகில் அமர்ந்திருந்த உருவம் தன் கையினால் அவருடைய தலையைப் பிடித்து அமிழ்த்துவதுபோல இருந்தது. ஆகவே, எழுந்திருக்கவில்லை. அந்த ஸ்பரிசத்தினால் அவர் தம்முடைய உடம்புக்குள் ஏதோ சக்தி புகுவதாக உணர்ந்தார். இந்த அநுபவம் அவருக்கு விளங்காத புதிராக இருந்தது.

அருணையில் இருந்த ஞானச் செல்வர் திருவொற்றியூருக்கு வரவேயில்லை. முன்பும் வந்ததில்லை; பின்பும் வந்ததில்லை. ஆனால் தாம் விரதம் இருந்த கடைசி நாளில் அந்தப் பெருமானுடைய ஹஸ்ததீக்ஷை கிடைத்ததனால் தாம் பெற்ற அநுபவத்தைக் கணபதி முனிவர் நினைந்து நினைந்து இன்புற்றார்.

இதுபற்றிப் பிற்காலத்தில் அருணை ஞானச் செல்வர் கூறியது வருமாறு:

"ஒரு நாள் படுத்துக்கொண்டு இருந்தது; சமாதி இல்லை. திடீரென்று சரீரம் மேலே கொண்டு செல்லப்பட்டது. உடனே சுற்றிலும் உள்ள பொருள்கள் மறைந்து ஒரு வெள்ளொளி சூழ்ந்தது. பிறகு சரீரம் ஓரிடத்தில் இறங்கியதும் பொருள்கள் புலப்பட்டன. திருவொற்றியூரில் இருப்பதாக எண்ணம் உதித்தது. ஒரு பெரிய ரஸ்தாவைப் பின்பற்றிச் செல்கையில் ஒரு பக்கத்தில் கொஞ்ச தூரம் தள்ளி ஒரு கணபதிகோயிலைக் கண்டதும், உள்ளே சென்றது. அங்கே பேசியதுண்டு; ஆனால், என்ன பேசியது, செய்தது என்பது நினைப்பில் இல்லை. திடீரென்று விழித்தபோது விரூபாக்ஷ குகை



யிற் படுத்திருந்தது. கூடவே இருக்கும் பழனி ஸ்வாமியிடம் நடந்ததைச் சொன்னது. இப்படித்தான் சித்தர்களும் உலாவுவார்களென்று தெரிந்தது."

இத்தகைய நிகழ்ச்சிகள் காரண காரியங் கடந்த திருவருளால் நிகழ்பவை. காவியகண்ட கணபதி சாஸ்திரிகள் இதைப்பற்றிச் சொன்னதோடு, வாய்மையன்றிப் பொய்யறியா வள்ளலாகிய ரமண பகவானும் சொல்லியிருக்கிறார். இந்த அற்புத நிகழ்ச்சி அநுபவித்தவர்களுக்குத் தெரியுமேயன்றி மற்றவர்களுக்கு எளிதில் நம்பத் தோன்றாது. ஆயினும் உண்மை உண்மைதானே?

காவியகண்டர் திருவண்ணாமலைக்கு ஓடி வந்தார். தம்முடைய இன்ப அநுபவத்தை எடுத்துச் சொல்லிக் கண்ணீர் ஆறாகப் பெருக விழுந்து பணிந்தார்.

அநுபவ ஞானியாகிய வேங்கட ரமணர் சில சொற்களால் அவருடைய சந்தேகங்களைப் போக்கினார். அது முதல் கணபதி முனிவர் புதிய நிலை பெற்றார். தம்மை ஆட்கொண்ட பெரியாரை ரமண மகரிஷிகள் என்றும், பகவான் என்றும் சொல்லித் துதித்தார். மற்றவர்களும் அப்படியே வழங்கத் தொடங்கினார்கள். (வாழ்வு)

நான் யார்?: நான், நான் என்று சொல்லி நாம் உலகில் தொழில் செய்கிறோம். எல்லாத் தொழிலும், எல்லா இயல்பும் அந்த 'நான்' என்பதோடு ஒட்டியே வருகின்றன. ஆகையால் அந்த நான் என்பது எதைச் சுட்டுகிறது என்று ஆராயவேண்டும். நான் ஆர் என்கிற விசாரணையில் இறங்க வேண்டும். இந்த ஆராய்ச்சியையே ஆத்ம விசாரம் என்று சொல்வார்கள். சாஸ்திரங்களைப் படித்து அவற்றில் உள்ளவற்றைப்பற்றி வாதங்களை எழுப்பி ஆராய்ச்சி செய்வது ஆத்மவிசாரம் என்று சிலர் நினைக்கிறார்கள். அந்த ஆராய்ச்சிகள் ஆத்மவிசாரம் ஆகா. நான் என்ற உணர்வு எந்த இடத்தில் உதிக்கிறதோ அதைத் தேடிச் செல்ல வேண்டும். ஆத்மாவுக்கு வேறாகத் தோற்றி நின்ற அந்த நான் என்பது ஆராய்ச்சி செய்யச் செய்ய ஆத்மாவில் வந்து அடங்கும். எப்போது 'நான் ஆர்' என்ற ஆராய்ச்சியில், 'ஆத்மாவே நான்' என்ற விடை கிடைக்கிறதோ அப்போது சத்தியஸ்வரூபமான ஆத்மா ஒன்றே எங்கும் நிறைந்ததாய் மிகுந்திருக்கும். இப்படி ஆத்ம விசாரம் செய்வதனால் என்ன பயன்?] எந்தவிதமான சுகதுக்கங்களும் என்னை ஒன்றும் செய்வதில்லை என்ற உறுதியான பாவம் வந்துவிடும். இந்த நிலையைவிட உயர்ந்த பயன் வேறு என்ன இருக்கிறது? (வாக்கு)

அவர் போட்ட திட்டம்

தாமஸ் எடிஸன் கிராமபோன், அசையும் படம் முதலிய அற்புதங்களையெல்லாம் கண்டுபிடித்த அமெரிக்க மேதை. அவருடைய 55-ஆம் பிறந்த தினத்தை உத்தேசித்துப் பல பிரமுகர்கள் ஒரு விருந்துபசாரம் நடத்தினார்கள். அப்போது, "இனிமேல் என்ன செய்யப்போவதாக உத்தேசம்?" என்று கேட்டார்கள்.

"75 வயது வரைக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பேன். அப்புறம் பிரிட்ஜ் ஆட்டம் ஆடக் கற்றுக்கொள்ளப் போகிறேன். 80-ஆம் வயதில் பெண் பிள்ளைகளோடு ஏதாவது வம்பளந்து கொண்டிருப்பேன். 85 வயதில் கோல்ஃப் விளையாடக் கற்றுக்கொள்ளப்போகிறேன்."

"90 வயதில்?"

எடிஸன் ஒரு விதமாகத் தலையை அசைத்து, "30 வருஷத்துக்கு அப்புறம் நடக்கப் போகிற விஷயங்களைப் பற்றியெல்லாம் நான் திட்டமிட்டுக்கொண்டிருப்பதில்லை" என்றார்.

—ஈ. ஈ. எட்கார்

பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டி

★

1

1. **அமீர் எலாஹி:** இவருக்கு வயது 40 ஆகியும் வலது கையால் பந்தெறிவதில் இன்னும் சிறந்து விளங்குகிறார். 1936-இல் இந்தியாவின் சார்பாக இங்கிலாந்திலும் 1947-இல் ஆஸ்திரேலியாவிலும் ஆடிக் கீர்த்தி பெற்றார். வட இந்தியக் கிரிக்கெட் சங்கம், தென் பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் இவைகளின் சார்பாக ரஞ்சி ட்ரோஃபி பந்தயத்தில் கலந்துகொண்டிருக்கிறார். பம்பாய் பெண்டாங்குலர் ஆட்டத்திலும் ஆடியிருக்கிறார்.

2

2. **கலீத் குரேஷி:** இடது கையால் விடாமல் நிதானமாகப் பந்தெறியும் ஆற்றல் உள்ளவர். அளவு தவறாமல் பந்தை வீசுவார். இவரை இங்கிலாந்திலுள்ள ஆல்ஃப் கவர் கிரிக்கெட் டள்ளிக்கூடத்தில் பயிற்சி பெற அனுப்பியிருந்தார்கள்.

3

3. **ஃபஸல் மகமூது:** பந்தெறிவதில் திறமையுள்ளவர். லாகூர் இஸ்லாமியா காலேஜ், மம்தோத் கிளப், பஞ்சாப் சர்வகலாசாலை, வட இந்தியக் கிரிக்கெட் சங்கம் இவைகளின் சார்பாக விளையாடியிருக்கிறார். இவர் 1927 பிப்ரவரியில் பிறந்தார்.



4

4. **அன்வர் ஹுஸேன்:** பந்தெறிவது, பந்தை அடிப்பது முதலிய எல்லாவற்றிலும் திறமைசாலி. பாகிஸ்தான் பிரிவினைக்குமுன் பம்பாய் பெண்டாங்குலர், ரஞ்சி ட்ரோஃபி, பிரதேச டோர்னமெண்ட் இவைகளில் பல வருஷம் கலந்துகொண்டிருக்கிறார். பாகிஸ்தான் கோஷ்டியின் உபதலைவராக இருக்கிறார். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்

காப்பிரைட், ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்

இந்தியாவுக்கு வந்திருக்கும் இந்தக் கோஷ்டியார் இதுவரை டில்லி, லக்னௌ இந்த இரண்டு ஊர்களிலும் நம் நாட்டுக் கிரிக்கெட் கோஷ்டியாருடன் விளையாடி நல்ல பெயர் எடுத்திருக்கிறார்கள். இவர்கள் வரலாற்றுச் சுருக்கத்தை இதில் காணலாம்.

அங்கே சிந்து மாகாணத்தின் சார்பில் விளையாடி வந்தார். பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியில் சேர்ந்து இலங்கைக்குப் போய்வந்தார். கராச்சியில் சென்ற வருஷம் நடந்த டெஸ்ட் மாட்சில் பாகிஸ்தானின் வெற்றிக்குக் கர்தாருடன் இவரையும் பாராட்ட வேண்டும். வலது கையால் பந்தெறிவதில் பெயர் எடுத்தவர்.

5



5. **கான் மகம்மது:** மிக வேகமாக வலது கையால் பந்தெறிவதில் கெட்டிக்காரர். இவர் லாகூர் இஸ்லாமியா காலேஜ், யூனிவர்ஸல் கிளப், வட இந்தியக் கிரிக்கெட் சங்கம் இவைகளின் சார்பாக ஆடியிருக்கிறார். வெகுதூரம் கிரிக்கெட் விளையாட்டில் அபிவிருத்தி அடைந்திருக்கிறார். பாகிஸ்தான் சார்பில் வெஸ்ட் இண்டீஸ், இலங்கை, இங்கிலாந்து கோஷ்டியாருக்கு எதிராக ஆடியிருக்கிறார். 1951-இல் இங்கிலாந்துக்குப் போய் ஸோமர்ஸெட் கவுண்டி சார்பில் தென் ஆப்பிரிக்கக் கோஷ்டியாருக்கு எதிராக ஆடினார். இப்போது இவருக்கு வயது 24.

6

7

6. **மகமூது ஹுஸேன்:** வலது கையால் பந்தெறிவதில் சிறந்தவர்; பிற்காலத்தில் இன்னும் நன்றாகப் பெயர் எடுப்பார். இந்தக் கோடையில் இங்கிலாந்தில் தங்கிப் பயிற்சி வேறு பெற்றிருக்கிறார். லாகூர் கவர்ன்மெண்ட் காலேஜ் சார்பில் ஆடியிருக்கிறார். சென்ற வருஷம் எம். ஸி. ஸி.க்கு எதிராகப் பஞ்சாப் கிரிக்கெட் சங்கம், பஞ்

8

சாப் சர்வகலாசாலை இவைகளின் சார்பில் ஆடினார்.



9

7. **மக்ஸுத் அகமது:** பந்தடிப்பது, வலது கையால் பந்தெறிவது, பீல்டிங் எல்லாவற்றிலும் நிபுணர். ரஞ்சிட் ரோஃபி பந்தயத்தில் தெற்குப் பஞ்சாப் கிரிக்கெட் சங்கத்தின் சார்பாக ஆடியவர்; பிரதேசக் கிரிக்கெட் சங்கத்தின் சார்பாகவும் ஆடியிருக்கிறார். அமிர்தசரஸிலுள்ள எம். ஏ. ஓ. காலேஜில் கிரிக்கெட் விளையாடத் தொடங்கினார். பாகிஸ்தான் சார்பில் வெஸ்ட் இண்டீஸ், காமன்வெல்த், இலங்கை, இங்கிலாந்து கோஷ்டியாருக்கு எதிராக ஆடிக் கீர்த்தி பெற்றவர்.

10

லாகூரில் சென்ற வருஷம் நடந்த ஒரு டெஸ்ட் மாட்சில் இங்கிலாந்து கோஷ்டிக்கு எதிராக இவர் செஞ்சுரி எடுத்தது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். சென்ற வருஷம் ஸ்டாஃபோர்டு ஷைர் கிரிக்கெட் லீகிலே சேர்ந்து விளையாடியிருக்கிறார். இவர் 1924 ஜனவரியில் பிறந்தார்.

11

8. **இம்டியாஸ் அகமது:** சிறந்த விக்கட்-கீப்பர், பந்தடிப்பவர் என்று பெயர் எடுத்திருப்பவர். 1945-இல் ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கு எதிராக ஆடிப் பல செஞ்சுரி எடுத்தவர். பிறகு 1948-இல் வெஸ்ட் இண்டீஸ் கோஷ்டியாருக்கு எதிராகப் பாகிஸ்தான் சார்பில் விளையாடினார். பம்பாயில் இரண்டாவது காமன்வெல்த் கோஷ்டியாருக்கு எதிராகப் பிரமாதமாக ஆடி வெற்றி பெற்றார்.

12

1928 ஜனவரியில் இவர் பிறந்தார்.

9. **நாஸர் மகம்மது:** முன்னே இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியின் தலைவராக இருந்த விஜய் மர்ச்

சென்ட், மாட்சின் ஆரம்பத்தில் இவர் பந்தடிக்கும் விதத்தைப் பாராட்டியிருக்கிறார். பம்பாய் பெண்டாங்குலர் பந்தயத்தில் இவர் விளையாடி யிருக்கிறார். லாகூர் இஸ்லாமியா காலேஜில் கிரிக்கெட் விளையாடிப் பெயர் எடுத்தார். பிறகு நார்தர்ன் கிளப், மம்தோத் கிளப், வட இந்தியக் கிரிக்கெட் சங்கம் இவைகளின் சார்பாக ஆடினார். இவர் 1921 மார்ச் 5-ஆம் தேதி லாகூரில் பிறந்தார்.

10. **வாஸிர் மகம்மது:** இவர் மகம்மது ஹனீஃபின் தமையன். நன்றாகப் பந்தடிப்பவர். சென்ற வருஷம் லாகூரில் நடந்த டெஸ்ட் மாட்சில் இங்கிலாந்து கோஷ்டிக்கு எதிராகப் பாகிஸ்தான் சார்பில் ஆடினார். ஜூனாகட் பிரதேசத்தைச் சேர்ந்தவர். பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் மேற்கு இந்தியக் கிரிக்கெட் கோஷ்டி சார்பில் ஆடியிருக்கிறார்.

11. **மகம்மது ஹனீஃப்:** உலகத்திலேயே டெஸ்ட் மாட்சில் கலந்து கொண்டவர்களில் இவரைவிட வயதில் சிறியவர் இல்லை என்றே சொல்லலாம். வயது 17. சென்ற வருஷம் லாகூரிலும் கராச்சியிலும் நடந்த டெஸ்ட் மாட்சுகளில் இங்கிலாந்துக்கு எதிராக ஆடியிருக்கிறார். இன்னும் பள்ளிக்கூடத்தில்தான் படிக்கிறார். பந்தடித்து ரன் எடுப்பது, விக்கெட் கீப்பிங் இரண்டிலும் பெயர் எடுத்திருக்கிறார்.

12. **குர்ஷித் அகமது:** ஆரம்பத்தில் பந்தடிப்பது, விக்கட் கீப்பிங் இரண்டிலும் சிறந்தவர். சமீபத்தில் இங்கிலாந்துக்குச் சென்று ஆல்ஃப் கவர் பள்ளிக்கூடத்தில் கிரிக்கெட்டின் சூட்சுமங்களை

13

14

15

16

யெல்லாம் அறிந்து வந்தவர். பஹாவல்பூர், சிந்து கோஷ்டிக்கு எதிராக ஆடி அரை செஞ்சுரி எடுத்தார். இவர் 1934-இல் அமிர்தசரஸில் பிறந்தவர்.

13. **வாக்கர் ஹாஸன்:** பந்தடிப்பது, எறிவது, பீல்டிங் எல்லாவற்றிலும் கெட்டிக்காரர். இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற பிறகு இன்னும் சிறப்பாக ஆடி வருகிறார். லாகூர் கவர்ன்மெண்ட் காலேஜுக்காக ஆடிவருகிறார். சென்ற வருஷம் காமன்வெல்த் கோஷ்டிக்கும் எம். ஸி. ஸி. கோஷ்டிக்கும் எதிராக ஆடினார்.

14. **அப்துல் ஹஃபீஸ் கர்தார்:** பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியின் தலைவர். சென்ற வருஷம் கராச்சியில் நடந்த ஒரு டெஸ்ட் மாட்சில் இங்கிலாந்திலிருந்து வந்த கோஷ்டியைத் தோற்கடித்துக் கீர்த்தி பெற்றவர். கிரிக்கெட் விளையாட்டில் இடது கையால் பந்தெறிவது, பந்தை அடிப்பது எல்லாவற்றிலும் நிபுணர். 1946-இல் இங்கிலாந்துக்குச் சென்ற இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியில் இவரும் ஒருவர். மேல்படிப்பை முடிக்க இங்கிலாந்திலேயே சிலநாள் தங்கினார். பிறகு ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை, வார்விக்ஷைர் கவுண்டி இவைகளின் சார்பாக ஆடினார். 1948-இல் இங்கிலாந்துக்குள்ளே பிரதேசக் கிரிக்கெட் கோஷ்டியில் நல்ல 'ஆவரேஜ்' எடுத்தார். 1945-இல் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் கோஷ்டிக்கு எதிராக இவரும் இம்டியாஸ் அகமது என்பவரும் அற்புதமாக ஆடினார்கள். கர்தார் லாகூரிலுள்ள இஸ்லாமியா காலேஜில் மாணவராக இருந்தபோது கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுப் பிரமாதமாகப் பெயர் எடுத்தார். பிறகு மம்தோத் கிளப், கிரெஸெண்ட் கிளப் முதலிய சங்கங்களின் சார்பில் ஆடினார். வட இந்தியக் கிரிக்கெட் சங்கத்தின் சார்பாகப் பல வருஷகாலம் ரஞ்சி ட்ரோஃபி பந்தயத்தில் ஈடுபட்டு வந்தார். இவர் 1925 ஜனவரி மாதம் லாகூரில் பிறந்தார்.

15. **இஸ்ரார் அலி:** பந்தடிப்பது, எறிவது முதலிய எல்லாவற்றிலும் விரைவில் நல்ல பெயர் எடுப்பார். இடது கையால் பந்தெறிந்தாலும் வலது கையால் பந்தடிப்பவர். பீல்டிங்கிலும் தேர்ந்தவர். பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் ஜல்லந்தர் இஸ்லாமியா பள்ளிக்கூடம், தெற்குப் பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் இவைகளின் சார்பில் ஆடியிருக்கிறார். சென்ற வருஷம் பஹாவல்பூரில் எம். ஸி. ஸி. கோஷ்டிக்கு எதிராக நன்றாக விளையாடினார்.

16. **ஆர். என். தின்ஷா:** இடது கையால் பந்தை அடிக்க ஆரம்பித்துச் சென்ற சில மாதங்களுக்குள் நன்றாகத் தேர்ந்து பெயர் எடுத்திருப்பவர். 1950 - இல் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டார் இவரை ஆல்ஃப் கவர் கிரிக்கெட் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெற்று வர அனுப்பியிருந்தார்கள். பீல்டிங்கிலும் கெட்டிக்காரர்.

17. (படம் இல்லை.) **ஜுல்ஃபிகர் அகமது:** லாகூர் இஸ்லாமியா காலேஜ், பஞ்சாப் சர்வகலாசாலை, வட இந்தியக் கிரிக்கெட் சங்கம் இவைகளின் சார்பாக ஆடிப் பெயர் எடுத்தார். பஹாவல்பூர் கோஷ்டியாரின் சார்பாக எம். ஸி. ஸி. கோஷ்டியாருடன் சென்ற வருஷம் ஆடியிருக்கிறார்.

மறந்துபோன சம்பவம்

★

மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கம் தொடங்குவதற்குமுன் பஞ்சாபுக்குப் போகப் புறப்பட்டார். அப்போது அவரை அங்கே போகவிடாமல் பஞ்சாப் சர்க்கார் தடுத்தது. ஜாலியன்வாலாபாகில் பல மக்களை ஜெனரல் டயர் சுட்டுக் கொன்ருன். இந்தச் செய்தி கேட்டதும் ரவீந்திரர் தமக்கு ஆங்கில சர்க்கார் அளித்த 'ஸர்' பட்டத்தைத் துறந்தார். பின்னல் மகாத்மா ஒத்துழையாமை இயக்கம் தொடங்கி, அரசியல் பிரசாரம் செய்து வந்தபோது ரவீந்திரர் அதை ஆதரிக்கவில்லை. அந்நியத் துணியைக் கொளுத்துவதை அவர் ஆட்சேபித்து வந்தார். இந்தச் சமயத்தில் அவர் சிறுவர்களுக்கான சில வாசகங்களை எழுதி வெளியிட்டு வந்தார்.

ஒரு நாள் வங்க சர்க்காரின் பிரதமக் காரியதரிசியான ஆங்கிலேயர் ஒருவர் அவரைக் காண வந்தார். அவர் எதற்காக வந்தார் என்று ரவீந்திரருக்குப் புரியாவிட்டாலும் வரவேற்று விஷயத்தை விசாரித்தார். க்ஷேமலாபம் எல்லாம் கேட்டானதும் சர்க்கார் காரியதரிசி, "உங்கள் வாசகங்களைச் சர்க்காரின் ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாம் வைப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம்" என்று ஆரம்பித்தார்.

ரவீந்திரர், "சரி" என்று தலையை ஆட்டினர்.

"அதோடு ஒரு வார்த்தை உங்களைக் கேட்க வேண்டும்" என்று இழுத்தார் சர்க்கார் காரியதரிசி.

"என்ன?"

"ஒன்றுமில்லை...ஒத்துழையாமை இயக்கத்தையும்கதரையும் பற்றி நீங்கள் எழுதிய கட்டுரைகளைப் பிரசுரித்து இலவசமாக விநியோகிப்பதென்பது சர்க்கார் கருத்து."

ரவீந்திரரின் முகம் சிவந்தது. அவர், "ஓ! இதற்காகத்தான் என் புத்தகங்களை வைப்பதாகப் பீடிகை போட்டீர்களோ? என் கட்டுரைகளை மகாத்மாவுக்கு எதிர்ப் பிரசாரமாக நீங்கள் பயன்படுத்திக்கொள்ள ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். போய் வாருங்கள்" என்று சொல்லி விர்ரென்று உள்ளே எழுந்து போய்விட்டார்.

சர்க்கார் காரியதரிசியின் முகம் கரி தீற்றினதுபோல் கறுத்துவிட்டது. அவர் அப்புறம் அங்கே என் நிற்கிறுர்? அவர் போனவுடன் ரவீந்திரர் 'மகாத்மா' என்ற தலைப்பில் காந்தியடிகளுக்குத் தம் வணக்கத்தைத் தெரிவித்து ஓர் அபூர்வமான கவிதையை எழுதிப் பிரபல வங்காளித் தினசரி ஒன்றுக்கு அனுப்பி வைத்தார்.

—பிரபாஸி (வங்காளி)

ராவண வதம் ★ ★

லட்சுமணன் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் ராமன் மகிழ்ச்சி அடைந்தான். பிறகு முன்னைவிட ரோஷத்தோடு ராவணனை எதிர்த்துப் போரிட்டான்.

உடனே ராவணன் வஜ்ரம் போல் பலமுடைய ஒரு சூலத்தை எடுத்து ராமனைக் கொன்று விடுவதாகச் சொல்லி எறிந்தான். எட்டு மணிகளுடன் ஓலமிட்டுக் கொண்டு பிரளய காலத்து அக்கினியைப் போல் அது பயங்கரமாக ராமனை நோக்கி வந்தது. ஆனால் உடனே ராமன் பாணங்களால் அதைச் சிதற அடித்துவிட்டான். பிறகு அதே பாணங்களால் இருதயத்தில் அடிபட்ட ராவணன் தன் நினைவிழந்து அலையலானான். அவனுடைய தேர்ப்பாகன் இதை அறிந்ததும் தேரைப் போர்க்களத்திலிருந்து ஓட்டிச் சென்றான்.

மீண்டும் நினைவு வந்தபோது ராவணன் தேர்ப்பாகனைப் பலவாறு இகழ்ந்து போர்க்களத்துக்குத் தேரை ஓட்டும்படி உத்தரவிட்டான்.

இதற்கிடையில் போரில் களைப்புற்ற ராமனிடம் அகஸ்திய முனிவர் வந்தார். பகைவரைக் கொன்று நிச்சயமாக வெற்றியளித்து, போரால் ஏற்படும் களைப்பைப் போக்கும் 'ஆதித்திய ஹிருதயம்' என்னும் மகா மந்திரத்தை உபதேசித்தார். ராமன் அந்த மந்திரத்தை ஜபித்துவிட்டு ராவணனை எதிர்த்துப் போருக்குத் தயாராக நின்றான். இந்தச் சமயத்தில் ராவணனுக்குப் பல அபசகுனங்களும் ராமனுக்குப் பல சுபசகுனங்களும் உண்டாயின.

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

பிரளய காலத்து மேகங்கள் மழை பொழிவதுபோல் இவர்கள் ஒருவர்மேல் ஒருவர் பாணங்களைப் பொழிந்தார்கள். பாண மாரியால் எழு சமுத்திரங்களும் கலங்கின. பூமி நடுங்கியது. சூரிய ஒளிகூட மங்கியது. காற்று வீசவே இல்லை. சித்தரும் முனிவரும் தேவரும் பயந்து உலகம் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்றும், 'ராமன் ராட்சச மன்னனை வெல்ல வேண்டும்' என்றும் வேண்டினார்கள்.

பிறகு ராமன் பாம்பு போல் சீறும் பாணத்தால், குண்டலத்துடன் விளங்கும் ராவணனின் தலையை அறுத்தான். அந்தத் தலை தரையில் விழுந்து புரளுவதை மூன்று உலகமும் பார்த்தது. ஆனால் மறு நிமிஷம் அதேபோல் தலை ராவணனுக்கு உண்டாகிவிட்டது. இதையும் உடனே ராமன் அறுக்கவே மீண்டும் மற்றொரு தலை கிளம்பியது. இப்படி ராமன் நூற்றொரு தலைகளை அறுத்தான். ஆனால் அப்படியும் ராவணனுக்குத் தலை முளைத்து வருவதைக் கண்டு ராமன், "இது என்?" என்று யோசித்துக்கொண்டே ராவணனின் மேல் பாணங்களைத் தொடுத்துக்கொண்டிருந்தான். ராவணனும் முஸலம் முதலிய ஆயுதங்களை ராமனின்மேல் எய்தான். அப்போது அவனது தேரையோட்டும் மாதலி, "வீரரே, என் இப்படி யுத்தத்தை நீடிக்கிறீர்கள்? தேவர்கள் ராவணனைக் கொல்வதற்காகக் குறிப்பிட்ட சமயம் நெருங்கிவிட்டது. பிரம்மாஸ்திரத்தை அவன் மேல் பிரயோகம் செய்யுங்கள்" என்று நினைவூட்டினான். உடனே ராமன், அகஸ்தியர் முதலில்



கொடுத்த அந்த அஸ்திரத்தை—மூவுலகையும் வெல்ல இந்திரனுக்குப் பிரம்மதேவர் செய்து கொடுத்த பிரம்மாஸ்திரத்தை—எடுத்தான். வேதத்தில் கூறிய முறைப்படி ஜபம் செய்து அதை ராவணனின் மேல் தொடுத்தான். அப்போது உலகமே நடுங்கியது. ராவணன் தைரியத்துடன் பாணங்களால் அதை எதிர்த்தான். ஆயினும், அது நேராகச் சென்று ராவணனுடைய மார்பைப் பிளந்தது. அவனுடைய உயிரைப் பறித்து ரத்தம் தோய்ந்தபடி மீண்டும் ராமனுடைய அம்பறாத் தூணியில் புகுந்தது. ராவணன் வீழ்ந்ததும் மற்ற அரக்கர்கள் பயந்து ஓடிவிட்டார்கள்.

குரங்குகள் ராமனுடைய வெற்றியைக் கொண்டாடின. வானத்தில் தேவர் துந்துபி முழக்கினார்கள். மலர் மாரி சொரிந்தார்கள்.

பிறகு விபீஷணன் தன் சகோதரனின் நிலையைக் கண்டு மனம் தாங்காமல், "காம மயக்கமுற்ற உனக்கு நான் முன்னாலேயே எவ்வளவோ சொன்னேனே; அது உனக்கும் உன் தோழர்களுக்கும் பிடிக்கவில்லை. அதன் பயனை இப்பொழுது அநுபவிக்க வேண்டி வந்தது" என்றெல்லாம் சொல்லிப் புலம்பினான்.

அப்போது ராமன் வருத்தத்தோடு, "ராவணன் உனக்கு எப்படியோ அப்படித்தான் எனக்கும். பகை என்பது மரணம் வரையில் தான். ஆகவே, மனத்தைத் தேற்றிக்கொள். இவனுக்கு ஈமச்சடங்கைச் செய்து முடி" என்றான்.

இதற்குள் ராவணன் இறந்த செய்தியை அறிந்து, அந்தப்புரத்திலிருந்து அவன் மனைவிமார், பலர் தடுத்தும் கேளாமல் தலைவிரி கோலத்துடன் கன்றை இழந்த பசுக்களைப்போல் போர்க்களத்துக்கு ஓடி வந்தார்கள். மலைபோல் விழுந்து கிடக்கும் ராவணனைக் கண்டு வருத்தம் தாங்காமல் கதறினார்கள். மந்தோதரி கணவனைக் கண்டு வருத்த மிகுதியால் இப்படிப் புலம்பலானாள்:

"உன்னைக் கண்டு பயந்து தேவேந்திரனும் எதிரில் நிற்கத் துணிய மாட்டானே! முனிவர், கந்தர்வர் முதலியோர் பயந்து பத்துத் திக்குகளிலும் ஓடுவார்களே! அப்பேர்ப்பட்ட உன்னைக் கேவலம் காட்டில் திரியும் ஒரு மனிதன் எப்படிக் கொன்றான்? இஷ்டப்படி உருவம் எடுத்துக்கொண்டு மனிதர்களின் கண்களில் படாமல் இருக்கும் திறம் படைத்த உன்னை ராமன் கொன்றான் என்பதை நான் நம்பவில்லை. ராமன் வடிவத்தில் யமனே வந்து உன்னைக் கொன்றதாகத் தோன்றுகிறது. அல்லது இந்திரன் ராமன் வடிவில் வந்திருக்கலாம். ஆனால் இந்திரனுக்கு உன்னைக் கொல்லும் திறம் ஏது? ஆகவே, ஆதிஅந்தமில்லாத மகாவிஷ்ணுதான், குரங்கு உருவம் தரித்த தேவர் படை சூழ இலங்கைக்கு வந்து உலகத்தின் நன்மைக்காக இந்த ராட்சசக் கூட்டத்தோடு உன்னையும் கொன்றுவிட்டார் என்று நினைக்கிறேன்; அல்லது, நீ முன்பு புலன்களை அடக்கி மூன்று உலகத்தையும் வென்றாயே; அந்தப் பகைமையை உன் புலன்கள் மறவாமல் எண்ணிக்கொண்டே இருந்து இப்போது உன்னை வென்று விட்டனவோ?

"நான் பலதரம், 'சீதையைத் திருப்பிக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு. ராமனிடம் பகை வேண்டாம்

என்றேனே. நீ அதைக் கேட்கவில்லை. உன் செல்வம், உடல், உறவு எல்லாவற்றையும் அழிக்கவே சீதையை நீ விரும்பினாயோ? அருந்ததி, ரோகிணி இவர்களைவிடச் சிறந்த சீதையை நீ கவர்ந்தது தகுதியாகுமா? சீதை பூமிக்குப் பொன்னணிபோன்றவள். லட்சுமியைவிட லட்சணம் பொருந்தியவள். அவளைக் கபடமாக அபகரித்து வந்தாய். பதிவிரதையான சீதையின் தேஜஸ் உன்னை எரித்துவிட்டது. குலத்திலோ அழகிலோ சீதை என்னைவிட உயர்ந்துவிடவில்லை; நிகர்கூட இல்லை. சீதையின்மேல் கொண்ட மோகத்தால் நீ அதை உணரவில்லை. விதவையாவேன் என்பதை நான் எண்ணிப் பார்த்ததுகூட இல்லை. 'என் தந்தை அசுர மன்னன்; கணவன் ராட்சச மன்னன்; மகன் இந்திரனை வென்றவன்' என்று நான் உண்மையில் கர்வமுற்றிருந்தேன். ஒருவேளை இது கனவுதானோ? நீ யமனுக்கும் யமனாயிற்றே! உனக்கு ஏது மரணம்? அல்லது பதிவிரதைகளின் கண்ணீர் வீணாகப்போகாது என்பது இப்பொழுது உண்மையாயிற்றோ?

"ஆராய்ந்து பார்க்கும்போது பலம், பராக்கிரமம், புகழ் இவை எல்லாம் படைத்த உன்னைப்பற்றி வருந்தவே வேண்டாம். பெண்புத்தியால் நான் வருத்தப்பட்டேன். உன் புண்ணிய பாவங்களுடன் நீ போய்ச் சேர்ந்தாய். உன் பிரிவால் துன்புறும் என்னைப்பற்றி எண்ணியே வருந்துகிறேன்.

"எழுந்திரு, எழுந்திரு. என் படுத்திருக்கிறாய்? பயமில்லாமல் இலங்கையில் சூரிய கிரணங்கள் புகுந்துவிட்டன. என்னிடம் பதில்கூடச் சொல்லாமல் பூமியையே என் இப்படித் தழுவிக் கொண்டு படுத்திருக்கிறாய்?"

இதற்கிடையில் ராமன் விபீஷணனிடம் மீண்டும், "தமையனுக்குரிய கடைசிக் கிரியைகளைச் செய்" என்றான். அப்போது வீபீஷணன், "தர்மத்தைக் கைவிட்டு, கொடிய குணம் படைத்து, பிறர் மனைவிமாரைத் துன்புறுத்திய ராவணனுக்கு நான் ஏதும் செய்ய மாட்டேன். தமையன் வடிவத்தில் வந்த பகைவனே இவன். ஆகவே, தமையன் என்ற கௌரவத்துக்கு இவன் தகுதியற்றவன். உலகத்தார் என்னைக் கொடியவன் என்று சொன்னாலும் சொல்லட்டும். நான் இவனுக்கு ஒன்றும் செய்யப் போவதில்லை" என்றான். ராமன், "இவன் அதர்மம் செய்தவனாக இருந்தாலும் தேவேந்திரனாலும்கூட வெல்ல முடியாத பராக்கிரமசாலி. இவனுக்கு நீ கடைசிக்கிரியை செய்வது தான் உசிதம்" என்றான்.

விபீஷணன், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி விரைவில் முறைப்படி ராவணனுக்குரிய அந்திமக் கிரியைகளைச் செய்து முடித்துவிட்டு ராமனின் எதிரில் வந்து வணக்கத்துடன் நின்றான்.

உடனே ராமன் லட்சுமணனை நோக்கி, "லட்சுமணா, என்மேல் அன்பும் பக்தியும் நிறைந்து எனக்கு உதவிய விபீஷணனுக்கு இலங்கையில் பட்டாபிஷேகம் செய்" என்று உத்தரவிட்டான். உடனே லட்சுமணன் தங்கக் குடங்களை, வாயுவேகமாகச் செல்லும் குரங்குகளிடம் கொடுத்துப் புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டுவரச் செய்தான். விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் ஆயிற்று.

மேதைக்குரிய மதிப்பு

★



'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ?' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இந்த எஞ்சினீர்கள் மட்டும் துணிந்திராவிட்டால் உலகம் இப்பேர்ப்பட்ட மேதையின் குரலைக் கேட்டு இன்புற்றிருக்கவே முடியாது. 'காரோனெட்'என்னும் அமெரிக்கப்பத்திரிகையில் எர்னஸ்ட் வீட்னர் என்பவர் எழுதிய கட்டுரை ஒன்றின் சாரம் இது.

விக்டர் கம்பெனி என்ற பிரபல இங்கிலீஷ் கிராமபோன் கம்பெனியார், ஐரோப்பாவிலுள்ள பிரபல பாடகர்களின் சங்கீதத்தைப் பதிவு செய்ய, சகோதரர்களான ஃப்ரெடரிக், வில்லியம் கெயிஸ்பர்க் என்ற எஞ்சினீர்களை அங்கே அனுப்பியிருந்தார்கள். பிரபல பாடகர்கள் பலர் ஒரு தரம் பதிவு செய்துகொள்வதற்கு 3 டாலர் விகிதம் வாங்கிக்கொள்ள இசைந்தார்கள். இப்படி இருக்கும்போது திடீரென்று ஒரு நாள் ஓர் ஆசாமி வந்து, "எனக்கு 500 டாலர் கொடுத்துவிட்டுப் பத்துப் பாட்டுக்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்" என்றார்.

வந்தவர் இவ்வளவு பெருந்தொகை கேட்கவே எஞ்சினீர்கள் சற்று நேரம் திகைத்து நின்றார்கள்.

பிறகு, "என்ன ஐயா, இது! சுத்த அபத்தமாக இருக்கிறது! பெரிய பெரிய பாடகர்களேகூட இந்தத் தொகைக்குப் பத்துத் தடவைக்குமேல் பாட ஒப்புக்கொள்வார்களே!" என்றார்கள்.

"ஆனால் நான் அவர்கள் எல்லாரையும் விடக் கெட்டிக்காரனாயிற்றே! நான் கேட்ட தொகை தரச் சம்மதமானால் இதோ தயார்" என்றார் வந்தவர்.

"ஆனால் உம்மைப்பற்றி யாருமே கேள்விப்பட்டதில்லையே!" என்றார்கள் எஞ்சினீர்கள்.

வந்தவர் உறுதியாக, "நிச்சயமாகப் பாருங்கள். என் பாட்டை எல்லாரும் கேட்டு ரசிக்கத்தான் போகிறார்கள்" என்றார்.

எஞ்சினீர்கள் இருவரும், வந்தவர் இவ்வளவு துணிச்சலாகப் பேசுவதைக் கண்டு அசந்து போய்விட்டார்கள். உடனே லண்டனிலுள்ள தங்கள் கம்பெனியாருக்கு இதைத் தெரிவித்தார்கள். ஆனால், "தொகை ரொம்ப அதிகம். பதிவு செய்ய வேண்டாம்" என்று பதில் வந்தது.

எஞ்சினீர்கள் அந்த ஆசாமியைப் பாடச் சொல்லிக் கேட்டார்கள். குரல் என்னவோ வாஸ்தவமாகவே அபாரமாகத்தான் இருந்தது. ஆனல், 'இவர் இன்னர் என்று யாருக்குமே தெரியாதே' என்று தான் தயங்கினர்கள். உடனே, 'நம்மைப்போல் இன்னும் நாலு பேர் இதை ரசித்தால் நல்ல லாபம் கிட்டினலும் கிட்டும்' என்று அவர்களுக்குத் தோன்றிற்று.

"ஒரு தரந்தான் பார்க்கலாமே! நமக்குத் தரும் செலவு தொகையிலிருந்து இவர் கேட்டதைக் கொடுத்துவிடுவோமே" என்ருர் ஃப்ரெடரிக்.

வில்லியம், "அப்புறம் நம் வேலேயே போய்விடப் போகிறது, ஜாக்கிரதை!" என்ருர்.

கடைசியில் இருவருமே இந்த விஷயத்தில் ஒத்து, வந்தவரிடம் 500 டாலர் கொடுத்துப் பத்துப் பாட்டுக்களைப் பதிவு செய்தார்கள். இவை விரைவிலேயே விற்பனையாகிவிடவே கம்பெனிக்குக் கைமேல் 75,000 டாலர் கிடைத்தது.

இந்த எஞ்சினீர்கள் மட்டும் தங்கள் வேலை போனலும் போகிறது என்று இப்படித் துணிந்திராவிட்டால் என்ரிகோ காருஸோ என்ற அந்த இத்தாலியச் சங்கீத மேதையின் குரலைக் கேட்கும் பாக்கியம் உலகத்திலுள்ள சங்கீத ரசிகர்களுக்குக் கிடைத்தேயிராது. நேபிள்ஸ் நகரில் முதல் முதலாக இப்படிப் பெயரெடுத்த காருஸோ பின்னல் அமெரிக்காவிலும் வந்து பாடிப் பிரபலமடைந்தார். 1921-இல் இவர் காலமான போது இத்தாலிய மன்னர் விசேஷ மரியாதைகளுடன் இவருடைய உடலை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்.

அவனுக்குப் பிடித்த ஊர்

இப்போது லெனின்கிராடு என்று வழங்கும் நகரத்துக்கு முதல் உலக மகா யுத்தத்துக்கு முன் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என்று பெயர். அந்த யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது பீட்ரோகிராடு என்று அதன் பெயரை மாற்றினர்கள். அது முடிந்து சில காலமானதும் லெனின்கிராடு என்று புதிதாகப் பெயரிட்டார்கள்.

இதற்குப் பிறகு ஒரு நாள் கம்யூனிஸ்டுகள் சிலர் அந்த நகரவாசி ஒருவனை, "முதல் மகா யுத்தத்துக்கு முன்னே நீ எங்கே இருந்தாய்?" என்று விசாரித்தார்கள்.

"செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில்."

"அது நடந்துகொண்டிருக்கும்போது?"

"பீட்ரோகிராடில்."

"இப்போது?"

"லெனின்கிராடில்."

"எந்த ஊர் உனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது?"

"செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்" என்று பதிலளித்தான் நகரவாசி.

—'வாய்ஸ் ஆவ் அமெரிக்கா'

உலகத்தின் உச்சி

ஆசா தர்

உலகத்திலே எவரெஸ்ட் சிகரம் மிக உயரமானது; 29,141 அடி உயரம். இன்னும் இதைப்போல் எத்தனையோ கம்பீரமான சிகரங்கள் இமாலயச் சாரலில் இருக்கின்றன. 85 ஆண்டுகளுக்கு முன்னால்தான் இங்கே போய்ப் பார்க்கச் சிலர் துணிந்தார்கள். அதுவரை இங்கே என்ன இருக்கிறது என்பது யாருக்குமே தெரியாது.

இப்படி 25,000 அடி உயரமுள்ள 50 சிகரங்கள் இங்கே இருப்பதாகத் தெரிகிறது. இவைகளில் நந்தாதேவி (25,660 அடி), காமெட் (25,447 அடி) என்ற சிகரங்களில்தான் இதுவரை ஏறிப் பார்க்க முடிந்தது.

இந்தச் சிகரங்களில் என்ன விசேஷம் இருக்கிறதென்று பார்க்க இந்த நூற்றாண்டில் அநேகம் பேர் முயன்றார்கள். இன்னும் பலர் முயன்று வருகிறார்கள். பிற நாட்டாரே இதுவரை இந்த மாதிரி துணிந்து வந்தார்கள். ஆனால் இப்போது அப்படியல்ல. நம் நாட்டவரும் இப்படி மலை ஏற ஆரம்பித்திருக்கிறார்கள். 1928-பிப்ரவரியில் புது டில்லியிலே ஹிமாலயன் கிளப் என்ற சங்கத்தைச் சிலர் ஸ்தாபித்தார்கள். ஹிமாலய யாத்திரை சம்பந்தமாகத் தகவல்கள் முதலியவற்றை அறிய விரும்புபவர்களுக்குப் பல விதத்தில் உதவும்படி இந்தச் சங்கம் அமைந்திருந்தது. சென்ற ஆண்டு ஜூன் மாதம் மேஜர்-ஜெனரல் எச். வில்லியம்ஸ் என்பவரின் தலைமையில் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் காமெட் சிகரத்துக்கு 600 அடி சமீபம் சென்று திரும்பினார்கள். இரண்டு வருஷத்துக்கு முன் பிரெஞ்சுக்காரர் சிலர் அன்னபூர்ணா சிகரத்தில் ஏறிப் புகழ் பெற்றார்கள்; அவ்வளவு உயரம் இதுவரை யாருமே போய்ப் பார்த்ததில்லை.

இந்த ஆண்டு 'பிலானி மலையேறுவோர் சங்க'த்தைச் சேர்ந்த நாலு இந்தியர்கள் ஸ்ரீ பி. எம். நாகோர் என்பவரின் தலைமையில் பாஞ்சசூடிச் சிகரத்தின் வெகு சமீபத்தில் - 22,125 அடி உயரம் வரையில் ஏறித் திரும்பினார்கள். இந்தச் சிகரம் தரைமட்டத்திலிருந்து 22,525 அடி உயரம் உள்ளது. ஸம்ஸ்கிருதத்தில் 'பாஞ்சசூடி' என்றால் 'ஐந்து உச்சி' என்று அர்த்தம். இவ்வளவு உயரம் இதுவரை யாருமே ஏறியதில்லை. எட்டு

உலகத்திலேயே மிகவும் உயரமான இடம் இமாலயத்திலுள்ள எவரெஸ்ட் சிகரந்தான். இதில் ஏற எத்தனையோ பேர் முயன்றார்கள். ஆனால் இன்றுவரை அந்த முயற்சி கைகூடவில்லை. இருந்தாலும் சலிப்படையாமல் இன்னும் பலர் முயன்றுதான் வருகிறார்கள்.

காப்பிரைட்: பம்பாய் க்ரானிக்கின் வீக்லி (ஆங்கிலம்: 12-10-'52), பம்பாய்.

இந்தியர்கள் அடங்கிய ஒரு சாதாரணக் கோஷ்டியார் ஒரு தடவை கார்வாலிலுள்ள காமெட் சிகரத்துக்கு 647 அடிச மீபம் வரை சென்று திரும்பியிருக்கிறார்கள்.

இதற்கும் பின்னால்தான் முன் சொன்ன இந்திய ராணுவக் கோஷ்டியார் காமெட் சிகரத்துக்கு 600 அடி சமீபம் வரை சமாளித்து ஏறிவிட்டார்கள். அதற்குமேல் வானநிலை சரியாக இராததால் ஏறிச் செல்ல முடியவில்லை. நந்தாதேவிச் சிகரத்துக்கு அடுத்தபடி உயரமானது காமெட் சிகரம்.

ஜப்பானியர்கள் சிலருக்கும் இமாலயச் சிகரம் ஏறிப் பார்க்க வேண்டுமென்று ஆவல். இதுவரை யாருமே ஏறாத மான்ஸாலு (26,657 அடி) சிகரத்துக்குப் போகும் வழி வகைகளை ஐந்து ஜப்பானியர் அடங்கிய ஒரு கோஷ்டியார் ஆராய்ந்து வருகிறார்கள். அடுத்த ஆண்டு ஜப்பானிய ஆல்பைன் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முழு வசதியுடன் இந்தச் சிகரத்தில் ஏறப்போகிறார்கள்.

இந்த ஆண்டு டாக்டர் எடுவர்டு விஸ்-டேனெண்ட் என்பவர் தலைமையில் ஒரு ஸ்விஸ் கோஷ்டி எவரெஸ்ட் சிகரத்துக்கு 900 அடி சமீபம் வரை போய்த் திரும்பி வந்தது. இன்னும் ஒருதரம் இவர்கள் ஏறிப் பார்க்கப் போவதாகத் தெரிகிறது.

1855-இல் ஸ்க்லோஜின்ட்வெல்ட் சகோதரர்கள் காமெட் சிகரத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிகரத்தில் 22,329 அடி உயரம் வரை முதல் முதலாக ஏறினார்கள். அதே பிரதேசத்தில் இந்திய ஸர்வே இலாகாவைச் சேர்ந்த ஜ. வி. போகாக் என்பவர் 22,040 அடி உயரம் வரை ஏறினார். 1949-இல் பிரபல தாவர நிபுணரான ஸர் ஜோஸஃப் ஹூக்கர் என்பவர் காஞ்சனஜங்கா (22,770 அடி உயரம்), பௌஹூர்னி (23,185 அடி உயரம்) இவைகளுக்கு அருகிலுள்ள சிக்கிம் பள்ளத்தாக்குப் பிரதேசங்களுக்குப் போய் வந்தார்.

ஸர்வே இலாகாவைச் சேர்ந்த பாபு சரத்சந்திர தாஸ் என்பவர் ஜோன் ஸோங் லா (20,200 அடி உயரம்) என்ற மலைப்பிரதேசத்தில் ஏறிப் பார்த்திருக்கிறார். 1899-இல் ஃப்ரெஷ்பீல்டு என்பவர் நேபாளப் பகுதியிலிருந்து காஞ்சனஜங்காவைச் சுற்றிப் பார்த்தார். 1892-இல் கான்வே பிரபு 23,000 அடி உயரம் ஏறி, பால்டோர் கிளேஸியர் என்ற நகரும் பனிப் பாறையைப் பார்த்து வந்தார்.

ஸ்விஸ்காரர்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு டாக்டர் புல்லக் வொர்க்மான் என்பவரும் அவருடைய மனைவியும் காரகோரம், காப்ரூ (24,000 அடி உயரம்) முதலிய மலையுச்சிகளுக்குப் போய் வந்தார்கள். இதற்கு முன் காரகோரம் கணவாயை முதல் முதலாகக் கடந்தவர் ஸர் ஃபிரான்ஸிஸ் யங்ஹஸ்பண்டு என்ற ஆங்கிலேயர். அந்தக் காலத்திலேயே காப்டன் மாரிஸ் ஸ்லிம்பி, டாக்டர் ஏ. எம். கெல்லாஸ், கர்னல் மோர்ஸ்ஹெட் என்பவர்கள் காமெட் மலைச்சாரலில் 23,500 அடி உயரம் வரை ஏறியிருக்கிறார்கள். 1929-இல் பால் பாவர் என்பவர் தலைமையில் பவேரியர் கோஷ்டி ஒன்று காஞ்சனஜங்கா சிகரத்தில் ஏற முயன்றது. அதன் வடகிழக்குப்புறம் 24,000 அடி உயரம் வரை ஏறி

அதோடு திரும்பி வர வேண்டிய தாயிற்று.

1930-இல் சர்வதேச கோஷ்டி ஒன்றைச் சேர்ந்த புரொபஸர் திரென்ஃபர்த் என்பவர் ராம்தங்க் (23,200 அடி உயரம்), ஜோன் ஸாங் (24,344 அடி உயரம்) என்ற சிகரங்களின்மேல் ஏறினர். 1931 கோடையில் ஃபிராங்க் ஸ்மித் என்பவர் தலைமையில் ஆங்கிலேய வாலிப கோஷ்டி ஒன்று காமெட் சிகரத்தில் (25,447 அடி உயரம்) ஏறிவிட்டது.

இந்த 20-ஆம் நூற்றாண்டில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறப் பல பேர் பல தரம் - 1921, 1922, 1924, 1933, 1935, 1936, 1938—இந்த ஆண்டுகளில் முயன்றார்கள். லெப்டினெண்ட் கர்னல் ஹவர்டு பர்ரி என்பவர் அதில் ஏறும் வழி வகைகளை முன்னதாகக் கண்டு உதவினர். எவரெஸ்டின் வடக்குப் பக்கம் நன்றாக ஆராய்ந்ததால் அடுத்த ஆண்டு பிரிகாடியர் ஜெனரல் ப்ரூஸ் என்பவர் 27,300 அடி உயரம் வரை ஏறினர். அதற்குப் பிறகு 1924-இல் இன்னொரு கோஷ்டியார் 28,100 அடி உயரம் ஏறினர்கள்.

1933-இல் ராயல் பூகோளச் சங்கத்தின் ஆதரவில் எவரெஸ்ட் கமிட்டி என்று ஒரு ஸ்தாபனத்தை நிறுவினர்கள். தந்தியில்லாக் கம்பி மூலம் அவ்வப்போது அலிபூரிலிருந்து வானநிலையை அறிந்து மலை ஏறுவதற்குரிய ஏற்பாடெல்லாம் செய்துகொண்டு ஒரு கோஷ்டியார் எவரெஸ்டில் ஏறப் புறப்பட்டார்கள். மேலே ஏறும்போது அங்கங்கே முகாம் தங்குசையில், முகாமுக்கு முகாம் டெலிபோன் வசதி வேறு இருந்தது. இப்படிச் சமவெளியிலிருந்து 23,000 அடி உயரம் வரை அமைத்திருந்தார்கள். ஹாரிஸ், வேகர், லாங்லாண்டு இந்த மூன்று பேரும் 27,400 அடி உயரம் வரையில் சென்றார்கள். மறுபடியும் ஹாரிஸ், வேகர் இந்த இரண்டு பேரும் எவரெஸ்டின் வடகிழக்குப் பக்கமாகப் போய்ப் பார்த்து 28,100 அடி உயரம் ஏறிவிட்டார்கள். இதற்கு முன் நார்ட்டன் என்பவர் இந்த வழியே கொஞ்ச தூரம் போய்ப் பார்த்திருக்கிறார்.

1924-இல் மாரிஸ் வில்ஸன் என்ற ஒரு விமானி திபேத் நாட்டில் மாறு வேஷத்துடன் போய் எவரெஸ்ட் சிகரத்தில் 21,000 அடி உயரம் வரை ஏறி விட்டதாகத் தெரிகிறது. அவர் திரும்பி வரவே இல்லை. பின்னால் எவரெஸ்ட் ஏறிய சிலர் அவருடைய எலும்புக் கூட்டை அங்கே கண்டெடுத்தார்கள்.

1935-இல் ஷிப்டன் என்பவரின் தலைமையில் இன்னொரு கோஷ்டியார் எவரெஸ்டை நோக்கிப் புறப்பட்டார்கள். இவர்கள் பருவகாலப் பனிமழை, வானநிலை, மேற்குப்புற வழி முதலிய விவரங்களை ஆராய்ந்து தொகுக்கவே அங்கே சென்றார்கள்.

பருவகாலத்தில் எவரெஸ்ட் மலைச்சாரலில் ஏறிச் செல்ல முடியாது; அது முடிந்த கையோடு போனல்தான் சாத்தியம் என்று இவர்கள் அறிந்துகொண்டார்கள். இங்கே ஆராய்ந்ததில் 20,000 அடி உயரமுள்ள சுமார் 24 சிகரங்கள் இருப்பது தெரிந்தது.

1936-இல் ஹ்யூ ரூட்லெஜ் என்பவரின் தலைமையில் சிலர் ரங்புக் கிளேஷியர் என்ற நகரும் பனிப் பாறையின்மேல் ஏறி, வட கோல்

பிரதேசத்தின் மேற்குப் பகுதியை ஆராய்ந்தார்கள். இந்தக் கோஷ்டியில் ஷிப்டன் என்பவரும் இருந்தார். 1938-இல் சென்ற கோஷ்டியிலும் ஷிப்டனும், ஸ்மித் என்பவரும் கலந்துகொண்டார்கள்.

நங்க பர்வத உச்சியை யாரும் இன்னும் ஆராயவில்லை. 1934-இல் ஜெர்மனி, ஆஸ்திரியா இந்த நாடுகளைச் சேர்ந்த சிலரும் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த ஃப்ரையர், ஸாங்ஸ்டர் என்ற இரண்டு காப்டன்களும் இங்கே 25,600 அடி உயரம்வரை ஏறினர்கள். 1937 மே மாதம் டாக்டர் வீன் என்பவர் தலைமையில் ஜெர்மானியக் கோஷ்டியார் நங்க பர்வதத்தில் ஏறிப் போகும்போது விபத்து ஏற்பட்டு, போன ஒன்பது பேரில் ஒரே ஓர் ஆசாமிதான் தப்பிப் பிழைத்தார். 'அந்தப் பருவத்தில் அவர்கள் மலை ஏறி இருக்கக் கூடாது' என்று சில நிபுணர்கள் சொன்னர்கள். 1938-இல் டாக்டர் பால் பாவர் தலைமையில் ஒரு கோஷ்டியார் 23,000 அடி உயரம் வரை ஏறினர்கள். 1939-இல் ஹெர் பேட்டர் ஆவ்ஷ்னேட்டர் என்பவர் தலைமையில் இன்னொரு ஜெர்மானியக் கோஷ்டியார் நங்கபர்வதத்தில் ஏறிச் சில பகுதிகளை ஆராய்ந்து திரும்பினர்கள். 1934-இல் டாக்டர் திரென்ஃபர்த் தலைமையில் 'மேரி ராணி' என்ற மலையைச் சேர்ந்த நான்கு சிகரங்களிலும் ஒரு கோஷ்டியார் ஏறிப் பார்த்து விட்டார்கள்.

ரிஷி கங்கா பிரதேசத்துக்கும் கிளேஷியர் உள்ள நந்தாதேவிப் பிரதேசத்துக்கும் நடுவே யாருமே போக முடியாது என்று சொல்லி வந்தார்கள். ஆனல் 1934-இல் ஷிப்டன், டில்மன் என்ற இரண்டு பேரும் அது சாத்தியம் என்று தம் விடாமுயற்சி மூலம் காட்டிவிட்டார்கள்.

இவர்களே பதரிநாதத்திலிருந்து கங்கோத்ரிக்குச் சதோப்நாத் கணவாய் வழியாகவும் சென்று, கங்கோத்ரியில் கிளேஷியர் தோன்றும் இடத்தை ஆராய்ந்தார்கள். நந்தாதேவியின் தென்மேற்குப் பகுதியில் ஓர் ஆங்கிலோ-அமெரிக்கக் கோஷ்டியாரோடு டில்மன், ஒடல் என்ற இரண்டு பேரும் ஏறிப்பார்த்திருக்கிருர்கள். இங்கே போய்த் திரும்புவது மிகவும் சிரமமான காரியம். இந்தச் சிகரம் கண்ணுக்கு வெகு ரம்மியமாக இருக்கும்.

1939-இல் போலிஷ் கோஷ்டி ஒன்று நந்தாதேவிச் சிகரத்தின் கிழக்கு உச்சியில் தென்மேற்கு வழியாக ஏறிவிட்டது. இதற்குப் பின் காஞ்சனஜங்கா பகுதியில் 1936-இல் ஸினியோலேகு (ஏற முடியாத உச்சி) என்ற சிகரத்தில் ஜெர்மன் கோஷ்டி ஒன்று ஏறிவிட்டது. இமாலயத் தொடரிலே மிகவும் அழகான சிகரங்களில் இதுவும் ஒன்று. 1937 கோடையில் சோமோல்ஹரி (23,997 அடி உயரம்) என்ற சிகரத்தில் ஸ்பென்ஸர் சாப்மான் என்பவரும் மாமா சிகரத்தில் (23,860 அடி உயரம்) ஸ்மித், காப்டன் ஆலிவர் என்ற இரண்டு பேரும் ஏறிவிட்டார்கள்.

அந்த ஆண்டிலேயே ஸ்மித், திடகாத்திரர்களான சில திபேத்திய ஆட்களுடன் ஸான்ஸ்கார் தொடரிலுள்ள எழு சிகரங்களில் ஏறிவிட்டார். அவைகளில் நீலகிரி பர்வதம் என்பது 21,264 அடி உயரம் உள்ளது.

அப்போதுதான், திபேத்தியர்கள் மிர்கா என்று வருணிக்கும் 'கோரப் பனி மனித'னின் அடிச்சுவடுகளை அவர் கண்டார். ஆனால் லண்டனிலுள்ள விஞ்ஞானிகள் இதை ஆராய்ந்து கரடியின் காலடிச் சுவடு என்று தெரிவித்தார்கள். அப்படியிருந்தும் இன்னும் ஜனங்கள் இந்த விஷயத்தில் பழையபடியேதான் அபிப்பிராயப்படுகிறார்கள்.

1938-இல் ஹூஸ்டன் என்பவரின் தலைமையில் காரகோரம் தொடரில் K. 2 (28,150 அடி உயரம்) என்ற சிகரத்தில் ஏறச் சிலர் தீவிரமாக முயன்றார்கள். 1938 பிற்பகுதியில் டாக்டர் ஷ்வார்ட்ஸ்குபர் என்பவரின் தலைமையில் ஒரு ஜெர்மன் கோஷ்டி கேதாரநாதம், பதரிநாதம் மலைப் பிரதேசங்களிலும் கங்கை உற்பத்தியாகும் மலைப்பகுதியிலும் ஏறி ஆராய்ந்தது.

1932-இல் எவரெஸ்ட் சிகரத்தை ஆகாயவிமானத்திலிருந்து படம் எடுக்க ஒரு கோஷ்டியார் புறப்பட்டார்கள். அவ்வளவு உயரத்தில் மூச்சு விடுவதென்றால் சிரமம்.

இதற்கென்று பிராண வாயுவுக்கான வசதிகளைச் செய்துகொண்டு இரண்டு விமானங்களில் ஏறி அந்தக் கோஷ்டியார் பல அருமையான படங்களை எடுத்தார்கள். நேபாள சர்க்காரின் அநுமதியின் பேரில் பூர்ணியாவிலிருந்து இந்தக் கோஷ்டியார் இடையில் இன்னும் பல காட்சிகளைப் படமெடுத்தார்கள்.

1938-இல் ராயல் விமானப் படையைச் சேர்ந்த ஒரு கோஷ்டியார் ரிஸால்புரிலிருந்து கில்கிட் வரை மேற்பார்வையிட்டார்கள். சிந்துநதிப் பள்ளத்தாக்கு, நங்க பர்வதம் இவை வழியாக ரிஸால்புரிலிருந்து கில்கிட் 286 மைல். ஐந்து விமானங்கள் ரிஸால்புரிலிருந்து புறப்பட்டு 2 மணி 20 நிமிஷத்தில் கில்கிட் போய்ச் சேர்ந்துவிட்டன. பிறகு அவை ஹூன்ஸா, நாகர், ராஜ்கூட் பகுதிகளின் மேல் பறந்து சென்றன. நங்க பர்வதம், ராகாபோஷி முதலிய பல முக்கியமான இடங்களிலுள்ள காட்சிகளை விமானிகள் படம் எடுத்தார்கள். இப்போது நம் விமானப்படையும் அடிக்கடி இந்த இடங்களுக்குப் போய் வருகிறது.

ஸர்வே இலாகாவைச் சேர்ந்தவர்கள் கார்வால் குமாவூன் பகுதியில் பல இடங்களை மீண்டும் ஆராய்ந்திருக்கிறார்கள். ஆயினும் இதுவரை கைலாசம் என்று நாம் போற்றும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிப் பார்க்க யாராலும் முடியவில்லை; அதேமாதிரி 'பனி மனிதனை'ப் பற்றிய ஆராய்ச்சிகளும் பலன் அளிக்கவில்லை. இதுவரை ஏறிய ஒவ்வொரு கோஷ்டியாரும் இவ்வளவு தூரம் ஏறி அந்தப் பனியையும் குளிரையும் சமாளித்ததே அதிசயந்தான். இன்னும் போட்டி போட்டுக்கொண்டு அநேகம் பேர் அந்தச் சிகரத்தை எட்டிப் பிடிக்கத்தான் முயன்று வருகிறார்கள். இந்தியாவிலும் சமீபத்தில் பல வாலிபர்கள் இப்படி ஏற முற்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

விடாமுயற்சி இருந்தால் என்றாவது ஒரு நாள் இவர்கள் நிச்சயமாக வெற்றி காணமுடியும்.

பத்து லட்சம் டாலர் இனாம்

★

நீங்கள் ஒரு நல்ல யோசனை சொன்னால் போதும்; அது இந்த ஸ்தாபனத்தாருக்குப் பிடித்திருந்தால் நிச்சயமாக உங்களுக்குக் கூட இவ்வளவு தொகை இனாமாகக் கிடைக்கும். பால் பர்ஃபி என்பவர் 'லுக்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் எழுதிய ஒரு விவரத்தை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை.

ஒரு கோடி டாலருக்கு மேல் கையில் வைத்துக் கொண்டு, அதை எப்படிச் செலவழிப்பது என்று தெரியாமல் தவிக்கிறார்கள் சில ஆசாமிகள் என்றால், யாருக்குத்தான் ஆச்சரியமாயிருக்காது? அமெரிக்காவைச் சேர்ந்த போஸ்டன் நகரில் உள்ள சிலர் உண்மையில் இப்படித்தான் தவிக்கிறார்கள். இந்தப் பணம் முழுவதையும் செலவழிக்க வழி சொல்லுகிறவர்களுக்குப் பத்து லட்சம் டாலர் இனாம் அளிக்கவும் அவர்கள் தயாராயிருக்கிறார்கள்.

இந்தக் கோடி டாலரின் வரலாறு என்ன தெரியுமா? 1922-இல் ஜார்ஜ் ராபர்ட் வொயிட் என்ற ஒரு கோடீசுவரர் இறந்து போனார். குட்டிக்குரா என்ற உலகப் பிரசித்தி பெற்ற ஸோப்பும் தைலமும் தயாரித்ததன் மூலம் ஏராளமான பணம் அவருக்குச் சேர்ந்திருந்தது. அந்தப் பணத்தைத் தாம் இறந்த பின் விநியோகம் செய்வதற்கு ஓர் உயில் எழுதிவைத்தார். அந்த உயிலில் கண்ட ஓர் இனந்தான் இந்தப் பணம்.

1922 ஆரம்பத்தில் 55 லட்சம் டாலராக இருந்தது இந்தத் தொகை. இதற்கு வொயிட் தர்ம நிதி என்று பெயர். "போஸ்டன் நகரை அழகுபடுத்தி, போஸ்டன் நகரவாசிகளுக்குச் சௌகரியங்கள் செய்து தரக்கூடிய காரியங்களில் இந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டும்" என்று தம் உயிலில் வொயிட் ஒரு நிபந்தனை விதித்திருந்தார். 'இதுதானா பிரமாதம்! இதற்கு எத்தனையோ வழிகள் கண்டுபிடிக்கலாமே என்றுதானே நமக்குத் தோன்றுகிறது? அதுதான் இல்லை. வொயிட் லேசுப்பட்டவர் அல்ல. தம் நிபந்தனைக்கு ஒரு ஷராவும் சேர்த்திருந்தார். "ஆனால், மதம், அரசியல், கல்வி சம்பந்தமான காரியங்களுக்கோ, பொதுவாக நகரசபை புரிய வேண்டிய கடமைகளுக்கோ இந்த நிதியிலிருந்து துளிக்கூடச் செலவழிக்கக்கூடாது" என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இதுதான் பெரிய சங்கடமாயிருக்கிறது.

நிதியின் நிர்வாகிகள் எவ்வளவோ தீரமாய் முயன்று, இந்தப் பணத்தில் ஓரளவைச் செலவழித்தார்கள். குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் ஆரோக்கிய வாசஸ்தலங்கள் கட்டினார்கள்; இரண்டாவது உலக யுத்தத்தில்

மாண்ட போஸ்டன் நகர வீரர்களுக்கு ஞாபகார்த்த மண்டபம் கட்டினார்கள்; விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்தார்கள்; ஏழை மக்கள் வசிக்கும் சேரியில் ஒரு நீச்சல் குளம் அமைத்தார்கள். இப்படியெல்லாம் செய்ததில் 60 லட்சம் டாலர் செலவழிந்தது. ஆனால், வட்டிக்கு வட்டியும் முதலுமாகச் சேர்ந்து, செலவெல்லாம் போக ஒரு கோடியே பத்து லட்சம் டாலராக இந்த நிதி இப்போது ஊறிவிட்டது. இதோடு போயிற்றா? இன்னும் ஊறிக் கொண்டே வருகிறது.

நிதியின் தர்மகர்த்தர்கள், இந்த வருஷம் எப்பாடு பட்டாவது இதில் ஒரு கோடி டாலரைச் செலவழித்தே தீர்ப்பது என்று பல்லைக் கடித்துக்கொண்டு தீர்மானமாயிருக்கிறார்கள். அப்படிச் செலவழிப்பதற்கு எந்த மகாநுபாவனின் மூளையில் என்ன அபூர்வமான யோசனை உதிக்கப் போகிறதோ, யார் கண்டார்?

இப்போதே ஒருவர் சொன்ன யோசனையை நிதி நிர்வாகிகள் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். உயிலின் கர்த்தாவான வொயிட் எப்போதுமே போஸ்டன் நகரின் ஒரு தொல்லையைப்பற்றிப் புகார் செய்து வந்தாராம். அங்கே புகை மிகவும் கடுமையாய் எந்நேரமும் சூழ்ந்திருக்கிறது என்பதுதான் அவர் புகார். நகரத்துப் புகையையெல்லாம் ஒரேயடியாய்ச் சேகரித்து வெளியேற்றலாம் என்று ரால்ஃப் கூப்பர் என்ற சிற்பி இந்த நிதி நிர்வாகிகளுக்கு ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்.

போஸ்டன் நகரத்தின் சகல கட்டிடங்களிலும் உள்ள புகைக் கூண்டுகளையெல்லாம் அடைத்து மூடிவிட வேண்டும். பூமிக்குள் டன்னல்கள் கட்டவேண்டும். அட்லாண்டிக் கடலில் ஒரு மைல் சுற்றளவும் ஆயிரம் அடி உயரமும் ஒரு பெரிய சூளை கட்ட வேண்டும். அந்தச் சூளைக்குள் இந்த டன்னல்களையெல்லாம் கொண்டு போய் இணைக்க வேண்டும். இப்படிச் செய்தால், நகரின் புகை முழுவதும் அந்த டன்னல்கள் மூலம் பெரிய சூளைக்குள் போய்ச் சேர்ந்து, நடுக்கடலில் வெளியேறிவிடும் என்கிறார் சிற்பி.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற என்ன செலவாகும் என்று எஞ்சினீர்களை நிதி நிர்வாகிகள் எஸ்டிமேட் கேட்டிருக்கிறார்கள். புகை விரட்டும் இந்த ஏற்பாட்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவாகாதென்றால்தான், இதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

இன்னொருவர் இதே மாதிரி சொன்ன விசித்திரமான ஒரு யோசனையை முன்னே பரிசீலனை செய்துபார்த்தார்கள். போஸ்டன் நகர ரஸ்தாக்களில் சில சமயம் பனி உறைந்து கட்டி கட்டியாக இருந்துவிடுமாம். இரு புற மேடைகளிலும் யாருமே நடக்க முடியாதாம். இந்தத் தொல்லைக்குப் பரிகாரமாக, பூமிக்குள் 'ஹீட்டர்' (மின்சாரக் கும்மட்டி) பலவற்றை எங்கும் அமைத்துவிடலாம் என்று தாமஸ் மர்ஃபி என்பவர் யோசனை கூறினார். இந்தக் கும்மட்டிகளால் பனிக்கட்டி உருகி நீராகும். அந்த நீரை வீணடிக்க வேண்டியதில்லை. தோட்டங்களுக்குப் பயன்படுத்தி நகரையே அழகுபடுத்தலாம் என்று மர்ஃபி அபிப்பிராயப்பட்டார்.

இந்தத் திட்டம் என்னவோ நன்ருகத்தான் இருக்கிறது. ஆனல், இதற்கு ஆகக்கூடிய செலவை நிதி நிர்வாகிகள் மதிப்பிட்டுப் பார்த்தபோது, இரண்டு கோடி டாலர் வந்தது. ஆகவே, இது சாத்தியம் அல்ல என்று அவர்கள் தள்ளிவிட்டார்கள்.

இந்த நிதியின் மானேஜராக 1922 முதல் இருந்து வந்து இதைப் பராமரிக்கிறவரின் பெயர் ஜார்ஜ் ட்ரிஸ்கால். இந்த நிதியை எப்படியாவது அபகரித்து விடவேண்டுமென்று எத்தனையோ பே[illegible] சூழ்ச்சியாகவும் முயன்று ப[illegible]துவிட்டார்கள். மானேஜருக்கு லஞ்சம் கொடுக்கப் பல பேர் முன் வந்தார்கள். ஒரு சமயம் ஒரு திருடனே வந்து நடு ரஸ்தாவில் இவரை நிறுத்தி வைத்து, "கொண்டு வா பணத்தை" என்று மிரட்டினன். "பணம் என் கையில் ஏதப்பா? நான் சம்பளம் வாங்கும் காவல்காரன்; அவ்வளவுதான்" என்ருர் ட்ரிஸ்கால். திருடன் நம்பாமல் இவர் ஜேபியில் கையை விட்டுத் துழாவினன். அதில் ஆறே ஆறு டாலர்தான் இருந்தன. திருடன் எரிச்சலடைந்து, இவர் முகத்திலே கரியைத் தடவிவிட்டு ஓடிப்போனன்.

ஒரு பெண், "என் பழைய கணவனை விவாக ரத்துச் செய்து விட்டேன். எனக்கு முப்பது வயதுதான் ஆகிறது. உங்களை மறுபடி மணந்துகொள்ளத் தயாராயிருக்கிறேன். வொயிட் நதியைக் கொண்டு போஸ்டன் நகரில் மிங்க் என்ற விலங்குகள் பண்ணை ஒன்றை அமைக்க எப்படியாவது நிதியின் தர்மகர்த்தர்களைத் தூண்டி விடுங்கள். அந்தப் பண்ணைக்கு என்னை எஜமானியாகச் செய்துவிட்டால், நானும் நீங்களும் சௌக்கியமாய் வாழலாம்" என்று ட்ரிஸ்காலுக்கு ஒரு கடிதம் எழுதினள்.

"அம்மா, நான் ஏற்கனவே கல்யாணமாகி, சௌக்கியமாயிருக்கிறேன். தவிர, மிங்க் என்ற விலங்கின் வாசனையே என் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது" என்று பதில் எழுதி அந்த அம்மாளின் காதலை ட்ரிஸ்கால் நிராகரித்துவிட்டார்.

இப்படி விநோதம் விநோதமான பல யோசனைகளை நிதியின் நிர்வாகிகள் தள்ளிவிட்டார்கள்.

இந்த நிதியை வைத்த வொயிட் என்பவரின் ஞாபகார்த்த நாள் ஒன்றை இந்த வருஷம் போஸ்டன் நகரில் பெரிய திருவிழாவாகக் கொண்டாட நிதி நிர்வாகிகள் தீர்மானித்திருக்கிருர்கள். அதற்குள் இதில் எவ்வளவு அதிகமான பணத்தை உயிலின் நிபந்தனைப்படி செலவழிக்க முடியுமோ அவ்வளவையும் எப்படியாவது செலவழித்தாகவேண்டும் என்று அவர்கள் உறுதியோடு இருக்கிருர்கள்.

இதை எப்படிச் செலவழிப்பது என்ற யோசனையை உலகத்தின் எந்த மூலையில் உள்ள யார் வேண்டுமானுலும் சொல்லலாம். சொல்லிப் பத்து லட்சம் டாலரை அப்படியே தட்டிக்கொண்டு போகலாம். யோசனையைத் தெரிவிப்பவர்கள், 'ஜார்ஜ் வொயிட் ஸிட்டி ஃபண்டு, ஸிட்டி ஹால், போஸ்டன், மஸாசுஸெட்ஸ், ஐக்கிய அமெரிக்கா' என்ற விலாசத்துக்கு எழுதவேண்டும். (குறிப்பு: யோசனை அங்கீகாரம் பெறுமா என்பதற்கு நாம் உத்தரவாதம் கொடுக்க முடியாது.)

கார்ட்டூன் கதம்பம்



பிரஜா - சோஷலிஸ்ட் இணைப்புக்குப் பின் சென்னை ஐக்கிய ஜனநாயக முன்னணியில் கிருஷக் மஜ்தூர் பிரஜா கட்சி படும் பாடு.

—'சங்கர்ஸ் வீக்லி'



எகிப்தின் எதிர் காலம் எப்படி இருக்கும்?

—'போரம்'

தென்னாப்பிரிக்க நிறவெறி என்னும் எரிமலை என்று வெடிக்குமோ, சொல்ல முடியாது. அப்புறம் மலான் கதி என்னவாகும்?

—'ப்ளிட்ஸ்'

அமெரிக்கச் சின்ன மீனும் ருஷியப் பெரிய மீனும்.

—'மின்னியாபோலிஸ் ட்ரிப்யூன்'

கானடாவின் பழங்குடிகளான இவர்கள் இப்போது என்ன நிலையில் இருக்கிறார்கள்!

'கலைமான்' ஜாதியார்

மாக்ஸ் விக்ஸ் - ஜாய்ஸ்



கலைமான்

கானடாவின் வடக்கு எல்லையில் காட்டின் ஓரமாகத் தகரத் தட்டுப்போல், பரந்த ஏரி ஒன்று இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன் கோடை நாட்களில் நான் அந்தப் பக்கம் அடிக்கடி விமானத்தில் சுற்றிப் பறந்து பார்ப்பது வழக்கம். அந்த ஏரிக்குக் 'கலைமான் ஏரி' என்று தேச படத்தில் பெயர் போட்டிருந்தது. ஆனால் அந்தப் பக்கம் நான் எவ்வளவு தேடியும் ஒரு கலைமானைக்கூடக் காணவில்லை. மனித நடமாட்டமும் இல்லை. எனக்கு இது வியப்பாக இருந்தது. அக்கம் பக்கத்தில் நெடுநாளாக வசித்துவரும் கனேடியர்களை இதைப்பற்றி எத்தனையோ தரம் விசாரித்திருக்கிறேன். ஆனால் அங்கே கலைமான் இருந்ததா, அங்கிருந்த பழங்குடிகள் என்ன ஆனார்கள் என்ற விவரம் ஒன்றும் தெரிந்தபாடில்லை.

இந்த விஷயத்தை அப்புறம் மறந்தே போய்விட்டேன். சில தினங்களுக்கு முன் பார்லி மோவாட் என்பவர் எழுதிய ஒரு புத்தகத்தைப் படிக்க நேர்ந்தது. புத்தகத்தின் பெயர் 'கலைமான் ஜாதியார்.' முன்னே புதிர்போல் விளங்காதிருந்த பல விஷயங்கள் உடனே புரிந்தன.

சிறு பிள்ளையாக இருக்கும் போதே பனி சூழ்ந்த ஆர்க்டிக் பிரதேசத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று மிஸ்டர் மோவாட்டுக்கு ஒரு பித்து உண்டு. ஆகவே, இது சம்பந்தமான புத்தகங்களையெல்லாம் ஆவலுடன் படித்து வந்தார். கனேடியச் சர்க்காரின் பழைய தஸ்தாவேஜி ஒன்றில் 'இஹால்'மியட் அல்லது கலைமான் ஜாதியார்' என்று ஒரு ஜாதியாரின் பெயர் இருந்தது. இவர்கள் வெள்ளைக்காரர், சிவப்பிந்தியர், எஸ்கிமோ ஜாதியார் யாருடனும் சேராமல் தங்கள் முன்னோர் ஆதியில் வாழ்ந்தது போலவே எங்கோ வசித்து வருவதாகத் தெரிந்தது.

இந்த ஜாதியாரைத் தேடி அலைந்து கண்டுபிடித்து மோவாட்

மூலம்: ஜான் ஆவ் லண்டன் வீக்லி (ஆங்கிலம்: 29-8-'52), லண்டன்.

கலைமான் வேட்டை

இவர்களுடன் வாழ்ந்த வரலாற்றை இந்தப்புத்தகத்தில் விவரமாகக் காணலாம். சென்ற மகா யுத்தத்தின்போது கனேடிய ராணுவத்தில் சேர்ந்து ஐரோப்பாவுக்குப் போய்வந்தவர் மோவாட். யுத்தத்தில் வெறுப்புத் தட்டிவிட்டது அவருக்கு. கடைசியில் இஹால்மியட் என்ற இந்தப் பழங்குடி மக்களைத் தேடப் புறப்பட்டார். இவர்கள் வசித்து வந்த இடத்துக்குப் 'பாரன் லாண்ட்ஸ்' (பொட்டல் பிரதேசம்) என்று பெயர். அதில் நுழைவதே வெகு சிரமமான காரியம். இருந்தாலும் ஜான் இங்கர்ப்ரிட்ஸன் என்ற நார்வேக்காரர் ஒருவரும், ஜானி புராஸோ என்ற வழி கண்டுபிடிக்கும் ஒரு பழைய விமானியும் அவருக்கு ஒத்தாசை செய்ததால் அங்கே போய்ச் சேர்ந்தார். அந்த நார்வேக்காரரே தனித் தினுசான பேர்வழி. ஆற்றுக்கும் கடலுக்கும் 500 மைல் தள்ளியிருக்கும் ஓர் ஊரில், தம் வீட்டுப் புழைக்கடையில் ஒரு கப்பல் கட்டி அதை ஹட்ஸன் விரிகுடாவுக்குக் கொண்டு வந்தவர் என்றால் பாருங்கள்! ஆர்க்டிக் பிரதேசத்தில் புராஸோ விமான சர்விஸ் நடத்தி வந்தார். அவ்வளவு குறைவான கட்டணத்துக்கு யாரும் ஓட்டவே மாட்டார்கள். பொழுது போக்குக்காகத்தான் அவர் ஓட்டி வந்தார். இந்தப் பொட்டலில் அந்த விமானி, மோவாட்டைக் கொண்டு விட்டார். அங்கே ஒரு வேடனைத் தமக்குத் துணையாக அழைத்துக் கொண்டு அவர் 'கலைமான்' ஜாதியாரைப் பார்க்கப் போனார். இவர்கள் உண்மையாகவே உணவு, உடை, ஆயுதங்கள் மற்றக் கருவிகள் எல்லாவற்றுக்கும் கலைமானையே நம்பி வாழ்ந்து வந்தார்கள்.

பாலைவனத்தில் வாழும் அராபியரும் இப்படி ஒட்டகத்தையே நம்பி வாழ்கிறவர்கள்தான். அதில் பலவகை உண்டு. அவர்கள் பாஷையில் ஒவ்வோர் ஒட்டக வகைக்கும் தனிப் பெயர் உண்டு. அப்படித்தான் குறிப்பிடுவார்களே யொழியப் பொதுப் பெயரால் அதிகமாகக் குறிப்பிட மாட்டார்கள். இதே மாதிரி இந்தக் கலைமான் ஜாதியாரும் 'துக்து' என்ற பொதுப் பெயரை அவ்வப்போது உபயோகித்தாலும் ஒவ்வொரு கலைமான் வகையையும் தனித்தனிப் பெயரிட்டு அழைக்கிறார்கள். இப்படிப் பத்துப் பன்னிரண்டு பெயர்

குழந்தையுடன் 'கலைமான்' ஜாதிப் பெண்மணி

'கலைமான்' ஜாதியார்

கலைமானுக்கு உண்டு என்று தெரிந்ததும் மோவாட்டுக்கு ஆச்சரியமாக இருந்ததாம்.

இந்த வகுப்பு எஸ்கிமோ ஜாதியாரின் நீதி, ஒழுக்க முறை எல்லாம் எளிமையாகவும் இருந்தன. சமூகத்தில் மற்றவர்களுக்குப் பாதகம் நேராதபடி ஒருவன் நடந்து கொண்டானானால் போதும். அவனவன் சம்பாதித்த உணவு, உடை எல்லாம் அவனவனுக்கே சொந்தம் என்றாலும், இன்னொருவனுக்கு மிகவும் தேவையானபோது சொந்தக்காரனைக் கேட்காமலே அவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

இப்படியிருந்தும் ஒரு சமயம் ஒஹோட்டோ என்ற அவர் நண்பன் பட்ட அவதியைக் கேட்கும்போது அவருக்கு மிகவும் அவமானமாக இருந்ததாம். ஒஹோட்டோவும் அவனைப்போல் இன்னும் இரண்டு குடும்பத்தாரும் ஒரு சமயம் உணவு கிடைக்காமல் திண்டாடினார்களாம். அப்போது அவர்கள் பல நாள் பசியுடன் நடந்து தங்கள் நாட்டின் எல்லையில் வசிக்கும் வெள்ளை வியாபாரி ஒருவனிடம் போனார்கள். அங்கே அவன் வளர்த்த நாய்கூட நன்றாகச் சாப்பிட்டுக் கொழு கொழு என்று இருந்தது. இந்த ஜாதியார் 'பர்' என்ற மயிரடர்ந்த தோலை விற்பதற்காகத் தான் அங்கே வருவது வழக்கம். இவர்கள் வெறுங் கையோடு வந்ததைப் பார்த்ததும் அந்த வியாபாரி துப்பாக்கியைக் காட்டிச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தி ஒரு சின்ன மாவு மூட்டையை அவர்கள் பின்னால் விட்டெறிந்து அவர்களை விரட்டி அனுப்பிவிட்டானாம், பாவம். அப்படி இருந்தும், "அந்த வியாபாரிக்கு நாங்கள் சொல்வதும் எங்கள் நிலையும் புரிந்திருக்காது. அதனால்தான் அவன் எங்களை விரட்டி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் வாஸ்தவமாகவே கைவசம் உணவு இருப்பவன் எவனாவது பட்டினி கிடப்பவர்களை அப்படி விரட்டியிருப்பானா, ஐயா!" என்றானாம் ஒஹோட்டோ.

இந்த ஜாதியார் படும் துன்பங்களையும், இந்த மாதிரி பல உருக்கமான சம்பவங்களையும் சர்வசகஜமாக எளிய முறையில் மோவாட் எழுதியிருக்கிறார்.

அந்த வியாபாரி மட்டுமல்ல; அந்தப் பக்கம் இருக்கும் வெள்ளைக்காரர்களே பொதுவாக இப்படித்தான் இருக்கிறார்கள். 30 ஆண்டுகளுக்கு முன்னால்கூடத் துப்பாக்கி, வெடி மருந்து எல்லாம் இவர்களுக்கு விற்க வரும் வியாபாரிகள், 'கலைமானின் நாக்கு இன்ன அளவு கொண்டு வந்தால் துப்பாக்கி தருகிறோம்' என்று சொல்லவே 'கலைமான் எரி'ப் பக்கம் வசித்து வந்த அநேகம் மான்களை இந்த ஜாதியார் ஏராளமாகச் சுட்டுக் கொன்று அவைகளின் நாக்கை வியாபாரிகளுக்குக் கொண்டு வந்து

கொடுப்பார்கள். அவ்வப் போது தங்கள் உணவுக்குப் பயன்பட்டு வந்த கலைமான்களை இப்படி வீணுகக் கொன்று குவித்தார்கள்.

'ஓர் இடத்தில் ஆயிரக்கணக்கில் மான் கூட்டம் இருந்திருக்க வேண்டும் என்று அங்கே ஆராய்ந்து பார்த்ததிலிருந்து தெரிந்தது' என்கிருர் மோவாட். தங்களிடமுள்ள துப்பாக்கி முதலிய சரக்குகளை விற்றுத் தீர்த்ததும் அந்த வியாபாரிகள் மூட்டையைக் கட்டிக்கொண்டு ஊர்ப் போய்ச் சேர்ந்தார்கள். அப்புறம் இந்தக் கலைமான் ஜாதியார் தங்களுக்கு இந்தப் பெயர் இருந்தும், மருந்துக்கும் ஒரு மான் கிடைக்காமல் உண்ண உணவின்றிப் பலவிதநோய்களுக்கு ஆளாகி மடிய வேண்டியதாயிற்று. இப்போது ஏதோ இரண்டொரு கலைமானைத்தான் அங்கே பார்க்க முடியும். 1948-வாக்கில் இங்கே இருந்த பழங்குடிகளில் ஏதோ 200 பேர்தான் உயிரோடிருந்தார்கள். அவர்களும் க்ஷீண தசையில்தான் இருந்தார்கள்.

கலைமான், ஸில்வர் ஃபாக்ஸ் என்ற ஒருவகைக்குள்ள நரி இவைகளை வேட்டையாடிக் கொண்டு வந்தால் நிறையக் காசு கிடைக்கிறதென்று இங்கிருந்த எஸ்கிமோக்கள் அதில் ஈடுபட்டு வந்தார்கள். ஆனல் காலடைவில் குள்ள நரித் தோலுக்கு மவுசு இராது போய் விடவே இவர்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. பழைய தொழில் திறமையெல்லாம் இதற்குள் மங்கிப்போய் விட்டது. இப்படிக் கவனிப்பாரற்றுப் போகவே கொள்ளை நோய், பட்டினி காரணமாக இவர்கள் கூட்டங் கூட்டமாக மடிய நேர்ந்தது. 1890-இல் ஆயிரக்கணக்கில் வாழ்ந்துவந்த இஹால்மியட் என்ற கலைமான் ஜாதியாரில் 1950-இல் 28 பேரேதான் இருந்தார்கள் என்ருல் பாருங்கள். மோவாட் கனேடியச் சர்க்காரிடம் இதைப்பற்றித் தெரிவித்தார். ஆனல் அவர்கள் இந்த 28 பேருக்கும் மீன் பிடிக்கும் வலை மட்டும் வாங்கிக் கொடுத்துவிட்டுச் சும்மா இருந்துவிட்டார்கள். ஆர்க்டிக் குளிரைத் தாங்குவதற்குக் கொழுப்பு நிறைந்த உணவு மிகவும் அவசியம். மீன் பிடிக்க வேண்டுமென்ருல் 10 அடி ஆழம் பனிக்கட்டியை உடைத்தால்தான் சாத்தியம் என்ருல் அதற்குமேல் சொல்வானேன்!



'கலைமான்' ஜாதியாரின் இன்றைய நிலை

மோவாட் மறுபடியும் சர்க்காரிடம் முறையிட்டுக்கொள்ளவே இந்த 28 பேரையும் ஹட்ஸன் விரிகுடா ஓரம் இருக்கும் சர்ச்சில் துறைமுகத்துக்குக்கொண்டுபோய், குறைந்த சம்பளத்தில் மீன் அடுக்கும் வேலை கொடுத்தார்கள் இந்தத் தொழில் ஒத்தாததால் ஒரு வருஷத்துக்கெல்லாம் மறுபடியும் அந்தப் பழைய பொட்டலுக்கே போய்த் தொலையட்டும் என்று அக்

கேயே இவர்களைத் திரும்பக் கொண்டு போய் விட்டுவிட்டார்கள்!

ஆனாலும் மோவாட் இவர்களை இப்படி அதோகதியாக விட்டு விடத் தயாராக இல்லை. இவர்களைக் கனேடியர்களாக ஏற்று, விரைவில் இவர்கள் உணவுக்கு வேண்டிய மான், மீன், திமிங்கிலம் எல்லாம் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று பாடுபடுகிறார். கடற்கரைப் பகுதிகளில் வாழும் பழங்குடிகளைத் தவிர வேறு யாரும் இவற்றை வேட்டையாடக்கூடாது என்று தடை விதிக்க வேண்டும் என்பது இவர் விருப்பம். "கிரீன்லாந்தில் வாழும் எஸ்கிமோக்களுக்கு டேனிஷ் சர்க்கார் பாதுகாப்பு அளித்திருக்கிற மாதிரி என் கனேடியச் சர்க்காரும் செய்யக்கூடாது? இந்த மக்களைக் காத்து இவர்களை நல்லபடியாகக் கவனித்து வந்தால் இவர்கள் கானடாவின் சிறந்த குடிகளாக விளங்குவார்கள்" என்கிறார் மோவாட்.

மகாத்மாவின் வாரிசு

பாபூஜீ (காந்தி) நோவாகாலியில் போய்த் தங்கியிருந்தார். ஒரு நாள் ஜவாஹர் அங்கே வந்தார்.

அப்போது, "பண்டிதரைச் சரிவரக் கவனித்துக்கொள். இந்தக் கிராமாந்தரப் பிரதேசத்தில் நான் எப்படியாவது சமாளித்துக்கொள்வேன். பெரிய பட்டணத்திலிருந்து வந்தவர் அவர். மலஜலம் கழிப்பதற்குக்கூட வேண்டிய வசதி இங்கே இல்லை. ஆகையால் என் கம்மோடை அவர் தங்கும் வரையில் அவருக்கு வைத்துவிடு" என்று பாபூஜீ சொல்லியிருந்தார். அந்தக் கட்டளைப்படி நான் பாபூஜீயின் கம்மோடைப் பண்டிதரின் அறையில் வைக்க எடுத்துச் சென்றேன். பண்டிதர் என்னிடமிருந்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு, "பாபூஜீக்கு எவ்வளவு சிரமமாயிருக்கும் என்று உனக்குக்கூடத் தெரியவில்லையே? நான் இவ்வளவு நாசுக்கான மனிதன் ஆகிவிட்டேனா?' என்றார்.

"பாபூஜீ சொன்னார்: அதனால்தான் கொண்டுவந்தேன்" என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முயன்றேன். ஆனால் அவர் சற்றுக் கடுமையாக, "பாபூஜீயைக் கவனித்துக்கொள்வது உன் பொறுப்பு. அவரே எப்போதும் கஷ்டத்தைத் தாம் அநுபவித்து மற்றவர்களுக்குச் சௌகரியத்தைக் கொடுக்கும் சுபாவமுடையவர். நானோ அவரைவிடச் சின்னவன். எங்கே வேண்டுமானாலும் போய் வருவேன். பாபூஜீ சொன்னாலும் சரி, அவர் தேவைக்குரிய பொருள்களை வேறு யாருக்கும் கொடுக்கக்கூடாது; தெரியுமா?" என்றார். பிறகு கொஞ்சம் சாந்தமடைந்து கனிவுடன், "பயப்படாதே, பாபூஜீ உன்னை ஒன்றும் சொல்லமாட்டார். அவரை அசௌகரியப்படுத்தக் கூடாது என்றுதான் சொன்னேன்" என்றார். நாட்டின் தந்தைக்கும் அவருடைய வாரிசான பண்டிதருக்கும் என்ன அற்புதமான ஒற்றுமை!

—மநு காந்தி

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: ஒரிஸ்ஸா அரசாங்க இலாகா தஸ்தாவேஜுக் கட்டு ஒன்றை ஒரு பசு தின்றுவிட்டதே; அந்தச் செய்தியை நீங்கள் கேள்விப் பட்டீர்களா?



பதில்: லஞ்சம், மோசடி இவற்றுக்குரிய சாட்சிகளெல்லாம் அழிந்து போயிருக்குமே! ஆஹா! நம்முடைய புனிதமான பசு அல்லவா?

* * *

கே: சட்டங்களால் மனிதனை ஒழுக்கமும் தூய்மையும் உடையவனாகச் செய்ய முடியுமா?

ப: சட்டப்பாட்டினாலும் தண்டனையினாலும் மனிதனைத் திருத்த முடியாது. நல்ல பரம்பரை, சரியான சூழ்நிலை, தக்க சந்தர்ப்பம், சில லட்சியம் இவைகளே நல்ல வாழ்க்கைக்கு அவசியமானவை.

* * *

கே: தரித்திரத்துக்கு என்ன சுவை?

ப: நம்பிக்கையோடிருந்தால் புளிக்கும்; ஆசையோடிருந்தால் கசக்கும்.

* * *

கே: சுதந்தர இந்தியா உலக அபிவிருத்தியின் பொருட்டு என்ன செய்திருக்கிறது?

ப: மற்ற நாடுகளில் உள்ள அரிசி, கோதுமை, மைலோ இவைகளைக் குறையச் செய்து அந்த நாட்டு மக்களைப் பின்னும் உழைத்து வேலை செய்யும்படி செய்திருக்கிறது.

* * *

கே: இளங் காதலர்களுக்கு மலர்கள் என்ன செய்கின்றன?

ப: காதலர்களின் பைத்தியக்கார உணர்ச்சியை விளக்கும் பொருட்டு அவை தம் உயிரையே கொடுக்கின்றன.

* * *

கே: அமெரிக்காவில் ஒவ்வொருவருக்கும் உரிய சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறார்களா?

ப: அமெரிக்காவில் யாரும் சந்தர்ப்பத்தைக் கொடுப்பதில்லை. ஒவ்வொருவனும் சந்தர்ப்பத்தைத் தானே பற்றிக்கொண்டு ஓடுகிறான்.

* * *

கே: ஆடவர்கள் அதைக் காதல் என்று சொல்கிறார்கள்; பெண்கள் என்ன சொல்கிறார்கள்?

ப: ஆடவர்கள் அப்படிச் சொல்வதில்லை; சௌகரியம் என்கிறார்கள். பெண்கள் பாதுகாப்பென்கிறார்கள். கவிகளோ இந்த இணைப்பைக் காதலென்கிறார்கள்.

* * *

கே: கடவுள் நாட்டைக் காப்பாற்றுகிறார் என்கிறார் ராஜாஜி; ஆனால் மந்திரிகள் சம்பளம் வாங்குகிறார்கள். என்ன வேடிக்கை!

ப: கோவிலில் இருக்கும் குருக்களும் அப்படித்தானே?

* * *

கே: அரசியல் பந்தயத்தில் கடைசியில் வெற்றி யாருக்கு?

ப: அதிக முட்டாள்கள் யாரைப் பின்பற்றுகிறார்களோ அந்தப் பேர்வழிக்குத்தான்.

* * *

கேள்வி: உருது இனிய பாஷையா?

ப: ஆம். அது மிகவும் இனிமையானது. நம்மேல் திணிக்கிறார்களே, அந்த ஹிந்தியைவிட அதிக இனிமையானது.

* * *

கே: கிழவர்களுக்குத் துருவி நாடும் கண்கள் இருக்கின்றன.

ப: ஆம். தாம் இழந்த இளம் பருவத்தைத் தேடுகிறார்கள்.

* * *

கே: இங்கிலீஷ் இலக்கியம் இந்தியர்களுக்கு எப்படி உதவி செய்தது?

ப: அது அவர்களிடையே சுதந்தரக் கனலை மூட்டியது.

* * *

கே: அயல் நாட்டுக்காரர்களெல்லாம் இந்தியாவின் ஐந்து வருஷத் திட்டத்தை மிகச் சிறந்தது என்று சொல்லும்போது நீங்கள் மட்டும் ஏன் கண்டிக்கிறீர்கள்?

ப: இந்தத் திட்டத்துக்கு அயல் நாட்டார் தரப்போகிற சாமான்களுக்கு நாம் அல்லவா பணம் தரவேண்டியிருக்கிறது? பணம் கொடுக்கிறவனுக்குக் கண்டிக்கும் உரிமை இல்லையா?

* * *

கே: பெண்களுக்கு மல்யுத்தம் தெரியாதா?

ப: தெரியுமே! ஆனால் அவர்கள் முதலில் தோல்வியடைகிறார்கள்; கடைசியில் வெல்கிறார்கள்.

* * *

கே: விடியற்காலையில் மலரின் மேல் தோன்றும் பனித்துளி எதைக் குறிக்கிறது?

ப: இரவில் இயற்கை மலரை மறைவில் மணந்ததை.

* * *

கே: நம்முடைய பொதுஜன ஊழியர்களாகிய பெரிய மனிதர்கள் பிரசங்கத்துக்குப் பின் பிரசங்கமாக முன்னேறுகிறார்கள்!

ப: நாமோ நம்பிக்கையிலிருந்து ஏமாற்றத்துக்குப் பின்னேறுகிறோம்.

* * *

கே: சட்டசபையில் நடக்கும் விவாதங்களின் தரத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இந்தியர்கள் எதிர்மறை அரசியலில் வல்லவர்கள்.



புதிய அணுச் சோதனை

டாக்டர் நீ. ரா. ஸ்ரீநிவாஸன்

****

சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் மாண்டிபெல்லோ என்ற இடத்தில் வெடித்த அணுக்குண்டு சம்பந்தமாக நம் நாட்டு விஞ்ஞானி ஒருவர் நேரில் அறிந்த விவரங்களை இதில் காணலாம்.

****

உலக அணுச்சக்திப்பரீட்சையில் மிகவும் மகத்தானதாக விஞ்ஞானிகள் கருதும் அணுச் சோதனைகள் இன்று ஆஸ்திரேலியாவில் நிகழ்ந்தன. உலக அணு அரங்கில் அமெரிக்கா முன்னணியில் நிற்பதாகப் பலர் கருதிவந்தார்கள். முதல் முதலில் ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் வெடித்த அணுக்குண்டுகள் அமெரிக்காவில் சிருஷ்டியாயின. பின்னர் அமெரிக்கா பசிபிக்மகா சமுத்திரத்திலுள்ள பிகினி என்னும் தீவில் அணுக்குண்டுச் சோதனைகள் நிகழ்த்தியது. எனினும், கடந்த சில வருஷங்களில் இங்கிலாந்தில் இதுபற்றி ஆராய்ச்சி பெருவாரியாக நடைபெற்றது. அதன் விளைவால் இன்று இங்கிலாந்து அணு அரங்கில் தலையெடுத்து நிற்கிறது; சில துறையில் அமெரிக்காவை மிஞ்சிவிட்டதாகவும் நிபுணர்கள் கருதுகிறார்கள். சமீபத்தில் இங்கிலாந்தில் நிகழ்ந்த அணு ஆராய்ச்சியின் விளைவால் அணுச்சக்தி கொண்ட ராக்கட்டுகள், வெடி குண்டுகள், நாசகாரிகள், மேலும் அணுக்குண்டுகளை தூக்கிச் செல்லப் பாகன் இல்லாமல் பறக்கும் விமானங்கள் முதலியவற்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவைகளைப் பரிசோதிக்கவே ஆஸ்திரேலியாவில் சோதனைகள் நிகழ்ந்தன.

மாண்டிபெல்லோ

இன்று நடந்த சோதனைகளுக்குத் தேவையான ஆரம்ப ஆர்ப்பாட்டங்கள் இரண்டு வருஷங்களுக்கு முன்பே தொடங்கின. இங்கிலாந்தில் செய்த அணு அஸ்திரங்களைச் சோதனை செய்ய நல்லதோர் இடம் தேடினார்கள். ஆஸ்திரேலியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள மனித சஞ்சாரமில்லாத தீவுகளைச் சோதனைகளுக்கெனத் தேர்ந்து கொண்டார்கள். இவை சிறியனவும் பெரியனவுமான பல தீவுகள் அடங்கிய தீவுக் கூட்டமாகும். இவைகளுக்கு மாண்டிபெல்லோ தீவுகள் என்று பெயர்.

இந்தத் தீவுகள் சற்றேறக்குறைய வட்டவடிவில் சங்கிலி போல் ஒன்றையொன்று அடுத்து நிற்கின்றன. மாண்டிபெல்லோத் தீவுகளில் மிகவும் பெரிதாக இருப்பதற்கு ஹாமைட் தீவு என்று பெயர். தீவுகளுக்குள் நுழையும் வழிக்கு 'மேரி ஆன்' பாதை என்று பெயர். இதை அடுத்து இருப்பது வர்லே தீவு ஆகும். மாண்டிபெல்லோ தீவுகளில் சில நண்டு, நத்தை, பட்சிகள் போன்ற ஜீவராசிகளே உயிர் வாழ்கின்றன. இந்தத் தீவுகள் வடமேற்கு ஆஸ்திரேலி

மூலம்: சுதேசமித்திரன் (தமிழ்: 8-10-'52), மவுண்ட் ரோடு, சென்னை.

யாவில் உள்ள ஆன்ஸ்லோ என்னும் கடற்கரைப் பட்டணத்திலிருந்து 85 மைல் தூரத்தில் உள்ளன. மேற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகராகிய பர்த் என்னும் இடத்திலிருந்து ஆன்ஸ்லோ 800 மைல் வடக்கே உள்ளது. இந்தத் தீவுகளை அணுச் சோதனைகளுக்கெனப் பொறுக்கியதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு: ஒன்று, மாண்டிபெல்லோ தீவுகளில் மனித சஞ்சாரம் இல்லை; மற்றொன்று தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள ராக்கட் சோதனைக் களமாகிய ஊமரா என்னும் இடத்திலிருந்து ராக்கட்டுகளை எய்தால் அவை கீழே விழும் இடம் மாண்டிபெல்லோ ஆகும். இந்தச் சோதனைகளில் அணுக்குண்டு அடங்கிய ராக்கட்டுகளை வெடிக்க விடுவதால் ஊமராவும் மாண்டிபெல்லோவும் சேர்ந்து முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

இரண்டு வருஷ ஏற்பாடு

மாண்டிபெல்லோ சோதனைக்கென நுட்பமான ஏற்பாடுகள் கடந்த இரண்டு வருஷங்களாகத் தீவிரமாகச் செய்து வருகிறார்கள். சோதனை சம்பந்தமான சகல அம்சங்களும் மிகவும் ரகசியமாக இருந்து வந்ததனால் இதைப் பற்றிய விவரங்கள் உலகுக்கு வெளிவரவில்லை. ஆனால் சுமார் 6 மாதத்துக்கு முன்பு மாண்டிபெல்லோவின் அருகே மனிதர், கப்பல், விமான நடமாட்டம் அதிகமாக ஏற்பட்டதால் ரகசியம் ஒருவாறு வெளியாயிற்று. மேலும் சோதனை சம்பந்தமான விவரங்கள் லண்டனிலிருந்தும் வெளிவந்தன என்றாலும் சோதனையை ஒட்டிய முக்கிய விவரம் ஒன்றும் வெளியாகாமல் பாதுகாத்தார்கள். ஆஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் போதுமான தற்காப்பு முறைகளை மேற்கொண்டார்கள். சமீபத்தில் ஆஸ்திரேலிய அரசாங்கம் மாண்டிபெல்லோ பகுதியை ஒருவரும் அண்டமுடியாத இடமாகச் செய்தது. மாண்டிபெல்லோவுக்கு 45 மைல் தொலைவுக்குள் யாரும் செல்லமுடியாது. இந்தத் தீவுகளை அடுத்துப் பல்லாயிரம் சதுர மைல் கடற் பிரதேசம் ஆபத்தானது என்றும் அந்தப் பிராந்தியத்தில் கப்பலோ விமானமோ செல்லக் கூடாது என்றும் ஆங்கில அரசாங்கம் ஒரு கட்டளை விடுத்தது. சோதனைகள் நடக்கும்போது எதிரிகள் நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து கவனிக்காதபடி ஆஸ்திரேலியக் கப்பற்படை பாதுகாத்து வந்தது. சோதனைகளைப் பார்க்க வெகு சிலரையே அநுமதித்திருந்தார்கள் செய்தி ஸ்தாபனங்களையும் நிருபர்களையும் அநுமதிக்காதது வருந்தத்தக்கது என்று ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் அபிப்பிராயப்பட்டன.

டாக்டர் பென்னி

ஆஸ்திரேலிய அணுச் சோதனைகளை ஆங்கிலப் பிரதம மந்திரி சர்ச்சில் தாமே மேற்கொண்டு நடத்தினர். இவை சம்பந்தமான எல்லா விவரங்களையும் அவரே கவனித்துவந்தார். சோதனைகளை நேரில் மேற்பார்வையிட்டவர் உபதளபதி டார்லெஸ் என்பவர். ஆனால் சோதனைகளைக் கவனிக்க வந்தவர்களில் மிக முக்கியமானவர் டாக்டர் பென்னிதான். இவர் அணுச்சக்தி சம்பந்தமான சகல விஷயங்களிலும் உலகில் முதலாக எண்ணவேண்டியவர்.

இவருக்கு வயது 43. அணுக்குண்டு வெடிக்கப் புதிய சாதனம் ஒன்றை இவர் செய்தார். இதை அணு அரங்கில் முக்கியமானதாகக் கருதினார்கள். இவரது உயர்வை உணர்ந்து அமெரிக்க சர்க்கார் இவரை அந்த நாட்டுக்கு வந்துவிடுமாறு வேண்டியது. ஆனால் டாக்டர் பென்னி போக மறுத்துவிட்டு இங்கிலாந்தில் அணுவேலையை மேற்கொண்டார். இவர் சில வாரங்களுக்கு முன் தக்க பாதுகாப்புடன் இங்கிலாந்திலிருந்து விமானத்தில் சிங்கப்பூர் வழியாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார்.

மாண்டிபெல்லோ அணுச் சோதனைகளைக் கவனிக்க வூமராவிலும் மாண்டிபெல்லோவிலும் தக்க யந்திர சாதனங்களை அமைத்தார்கள். இவை அணுக்குண்டுகள், ராக்கட்டுகள் முதலியன விடுபடுவதையும், அவை போகும் மார்க்கத்தையும், வெடிப்பதையும், பின்னர் நிகழும் விளைவுகளையும் புகைப்படங்கள் மூலமாகவும், பல அறிகுறிகள் வகையாகவும் தெரிவித்தன. மேலும் மெல்போர்னிலும், ஸிட்னியிலும் விஞ்ஞானிகள் சுமார் 300 மைல் தூரத்தில் இருந்துகொண்டு அணுக்குண்டின் விளைவுகளைக் கவனித்தார்கள். அணுக்குண்டுகளையும் ராக்கட்டுகளையும் வெடிக்க வைத்ததோடு இவைகளைத் தடுக்கும் முறைகளையும் பரிசோதித்ததாகச் சொல்கிறார்கள்.

மாண்டிபெல்லோ அணுச் சோதனைகள் அணுவை மனிதன் அடக்கி அஸ்திரமாக்கியதை வெளிப்படுத்துகின்றன. இதை அணு அரங்கின் கடைசிச் சோதனைகள் என்று எண்ணவேண்டாம். இங்கிலாந்து நடத்தும் முதல் சோதனையே இது. இன்னும் மாண்டிபெல்லோவில் பல சோதனைகள் நிகழலாம். அணுக்குண்டும் அதன் அண்ணனாகிய ஹைட்ரஜன் குண்டும் தற்பொழுது மனித சமூகத்தை நடுங்க வைத்துக்கொண்டிருக்கின்றன. இவை உலகில் சாந்தியை நிலவவிடுமா என்பது வேறு கேள்வி.

வாள் தூளா?

கடற்கரையில் தமக்கு மிகவும் பிடித்தமான மதுபானக் கடை ஒன்றுக்கு ஒருவர் சென்றார்.

"அடேடே! இதென்ன? தரையெல்லாம் வாள் தூளைப் பரப்பியிருக்கிறீர்கள்? இது எப்போது முதல்?" என்று மானேஜரைக் கேட்டார்.

"இது வாள் தூள் அல்ல, ஸார்; நேற்று ராத்திரி இருந்த மேஜை நாற்காலிகள்" என்று பதிலளித்தார் மானேஜர்.

—'ஹ்யூமர்', ஆஸ்திரேலியா.

காரணம் என்ன?

ஜட்ஜி: உன்னை நம்பியவர்களையே நீ எப்படி மோசம் செய்யலாம்?

கைதி: ஆனால் என்னை நம்பாதவர்களை மோசம் செய்ய முடியாதே, பிரபுவே.

—'இல்லஸ்ட்ரேடட் வீக்லி', பம்பாய்.

கொலைகாரன்

அலெக்ஸாண்டர் குப்ரின்

சிறந்த ருஷியச் சிறுகதை எழுத்தாளர்களுக்குள் குப்ரின் ஒருவர். இவருடைய கதைகளில் ஆழ்ந்த கருத்து அடங்கி இருக்கும். இந்தக் கதையில் வரும் விஷயம் சின்னதாக இருந்தாலும் சிந்தனையைக் கிளறி விடக்கூடியதாக இருக்கிறது. இதை அன்பர் மீ. வி. சபரிராஜன் தமிழில் அழகாக மொழிபெயர்த்திருக்கிறார்.

அவர்கள் அப்போது நடந்து வரும் நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். மக்களைத் தூக்கிலிடுவது, துப்பாக்கியால் சுடுவது, உயிரோடு எரிப்பது இவைகளைப்பற்றிப் பலர் உற்சாகமாய்ப் பேசினார்கள். அமைதியை விரும்பும் பல சாதுக்கள் எப்படிப் பலாத்காரத்தால் உயிரை இழக்கிறார்கள் என்பதை அவர்கள் தெளிவாக விளக்கினார்கள்.

வீட்டுக்காரர் சொன்னார்: "வாழ்க்கைப் போக்கு எப்படி மாறிவிட்டது என்பதை நினைத்துப் பார்க்கும்போது பயங்கரமாயிருக்கிறது-இது நடந்தது ரொம்ப நாளைக்கு முன்பா?—இல்லை, ஐந்து வருஷங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன்—அப்போது பலாத்காரமாக யாராவது ஒருவரைக் கொன்றாலுங்கூட ருஷிய சமுதாயம் முழுவதுமே திடுக்கிட்டுப் போகும். ஆனால் இப்போதோ......ஒரு விதமான எச்சரிக்கையும் கொடுக்காமல் ஒரு கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள். குறிப்பிட்ட ஓர் ஆளைத் தூக்கில் இடுவதற்குப் பதிலாக, அந்தக் குற்றத்தைக் கனவில்கூட நினைக்காத வேறோர் ஆசாமியைத் தூக்கில் இட்டு விடுகிறார்கள். மக்களை இப்படி அலட்சியமாகச் சுடுவாருண்டா? நன்றாகப் படித்த பல வாலிபர்களை எந்தக் காரணமும் இல்லாமல் நடுத்தெருவில் சவுக்கால் அடிக்கிறார்கள்— இந்தமாதிரி சம்பவங்களைக் கண்டு யாரும் ஆச்சரியப்படுவதாகவோ பயப்படுவதாகவோ காணோம்."

ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த ஓர் ஆசாமி, எழுந்து போய்ச் சற்று முன்னால் உட்கார்ந்தார். அவர் பதற்றத்துடன் ஏதோ பேச விரும்புவதைப் போல் தோன்றியது; ஆம். பேசத் தொடங்கினார். சத்தம் மெதுவாக இருந்தது. ஒவ்வொரு சொல்லையும்

நிறுத்தி நிறுத்திப் பேசினர். மனத்துக்குள்ளிருந்த உணர்ச்சிப் பெருக்கையும் கவலையையும் அப்படியே கொட்டி விடாமல் தடுக்க விரும்பியது போல் இருந்தது.

"ஆம்......நான் சொல்ல விரும்புவதும் அதுதான். ஓர் ஆசாமி ..பழிக்குப்பழி .....வாங்குவதற்காக.....யாரையாவது ...கொன்ருல்......அந்தக் கொலேக்குக்... காரணம் என்னவென்பது... விளங்குகிறது. கோபத்திலோ.. ...பொருமையிலோ ... ஆத்திரத்திலோ.... கொன்ருலுங்கூட அதன் காரணத்தைப் புரிந்து கொள்ள நம்மால் முடிகிறது...... ஆனல் ஒரு காரணமோ, நியாயமோ..... இல்லாமல்....யந்திரத்தைப் போல் ஒருவிதமான உணர்ச்சியும்.... இல்லாமல் ஜனங்களேக் கொல்லுவது.... இருக்கிறதே...அது மிருகத்தனமானது .. பயங்கரமானது! ..... எதற்காக அப்படிக் கொல்ல வேண்டும்? அதற்குக் காரணம் என்னவென்பதே எனக்கு விளங்கவில்லே. யுத்தத்தில் கைதிகள் தொகை அதிகமாகிவிட்டால் அவர்களே எப்படிக் கொன்றுவிடுகிருர்கள் என்பதைப்பற்றியோ, கலகங்களிலும் குழப்பங்களிலும் ஜனங்கள் எப்படிச் செத்துப் போகிருர்கள் என்பதைப்பற்றியோ நான் படிக்கும்போது—என் தலே சுற்றுகிறது— அப்போதெல்லாம், பயங்கரமான ஒரு படுபாதாளத் தருகே நின்றுகொண்டிருப்பது போலவே எனக்குத் தோன்றும். ஆனல் எனக்கு ஒன்றுமே விளங்குவதில்லே ...... பயங்கரமாகவும் அருவருப்பாகவும் இருக்கும்."

இந்த இடத்தில் அவர் பேச்சை நிறுத்திவிட்டுச் சற்று யோசித்தார். பிறகு மறுபடியும் பேசத் தொடங்கினர்.

"இருக்கட்டும்.. பாதகமில்லே.. நான் இதை உங்களிடம் சொல்லியாக வேண்டும்......இந்தக் களங்கம் - ரத்தவெறிக் களங்கம் - என் ஆத்மாவில்கூடப் படிந்திருக்கிறது.....பத்து வருஷங்களுக்கு முன் நான் ஒரு கொலே செய்தேன்....இதுவரை நான் அதைப் பற்றி யாரிடமும் சொல்லவேயில்லே....ஆனல் என்ன.. பரவாயில்லே.....எங்கள் பண்ணேயில் ஒரு பூனே இருந்தது. அது சின்னது; மெலிந்து எலும்புந் தோலுமாக இருக்கும்—அதைப் பூனே என்று சொல்வதைவிடப் பூனேக்குட்டி என்று சொல்லுவது தான் பொருத்தமாயிருக்கும். அதன் நிறம் வெளுப்பு. ஆனல் அடுப்படியிலேயே இருந்ததால் அது சாம்பல் பூத்திருந்தது... இது நடந்தது மழைக்காலத்தில் என்று நினேக்கிறேன். அன்று காலே வானம் தெளிவாக இருந்தது. காற்றே இல்லே. சூரியன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். நான் உடை உடுத்துக்கொண்டு, அருகேயிருந்த ஒரு பழத்தோட்டத்துக்குப் போனேன். வரிசை வரிசையாக இருந்த ஆப்பிள் மரங்களுக்கிடையே புகுந்து சென்றேன்.

"ஆம், எல்லாம் அப்படியே நினேவிருக்கிறது; நேற்றுத்தான் நடந்தது போலத் தெளிவாக நினேவிருக்கிறது— அப்போது எங்கள் வேலேக்காரனே அங்கே பார்த்தேன். அவன் சொந்தப் பெயர் என்னவோ எனக்குத் தெரியாது. ஆனல் நாங்கள் அவனே 'அயாவிகாந்த்' என்று வேடிக்கையாகக் கூப்பிடுவது வழக்கம். இருவரும் பல விஷயங்களேப்

பற்றிப் பேசிக்கொண்டு சென்றோம். அவன் திடீரென்று சிரித்துக்கொண்டே, 'எசமான், அந்தப் பூனைக்கு ஒரு கால் போச்சு' என்றான்.

" 'ஏன்? எப்படி?' என்று கேட்டேன் நான்.

" 'அது ஓநாய்ப் பொறியில் விழுந்திருக்கும் போல் இருக்கிறது. பாதிக் கால் அப்படியே போச்சு.'

"காலைப் பறி கொடுத்த அந்தப் பூனையை ஒரு முறை பார்க்க விரும்பினேன். ஆகையால், அயாவிகாந்தை அழைத்துக் கொண்டு வேலைக்காரர் விடுதியை நோக்கிப் போனேன். கொஞ்ச தூரம் சென்றதும், நாங்கள் போன பாதைக்குக் குறுக்கே ரத்தக் கறை படிந்த ஒரு தடம் தெரிந்தது. பூனை அந்த வழியாகத்தான் போயிருக்க வேண்டுமென்று நாங்கள் ஊகித்தோம். ஆகையால், அந்தத் தடத்தின் வழியே நாங்கள் சென்றோம். சற்றுத் தூரத்துக் கப்பால் ஒரு மேடு இருந்தது. பூனை அந்த மேட்டின்மேல் உட்கார்ந்திருந்தது. எங்களைப் பார்த்ததும் அது 'மியாவ்' என்று பரிதாபமாகக் கத்தியது. நான் அதன் காலைப் பார்த்தேன். வலது முன்னங்காலில் பாதியைக் காணவில்லை. ரத்தம் சொட்டிக் கொண்டேயிருந்தது. அதைப் பார்க்க எனக்குக் கஷ்டமாக இருந்தது.

"நான் அயாவிகாந்தைப் பார்த்து, 'என் படுக்கையறைக்குப் போய்க் கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வா' என்றேன்.

" 'வேண்டாம்! வேண்டாம்! அது குணமாகிவிடும்' என்றான் அவன்.

"ஆனால் நான் விடவில்லை. கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வரும்படி கட்டாயப்படுத்தினேன். வேதனையிலிருந்து அந்தப் பூனையை விடுவிக்க விரும்பினேன். எப்படியும் அந்தப் பூனை சாகத்தான் போகிறது. காயத்தில் சீழ் பிடித்துப் புரையோடி அது செத்துப் போகப்போவது நிச்சயம். பல நாள் கஷ்டப்பட்டு அப்படி உயிரை விடுவதற்குப் பதிலாகத் துப்பாக்கிக் குண்டால் ஒரே விநாடியில் செத்துப் போவது மேல் அல்லவா?

"அயாவிகாந்த் கைத்துப்பாக்கியைக் கொண்டு வந்தான். நான் பூனையைத் 'தாஜா' பண்ணி அருகே அழைத்தேன். அது மெதுவாகக் கத்திக்கொண்டே கொஞ்ச தூரம் முன்னால் வந்தது. நான் வலது பக்கம் திரும்பி, குறி பார்த்துச் சுட்டேன். எனக்கும் பூனைக்கும் இடையே இருந்த தூரம் ஆறேழு எட்டுத்தான் இருக்கும். சுட்டதும், அதன் உடம்பில் என் கையளவு பெரிய ஒரு துவாரம் ஏற்பட்டுவிட்டதுபோல எனக்குத் தோன்றியது. ஆனால், அது செத்துப் போகவில்லை. 'கிரீச்' என்று கத்திவிட்டு, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடியது. நான் அதைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். கொஞ்சதூரம் அப்படி ஓடிய பிறகு அருகேயிருந்த ஒரு கொட்டடிக்குள் அது புகுந்துவிட்டது. எனக்கு அளவு கடந்த வெட்கமும் அருவருப்பும் ஏற்பட்டன. அதைப் பின் தொடர்ந்து போனேன்.

"கொட்டடிக்குள் புகுந்தேன். அங்கே ஒரே இருட்டாக இருந்தது. பூனையை அழைக்கலாமா என்று யோசித்தேன். ஆனால், ஏனோ எனக்கு வெட்கமாக இருந்தது. அப்போது திடீரென்று என்

தலைக்கு மேலே 'கர் முர்' என்று ஒரு சத்தம் கேட்டது. கோபமாகச் சீறுவது போல் இருந்தது. மேலே பார்த்தேன். இரண்டு கண்களை, பிரகாசமான பச்சைக் கண்களைக் கண்டேன். நான் அவற்றை நோக்கிச் சுட்டேன். குறி பார்க்காமலே சுட்டேன். பூனை 'கிரீச்' என்று நான்கு ஐந்து முறை கத்திக் கீழே விழுவது போல் இருந்தது... அப்புறம் ஒரு சத்தங்கூட இல்லாமல் அமைதியாக இருந்தது. வெளியே போகலாமென்று நினைத்துஅடியெடுத்து வைத்தேன். அப்போது மறுபடியும் அந்தச் சத்தம் —'கர்முர்' என்ற சத்தம்— அடுப்பருகிலிருந்து வந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். அதே பச்சைக் கண்களைக் கண்டேன். விளக்குகளைப் போல அவை ஜொலித்தன. அளவு கடந்த கோபத்துடனும் வெறுப்புடனும் பூனை என்னை விழித்துப் பார்ப்பது போல் இருந்தது. எனக்கு அச்சத்தால் மயிர் சிலிர்த்தது. ரத்த ஓட்டம் கூட நின்றுவிட்டது போல் இருந்தது.

"துப்பாக்கியிலிருந்த தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன. ஆகையால் வீட்டுக்குப் போய் மறுபடியும் வேண்டிய அளவுக்குத் தோட்டாக்களைப் போட்டுக்கொண்டு, கொட்டடிக்குத் திரும்பி வந்தேன். கொஞ்ச தூரத்துக்கு அப்பால் வரும்போதே அதன் முனகல் சத்தம் கேட்டது. நான் சுட்டேன். துப்பாக்கியில் உள்ள அத்தனை தோட்டாக்களையும் சுட்டுத் தீர்த்தேன். அப்போதும் என் சந்தேகம் தீரவில்லை. மறுபடியும் வீட்டுக்குப் போனேன். மறுபடியும் தோட்டா போட்டுக்கொண்டு வந்தேன். சுட்டேன். அது கத்தியது. வேதனையுடன் முனகியது; அப்புறம் இப்புறம் அசைந்து திரும்பியது.

"இப்போது அந்தப் பூனைமீது எனக்குக் கொஞ்சங்கூட வருத்தமோ இரக்கமோ உண்டாகவில்லை. ஏதோ ஒருவகை உணர்ச்சி என்னை ஆட்கொண்டது. கொலை செய்தாக வேண்டுமென்ற திட சங்கற்பம் என் கைகளையும் கால்களையுங்கூடத் தன் வசப்படுத்தியது. ஆனால், என் மனச்சாட்சி அழுக்குப் படிந்த ஏதோ ஒரு பொருளால் மூடிக்கிடப்பது போலத் தூங்கிக்கொண்டிருந்தது. என் உடம்பு சில்லிட்டுப் போனது போல் இருந்தது. இருதயம் சோர்வடைவதுபோல் இருந்தது. சொல்ல முடியாத ஒரு வகை வெறுப்புக்கூட உண்டாயிற்று. ஆனால் சுடுவதை மாத்திரம் நிறுத்த முடியவில்லை.

"ரம்மியமாயிருந்த காலைப் பொழுது திடீரென்று எப்படியோ இருட்டிவிட்டது போல் இருந்தது. பனிக்கட்டி மஞ்சள் நிறமாகி விட்டது போலவும், நீலவானம் கறுத்து விட்டது போலவும் தோன்றியது. எதன்மீதும் எனக்கு விருப்போ சிரத்தையோ உண்டாகவில்லை.

"மூன்றாவது தடவையாக நான் வீட்டுக்குப் போய்த் துப்பாக்கியில் தோட்டா போட்டுக்கொண்டு, கொட்டடிக்குத் திரும்பி வந்தேன். அப்போது அயாஸிகாந்த் கையில் எதையோ தூக்கிப் பிடித்துக்கொண்டு என் எதிரே வந்தான். அது சிவப்பாகவும் உருக்குலைந்ததாகவும் இருந்தது. நான் உற்றுப் பார்த்தேன். பூனையின் உடல்!— குடல் கொஞ்சங் கொஞ்சமாய்க் கீழே விழுந்துகொண்டிருந்தது. ஆனால், சத்தம் மாத்திரம் வாயி

விருந்து எப்படியோ வந்து கொண்டிருந்தது.

"என்னைப் பார்த்ததும் அவன், 'போதும், நிறுத்துங்கள்!—நான் முடித்து விடுகிறேன்' என்று இரைந்து கத்தினன்.

"என் முகத்தைப் பார்க்கவே அவனுக்கு விருப்பமில்லை.

"அவன் பூனையின் தலையை ஒரு மரக்கட்டையால் ஓங்கி யடித்தான். அவ்வளவுதான்; விஷயம் முடிந்தது."

இந்த இடத்தில் தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டார். பிறகு அன்று பகல் முழுவதும் இந்தக் கொலையைப் பற்றிய எண்ணம் என் மனத்தை விட்டு அகலவில்லை. இரவிலும் அதைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்ததால் தூங்கவும் இல்லை. மீண்டும் மீண்டும் அந்தக் கொட்டடிக்குள் போவதுபோலவும், பூனையின் பயங்கரமான இரண்டு கண்களைக் காண்பது போலவும், சுட்டுக்கொண்டே இருப்பது போலவும் தோன்றியது......

...சீமான்களே! சீமாட்டிகளே! நான். யுத்தத்தில் பலரைக் கொன்றிருக்கிறேன். ஆம், கொலைக்காக நான் வருத்தப்படவில்லை. ஆனல், எப்படித் திடீரென்று ஒரு தீயசக்தி தோன்றி என் ஆத்மாவைக் குருடாக்கியது என்பதை நான் சாகும் வரை மறக்க மாட்டேன்."

மீண்டும் அவர் பேச்சைச் சட்டென்று நிறுத்தினர். ஒரு மூலையிலிருந்து வேறு ஓர் ஆசாமி, "ஆம், உண்மை...என்ன பயங்கரமான சம்பவம்!" என்றார்.

பூனையைக் கொன்றவர் அப்போது, "இல்லை, இல்லை—அது சரியில்லை. கொல்லப் புறப்படும் துர்ப்பாக்கியர்களை நினைத்துப் பாருங்கள். அவர்களுக்குப் பகல் கூட எப்போதும் இருட்டாயிருக்குமென்று எண்ணுகிறேன். அவர்களுக்கு ரத்தத்தில் வெறுப்பும் சலிப்புங்கூட ஏற்பட்டிருக்கும். அப்படியிருந்தும் அவர்கள் தங்கள் போக்கிலேயே போய்க்கொண்டிருக்க வேண்டியதாய்த்தான் இருக்கும். அவர்கள் அப்போதும் தூங்குவார்கள்; சாப்பிடுவார்கள்; குடிப்பார்கள்; பேசுவார்கள்; சிரிக்கக்கூடச் சிரிப்பார்கள். ஆனல் இந்தக் காரியங்களை அவர்கள் தாங்களாகச் செய்யவில்லை—அவர்களுக்குள்ளே புகுந்திருக்கும் சைத்தானே செய்கிறான். முதுமைப் பருவத்தை அடைந்த பிறகு அவர்கள் இந்தச் சம்பவங்களை மறக்கவே முடியாது. தூக்கம் பிடிக்காமல் இரவெல்லாம் விழித்துக் கொண்டே இருப்பார்களென்று நினைக்கிறேன். நிராயுதபாணிகளான மக்கள் வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது போலவும், அவர்களைத் தாங்கள் சுடுவதுபோலவும், துப்பாக்கி நுனியால் அடித்து மண்டையை உடைப்பதுபோலவும் பல பயங்கரக் கனவுகள் கண்டு திடுக்கிட்டு விழித்துக்கொள்வார்களென்று தோன்றுகிறது. அவர்கள் கத்துவார்கள்; கூக்குரல் போடுவார்கள்; திட்டுவார்கள். ஆனல் அவர்களுடைய ஆத்மாவைக் கைப்பற்றியுள்ள சைத்தான் அவர்களை விட்டு அகலமாட்டான். மரண வேதனையிலுங்கூடத் தாங்கள் சிந்திய ரத்தத்தைத் தங்கள் கண்ணுல் காண்பார்கள்" என்றார்.

❧

நாவல் சுருக்கம்

திருமணம்

சு. குருசாமி, பி. ஏ., எல். டி.

★

ஆசிரியர் சுயமாகப் பல சிறுகதைகள் எழுதியிருக்கிறார். ஹிந்தியிலிருந்தும் சில சிறுகதைகளை மொழிபெயர்த்திருக்கிறார். இவருடைய நாவல்கள் பிரத்தியட்ச வாழ்க்கைச் சித்திரங்களாக அமைந்திருக்கின்றன. புத்தக உருவில் இன்னும் வெளிவராத இந்த நாவலை 'மஞ்சரி'க்காக ஆசிரியரே பிரத்தியேகமாய்ச் சுருக்கித் தந்திருக்கிறார். இதன் காப்பிரைட் ஆசிரியரைச் சேர்ந்தது.

திருமணம்

★

"அம்மா, அந்தப் பயலை வெகு நேரமாய்க் காணோமே; எங்கே இருக்கிறான் என்று கொஞ்சம் பாரேன்" என்று தன் தாயைப் பார்த்துக் கூறினாள் படுத்த படுக்கையாய்க் கிடந்த சீதை.

குழந்தை பிறந்ததிலிருந்தே சீதை நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். குழந்தையுடன் கொஞ்சிக் குலாவுவதற்குக்கூட அவளால் முடியவில்லை. உடல் நலமிழந்து, மெலிந்த உருவத்தில் இருந்த தன் தாயைக் குழந்தை ஆதிமுதலே வெறுத்தது.

"எப்பப் பார்த்தாலும் என்னைச் 'செத்துப் போ! செத்துப் போ' என்று சொல்லுகிறானே அம்மா, நான் செத்துப்போனேன் என்றால் இவனை யாரம்மா பார்த்துக் கொள்வார்கள்?" என்று கேட்டாள் சீதை.

இந்தச் சமயம் சுமார் நான்கு வயதுள்ள சிறுவன் ஒருவன் வீட்டுக்குள் ஓடி வந்தான்.

"இங்கே வாடா, கண்ணு பாலு?" என்று குழந்தையைத் தன் அருகில் சீதை கூப்பிட்டாள்.

"நான் வரமாட்டேன். நீ செத்துப் போ. உனக்கு நான் கொள்ளி வைக்கிறேன்!" என்றான் சிறுவன் பாலகிருஷ்ணன்.

சீதையை வெற்றிபுரத்திலுள்ள அவளுடைய கணவன் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள் அவளுடைய தாயும் தகப்பனும். அங்கே அவள் கண்ட காட்சி அவளைக் கதிகலங்கச் செய்தது.

சீதையின் மாமியார் லட்சுமியம்மாள் அவளுக்கு உருவத்திலும் மாமியாரில்லை; உண்மையிலும் மாமியாராயில்லை. அவள் சீதையின் மாமனாருக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட்டவள். சுந்தரம் செட்டியாருக்கு வாய்த்தது போல் யாருக்கு இரண்டாந் தாரம் வாய்க்கும் என்று ஜனங்கள் பேசினார்கள். லட்சுமி அவ்வளவு அடக்கமும் ஒடுக்கமும் குணமும் அழகும் பொருந்தியிருந்தாள். அவள் தன் குழந்தையை நன்கு கவனித்துக் கொள்வாள் என்று நினைத்துத்தான் சீதை வெற்றிபுரத்துக்கு வந்தாள். ஆனால் அங்கே அவள் கண்ட காட்சி! மூன்றே நாள் காய்ச்சலில் தன் ஒரே மகன் ரங்கசாமியை இழந்துவிட்டுப் பரிதவித்துக்கொண்டிருந்தாள் லட்சுமி!

குழந்தை இறந்த வீட்டில் சீதையை ஒருவரும் சரிவரக் கவனிக்கவில்லை. அவளுடைய நோய் மேலும் அதிகரித்தது. பாலகிருஷ்ணன் அவள் படுத்திருந்த அறைக்குள் ஓடி வந்தான்.

"உன் தலையில் எப்படி எழுதியிருக்கிறதோடா, கண்ணு" என்று அவனைப் பக்கத்தில் அழைத்தாள் சீதை.

"நான் வரமாட்டேன். நீ செத்துப் போ! நான் உனக்குக் கொள்ளி வைக்கிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சிறுவன் ஓடிவிட்டான்.

ஒரு நாள் மத்தியான்னம் சுந்தரம் செட்டியார் தம்முடைய பலசரக்குக் கடையில் உட்கார்ந்திருந்த

போது, ஒரு சிறுவன் வந்து, அவரையும் அவர் மகனையும் அவசரமாக வீட்டுக்குக் கூட்டிவரச் சொன்னதாகக் கூறினன். உடனே அவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, சீதை மிகவும் அபாயகரமான நிலைமையில் இருந்தாள். வைத்தியரை உடனே அழைத்துக்கொண்டு வந்தார்கள். அவர் மருந்து கொடுத்துவிட்டுச் சென்ற இரண்டு மணி நேரத்துக்குள்ளேயே சீதை இந்த உலக வாழ்வை நீத்தாள்.

பாலகிருஷ்ணன் தன் தாய்க்குக் கொள்ளி வைத்தான்.

இப்பொழுது பாலகிருஷ்ணன் ஒருவரும் வேண்டாத, விரும்பாத குழந்தையாக இருந்தான். இனி அவனை யார் வளர்ப்பார்கள்?

"காக்கா, காக்கா,
கண்ணுக்கு மைகோண்ணு!
குருவி, குருவி,
கோண்டைக்குப் பூக்கோண்ணு!
கோக்கே, கோக்கே,
குழந்தைக்குப் பால் கோண்ணு!
கிளியே, கிளியே,
கிண்ணியிலே தேன்கோண்ணு!"

என்று சிறுவன் தன் குதலை மொழியில் பாடினன். இந்த மாதிரி ரங்கசாமி பாடியிருந்தால், கிண்ணியில் பாலுந் தேனும் கலந்து கொண்டு வந்து லட்சுமி கொடுத்திருப்பாள். ஆனல் இப்பொழுதோ, "நாலு வயதிலேயே தாயைத் தின்னவனுக்கு வேறு யார் பாலுந் தேனும் கொடுப்பார்கள்? கொக்குங் குருவியுந்தான் கொடுக்க வேண்டும்!" என்று சிரித்துக்கொண்டே சொல்லி, அவனுடைய கன்னத்தை லேசாய்க் கிள்ளினள். பாலகிருஷ்ணனுடைய பாட்டு அவளுக்கு நன்ருய்த்தான் இருந்தது!

பாலகிருஷ்ணனுடைய தந்தை ராமநாதன் செட்டியாருக்கு மறு விவாகம் ஆகிவிட்டது. புதிதாக வந்த பெண்ணுக்கும் லட்சுமிக்கும் ஒத்துப்போகவில்லை. ஆகையால் அவர் தனிக்குடித்தனம் செய்ய ஆரம்பித்தார். பாலகிருஷ்ணனையும் ராமநாதன் கூட்டிக்கொண்டு சென்று விடுவானே என்று லட்சுமி மிகவும் பயந்தாள். ஆனல் நல்ல வேளையாகச் சிறுவனை லட்சுமியிடமே விட்டுச் சென்றுவிட்டார் ராமநாதன் செட்டியார். சிறுவனும் பாட்டியிடம் மிகுந்த வாஞ்சையுடன் இருந்தான்.

ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தபோது, பாலகிருஷ்ணன் தன் வீட்டில் ஒரு சிறுமி இருக்கக் கண்டான். ஆச்சரியத்துடன், "இது யார், பாட்டி?" என்று கேட்டான்.

"சிவகாமி!"

பையன் மருள மருள விழித்தான், ஒன்றும் தெரியாமல்.

"உனக்குத் தங்கை என்று வைத்துக்கொள்ளேன்!"

"எனக்குத் தங்கை இல்லையே!"

"இதுவரைக்கும் இல்லை. இனி மேல் இவளைத் தங்கையாக வைத்துக் கொள்" என்ருள் பாட்டி.

பாலகிருஷ்ணன் தாயை இழந்தவன். சிவகாமி தாயையும் தந்தையையும் இழந்தவள். அவள் லட்சுமியின் தங்கை மகள். அவள் லட்சுமியை, "அம்மா!" என்று அழைத்தாள்.

தன்னை அவ்விதம் கூப்பிடும்படி பாலகிருஷ்ணனை லட்சுமி வேண்டினள். ஆனல் அவனே அவளைப் 'பாட்டி' என்றே பிடிவாதமாகக் கூப்பிட்டான். ஆனல் சிவகாமியோ அவளை அம்மா என்று அழைத்தாள். சிவகாமி அவ

ளுடைய சொந்தத் தங்கையின் மகள். பாலகிருஷ்ணனே அவளுடைய மூத்தாளின் பேரன்! இனி அவளுடைய அன்புத்தாரை எந்த வழியில் பாயும்? அதன் போக்கு மாறிவிடுமோ? யார் கண்டது? போகப் போகத்தானே தெரியும்?

“நீ ஏண்டா அந்தப் பெண்ணை இப்படிக் காணக் கருக் குலைகிறாய்? தாயும் இல்லாமல் தகப்பனும் இல்லாமல் சீரழிகிறதே என்று அவளைக் கூட்டிக்கொண்டு வந்தால், ஏண்டா இப்படித் துன்பப் படுத்துகிறாய்?”

“அநாதைக் கழுதை வேறு எங்காவது போகட்டுமே. இங்கே ஏன் இருக்க வேண்டும்?”

“அவளை அநாதைக் கழுதை என்று சொல்கிறாயே. நீ என்னடா தாயோடு சவரணையாய் வாழ்கிறாய்? நீயும் நாலு வயதிலிருந்து என் கையைத்தானே ஒடிக்கிறாய்? நீ ஒங்கப்பன் வீட்டுக்குப் போ! இங்கே ஏன் இருக்கிறாய்?”

“எனக்கு இந்த வீட்டில் இருப்பதற்கு உரிமை உண்டு. அவளுக்கு இல்லை.”

“என்னடா உரிமை எல்லாம் கண்டு விட்டாய்? உனக்கு இருக்கிற உரிமை அவளுக்கும் இருக்கத் தான் இருக்கிறது.”

“அதைத்தானே பார்க்கப் போகிறேன்!” என்றான் பாலகிருஷ்ணன்.

இந்தமாதிரி சச்சரவு பாட்டிக்கும் பேரனுக்கும் அடிக்கடி நடக்க ஆரம்பித்தது. பாட்டி தன்னை முன் போல நடத்தவில்லை என்ற எண்ணம் அவனுடைய மனத்தில் சிறிது சிறிதாக வேரூன்ற ஆரம்பித்தது. அதற்குக் காரணம் அந்தச் சிவகாமி அல்லவா என்று அவன் நினைத்தான்.

ஒரு நாள் பாலகிருஷ்ணன் இட்டிலி சாப்பிட்டுக்கொண்டிருந்தான். முணுக்கு விடாமல் சிவகாமி வந்து, அவனுக்குப் பின்னால் தண்ணீர்ச் செம்பை வைத்தாள். சிவகாமியை வெறுத்ததோடு நில்லாமல், பாலகிருஷ்ணன் அவள் தொட்ட சாமான்களையும் வெறுக்க ஆரம்பித்தான்.

“அவள் தொட்ட தண்ணீர் எனக்கு வேண்டாம்” என்றான் பாலகிருஷ்ணன்.

“பின்னே உனக்குத் தண்ணீர் எடுத்து வைக்க உன் பெண்டாட்டி யாடா வைத்திருக்கிறாய்? என்னால் இப்பொழுது எழுந்திருக்க முடியாது. குடித்தால் குடி; இல்லா விட்டால் சும்மாக் கிட” என்றாள் பாட்டி.

இவள் வந்துதானே பாட்டி தனக்குத் தண்ணீர் எடுத்து வைப்பதைக்கூடக் கெடுத்துவிட்டாள் என்று பாலகிருஷ்ணன் நினைத்தான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் காலை லட்சுமியின் சிநேகிதி ஒருத்தி அவளைப் பார்க்க வந்தாள். வந்தவள் சிவகாமியைப் பார்த்து, “இவள் யார்?” என்று கேட்டாள்.

“இவள்தான் என் தங்கையின் மகள்.”

“கட்ட வளர்ந்திருக்கிறாள் போலிருக்கே.”

“ஆமாம். ஒரு மாப்பிள்ளை பார்க்க வேண்டும்.”

“மாப்பிள்ளைக்கு இங்குமங்கும் ஏன் அலையப்போகிறாய்? உன் பேரனுக்கே கட்டிவிடு.”

“இரண்டுக்கும் ஏழாம் பொருத்தமாயிருக்கிறதே!”

"இப்பொழுது அப்படித்தான் இருக்கும். கல்யாணம் பண்ணி விட்டால் எல்லாம் சரியாய்ப் போய் விடும்."

தன் தங்கையின் மகளாகிய அந்த அநாதைப் பெண் அத்தகைய அதிருஷ்டசாலியாகவா இருக்கப் போகிருள் என்று லட்சுமியம்மாள் நினைத்தாள்.

பாலகிருஷ்ணனுக்குச் சுமார் பதினறு அல்லது பதினேழு வயது இருக்கும். சிறிதேனும் முகவாட்டமின்றி நன்ருய் வளர்ந்திருந்தான். பிரகாசமான கண்கள்; பொலிவுள்ள முகம்; திரண்டு பருத்த தோள்கள்—இவைகளைப் பார்க்கும் போது பிற மாணவர்கள் அவன் மீது பொருமை கொள்வார்கள்.

ஒரு நாள் காலையில் பாலகிருஷ்ணன் மிகவும் கோபமாக இருந்தான். அவனுடைய பவண்டன் பேனவைக் காணவில்லை. சிவகாமி இங்குமங்கும் போகும்போதெல்லாம், அவளை எரித்து விடுபவன் போலப் பார்த்தான். அவள் மீது அவனுக்குச் சந்தேகம் உண்டாகியது.

"அவள் தான் எடுத்திருப்பாள்" என்ருன் பாலகிருஷ்ணன்.

"அவள் அதை எடுத்து என்னடா செய்யப் போகிருள்?" என்று பாட்டி கேட்டாள்.

"விற்பாள்."

"யாருக்கடா விற்பாள்?"

"அது எனக்கு எப்படித் தெரியும்?"

சிறிது நேரத்துக்குப் பின்பு, "சிவகாமி!" என்று மாடியிலிருந்து சத்தம் வந்தது. பாலகிருஷ்ணன் தான் அவளை மாடிக்கு அழைத்தான். எதற்காக? குற்றவாளி போல அவளைத் தன் முன்னுல் நிறுத்தி விசாரிப்பதற்காக.

ஆனல் அவள் போகவில்லை. அவனுடைய கோபம் முன்னைவிட அதிகரித்தது. இப்படிப் பாலகிருஷ்ணன் அவள்மீது ஏதாவது குறை கூறிக்கொண்டும், குற்றம் சாட்டிக்கொண்டுமே இருந்தான். எல்லா விஷயங்களிலும் அவளைத் தன் போட்டியாகவே அவன் கருதினன்.

சிவகாமியின் கல்யாணத்தைப் பற்றி லட்சுமியம்மாளுக்குக் கவலை அதிகரிக்க ஆரம்பித்தது. அவளைத் தன் பேரனுக்குக் கல்யாணம் செய்துவிட்டால் என்ன? ஆனல் வீட்டில் நடக்கும் விஷயங்களோ அவளுடைய ஆசைக்கு உற்சாகம் ஊட்டுவனவாகத் தோன்றவில்லையே!

சுந்தரம் செட்டியார் சூட்சும புத்தி உள்ளவர். பாலகிருஷ்ணனுக்கும் சிவகாமிக்கும் நடந்த போராட்டங்களை அவர் கூர்மையாகக் கவனித்து வந்தார். அது அவருக்கு அச்சத்தையே விளைவித்தது. விபரீதமாய் முடிந்து விடுமோ என்று பயந்தார். ஆகையினல் கூடிய சீக்கிரம் அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டார்.

வியாபார விஷயமாய் அயலூருக்குச் சென்றிருந்த சுந்தரம் செட்டியார், ஒரு நாள் திரும்பி வந்து சந்தோஷத்துடன், "கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் சீக்கிரமாய்ச் செய்" என்ருர்.

ஆச்சரியத்தினல் லட்சுமியம்மாள் விழித்தாள்.

"உன் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து வந்திருக்கிறேன்."

"சிவகாமிக்கா?" என்று துணுக்குற்றுக் கேட்டாள் லட்சுமியம்மாள். கானல் நீர்போல்

அவளுக்கு ஒரு தூர நம்பிக்கை இதுவரை இருந்து வந்தது. அதை வெளியில்கூட அவள் ஒருவரிடமும் சொல்லவில்லை. சொல்ல அஞ்சினுள். ஆனுல் இதுவரை அந்த நம்பிக்கை அவளுடைய உள்ளத்தில் இருந்து வந்தது. ஆனுல் இனியோ அந்த நம்பிக்கைக்கு அங்கே இடமில்லை.

"மாப்பிள்ளை யார்?"

"திருநெல்வேலி பகவான் செட்டியார்."

"இரண்டாந் தாரமா?"

"உம்." அப்படிச் சொல்லும்போது, சுந்தரம் செட்டியாருக்கு என்னவோ மாதிரிதான் இருந்தது.

இந்தக் கல்யாணத்தைப்பற்றி லட்சுமியம்மாளின் மனப்பான்மையை அறிவது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒரு சமயம் ஒரு மாதிரியும், இன்னெரு சமயம் இன்னெரு மாதிரியும் பேச ஆரம்பித்தாள்.

இப்படி இருக்கையில், ஒரு நாள் சிவகாமி ஏதோ அலுவலாக மாடிக்குச் சென்ருள். பாலகிருஷ்ணன் ஏதோ யோசனையாய் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. சட்டென்று எழுந்து சென்று, அவளுடைய கைகளைப் பிடித்தான். "காமு! உனக்குக் கல்யாணமாமே! இன்னும் சில தினங்களில் உன் புருஷன் வீட்டுக்குப் போய்விடுவாய். அப்புறம்..." என்று கொஞ்சுதலாய்ச் சொன்னுன்.

"உன் ஆதரவும் வேண்டாம். உன் அடியும் வேண்டாம்" என்று சொல்லி வெடுக்கெனத் தன் கைகளைப் பிடுங்கிக்கொண்டு அவள் சென்றுவிட்டாள்.

'பகவான் செட்டியார் பேசின பேச்சு மாறிவிட்டார்! அந்த மனுஷரைச் சும்மா விடக்கூடாது! நாலு பேர்களுக்கு மத்தியில் அவர் மானத்தைப் போக்கிவிட வேண்டும்' என்று சுந்தரம் செட்டியார் தீர்மானித்துக்கொண்டார். நல்ல வேளையாக ஒரு சந்தர்ப்பம் சீக்கிரமே வாய்த்தது. ஏழெட்டுப் பேர்களுக்கு மத்தியில், "இவர் இப்படிப் பேச்சு மாறலாமா, ஐயா? பேசினது பேசியபடி ஒன்ருவது செய்திருக்கிருரா என்று கேளுங்கள். சங்கிலி ஆறு பவுனில் செய்வதாகப் பேச்சு. அது பத்துப் பவுன்! மிளகு மணி மாலையும், கலர்க்கல் மாலையும் நாலு பவுனிலே பண்ணிவிடுகிறேன் என்ருர். அவை இரண்டும் பன்னிரண்டு பவுன்! புது வைரத்தோடுதான் போடுவதாகச் சொன்னுர். இப்பொழுது அசல் வைரத்தோடு வாங்கி இருக்கிருர்! பெண்ணைப் பார்த்துவிட்டுத் தான், ஐயா, இப்படிச் சொன்ன சொல் தவறிவிட்டார். பெண்ணைப் பார்க்கும்படி இவரை விட்டது பிசகாய்ப் போச்சு!" என்ருர் சுந்தரம் செட்டியார்.

எல்லோரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். கல்யாண வீட்டில் அது நல்ல தமாஷாக இருந்தது.

பட்டும் பணியும், பொட்டும் பூவுமாய்ச் சிவகாமியைப் பார்த்த போது, சுந்தரம் செட்டியாருக்குக் கூட ஒரு சபலம் தோன்றியது.

இவ்வளவு விமரிசையுடன் பகவான் செட்டியாருக்கும் சிவகாமிக்கும் திருமணம் நிறைவேறியது.

சிவகாமிக்குத் 'திருமணம்' ஆகிவிட்டது. பகவான் செட்டியாருக்கு அவள் வாழ்க்கைப்பட்டு விட்டாள். அந்தத் 'திருமணத்'தில் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் அது

திருப்தியே அளித்தது. பால கிருஷ்ணனுக்கும் முதலில் அது திருப்திகரமாகவே தோன்றியது. ஆனல் பின்பு அவனுடைய மன நிலை மாறுபடத் தொடங்கியது.

தங்கை மகளது பிரிவைச் சகிக்க மாட்டாமல், லட்சுமியம்மாள் ஒரு நாள் திருநெல்வேலிக்குப் புறப் பட்டுச் சென்ருள். அவள் திரும்பி வந்தபோது, "சிவகாமி சுகமா யிருக்கிருளா, பாட்டி?" என்று கேட்க வேண்டுமென்று பால கிருஷ்ணனுக்குத் தோன்றியது. ஆனல் அந்த மாதிரி கேட்டால், அது விபரீதமாய்த் தோன்றும் என்று நினைத்து, "அங்கே எல்லா ரும் செளகரியமாய் இருக்கிருர் களா, பாட்டி?" என்று பொதுப் படையாகக் கேட்டான்.

"எல்லாரும் செளகரியந் தாண்டாப்பா" என்ருள் லட்சுமி யம்மாள்.

சுந்தரம் செட்டியார் அவளைப் பார்த்து, "உன் மகள் புருஷன் மனப்படி நடந்துகொள்கிருளா?" என்று கேட்டார்.

"அவள் மட்டுமல்ல; அவரும் அவள் மனப்படியே நடந்துகொள் கிருர்."

"அவர்தான் உன் மகள் அழகில் சொக்கிக்கிடக்கிருரே!"

"இப்பேர்ப்பட்ட பெண்ணை உங்கள் பேரனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கவில்லையே என்று இப்பொழுது அடித்துக் கொள்கிறதாக்கும்!" என்று லட்சுமியம்மாள் குத்தலாகக் கேட் டாள்.

"நீயாவது முன்பே சொல்லி யிருக்கலாமல்லவா?"

"அவன்தான் பூனையைக் கண்ட காய் போலச் சீறிக்கொண்டிருந் தானே! நான் எப்படிச் சொல்வேன்?"

இவர்களுடைய சம்பாஷணை யைப் பாலகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

"இவனைப்பற்றிப் பேசினல் அவளுக்கு எத்தனை ஆனந்தம் தெரியுமா?" என்று கேட்டாள் லட்சுமியம்மாள்.

'அவளைப்பற்றிப் பேசும்போது, எனக்கு இப்பொழுது ஆனந்தம் ஏற்படுகிறதே, அது போலவா?' என்று பாலகிருஷ்ணன் தனக்குள் நினைத்துக்கொண்டான்.

சுந்தரம் செட்டியார் ஒரு நாள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

"சிவகாமியைக் கூட்டிக் கொண்டு வந்து, ஒரு மாதமாவது வைத்திருந்து அனுப்ப வேண்டு மென்று எனக்கு ஆசையாய் இருக் கிறது" என்ருள் லட்சுமியம்மாள்.

"நன்ருயிருக்கிறது!" என்று சுந்தரம் செட்டியார் புன்முறுவ லுடன் கூறினர்.

"நன்ருயில்லாமல் என்ன? நான் கூட்டிக்கொண்டு வரத்தான் செய்வேன். அதோடில்லை. அவளுக்கு ஏதாவது செய்தும் அனுப்புவேன்."

"போதாது. மேலும் வேண்டும்" என்று சுந்தரம் செட்டியார் பின்னும் புன்முறுவலுடன் கூறினர்.

"இதுவரைக்கும் செய்ததெல் லாம் போதாதுதான். மேலும் செய்யத்தான் வேண்டும்."

சுந்தரம் செட்டியார் கடகட வென்று சிரித்தார். "நீ செய்திருக் கும் மைசூர்ப்பாகு நன்ருயிருக் கிறது. மேலும் வேண்டும், கொண்டு வா என்று சொன்னல், மைசூர்ப் பாகும் கொண்டு வராமல், நான் ஒன்றைச் சொன்னல், நீ ஒன்றை

நினைத்துக்கொண்டு, ஏன் இப்படிக் கூத்தாடுகிறாய், லட்சுமி?'' என்று சொல்லிச் சுந்தரம் செட்டியார் மேலும் சிரித்தார்.

''அவளைக் கூட்டிக்கொண்டு வந்தால் நம்ம பாலகிருஷ்ணன் பயல் எப்படி நடந்துகொள்கிறானோ? அதுவல்லவா எனக்குப் பயமாயிருக்கிறது?''

''என்ன பயம்?'' என்று செட்டியார் கேட்டார்.

''முன்பு அவள் இங்கிருந்தபோது, 'கர்புர்' என்று முறைத்துக்கொண்டிருந்தானே, இப்பொழுதும் அப்படி இருந்தால் என்ன செய்வது?''

''எனக்கு இப்போது அந்தப் பயமில்லை'' என்றார் செட்டியார்.

சுந்தரம் செட்டியார் வீட்டுக்குச் சிவகாமி மறுபடியும் வந்தாள். குதிரை வண்டி வாசலில் வந்து நின்றது. பாலகிருஷ்ணன் மாடியில் படித்துக்கொண்டிருந்தான். வண்டி நின்ற சத்தத்தைக் கேட்டதும், ஜன்னலை நோக்கி ஓடினான். சிவகாமி வண்டியிலிருந்து இறங்கி, வெள்ளிக் கூஜாவை எடுத்துக்கொண்டு கண நேரத்தில் வீட்டுக்குள் போய் விட்டாள். அவளை நன்றாய்ப் பார்ப்பதற்கு அவனால் முடியவில்லை. அவன் இப்பொழுது கீழே இறங்கிச் செல்வதா, கூடாதா என்று சிந்தித்துக்கொண்டிருந்தான்.

மாடியில் அவன் இப்படி இருக்கையில், கீழே லட்சுமிப் பாட்டியின் உள்ளத்தில் எண்ணங்கள் வேறு பாதையில் ஓடின. ''நாங்கள் வந்து இவ்வளவு நேரமாகிறதே. இந்தப் பாலகிருஷ்ணன் பயல் மாடியில்தானே இருக்கிறான்! இறங்கி வந்து, 'வா' என்று ஒரு வார்த்தை கேட்டானா? பொறுமை பிடித்த பயல்!'' என்று அவள் நினைத்துக்கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்துக்குப் பின் பாலகிருஷ்ணன் கீழே இறங்கிச் சென்று, ''வா, சிவகாமி'' என்றான்.

அவள் அறைக்குள் இருந்தபடியே, ''ஆம்'' என்றாள்.

சிவகாமி வீட்டுக்கு வந்து ஒரு நாளாகிவிட்டது. ஆனால் அவளைச் சரியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் இன்னும் பாலகிருஷ்ணனுக்குக் கிடைக்கவில்லை. அவனுடைய உள்ளத்தின் ஓரத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. அவளைப் பார்க்க வேண்டுமென்று விரும்புவது சரியா? அது தவறில்லையா?—இவ்விதம் எல்லாம் சிந்தித்துக்கொண்டே, மாடிப்படிகளில் ஏறிச் சென்று தன் படுக்கையை விரித்து அவன் படுத்துக்கொண்டான்.

சிவகாமியைப் பாலகிருஷ்ணன் நன்றாய்ப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டபொழுது, அவன் உண்மையிலேயே பிரமித்துப் போனான். அவளிடத்தில் அவ்வளவு பெரிய மாறுதல் உண்டாயிருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. முன்னம் காணாத ஒரு பொலிவை அவளிடத்தில் அவன் அப்பொழுது கண்டான். யௌவனப் பருவம் அவளுடைய மேனிக்கு மெருகிட்டிருந்தது. துலக்காத ஒரு பித்தளைப் பாத்திரம் திடீரென்று அநேகம் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பொன் பாத்திரமாக மாறிவிட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது. அவளுடைய அங்கங்களில் ஒரு புதிய ஒளி, ஒரு புது மணம் வீசியது. சிவகாமியின் அழகில் பாலகிருஷ்ணன் மயங்கி

விட்டான். ஆனல் முன்பு அவளுடைய அழகை என் அவன் கவனிக்கவில்லை? அவளை என் அவன் வெறுத்தான்? பால் உணர்ச்சி முற்றும் வளர்ச்சியுருத அந்தச் சிறு பருவத்தில், சிவகாமியை அவன் ஒரு பெண்ணுக மதிக்கவில்லை. தன்னுடன் எல்லாவற்றிலும் போட்டியிட வந்த ஒரு சிறிய மனிதப் பிராணியாகவே அவளை அவன் கருதினுன். சிவகாமியின் கல்யாணம் தீர்மானமாகிய பின்புதான், பாட்டியின் அன்பை அநுபவிப்பதில் தனக்கு இருந்த ஆபத்து நீங்கிவிட்டது என்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுதுதான் சிவகாமியின் பெண்மைக் குணங்கள் அவன் மீது முதல் முதலில் மோத ஆரம்பித்தன.

இன்று அவனிடமிருந்து வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றிய அவள், ஒரு சமயம் அவனுடைய கைக்கு எட்டும் தூரத்தில்தான் இருந்தாள். ''ஐயோ! என் கைப்பிடியில் இருந்த ஓர் அழகான கிளியை முட்டாள்தனமாய்ப் பறக்க விட்டு விட்டேனே!'' என்று அவன் ஏங்கினுன்.

அன்று திடீரென்று அப்படி நடக்கும் என்று பாலகிருஷ்ணன் நினைக்கவில்லை. அது மிகச் சிறிய சம்பவந்தான். ஆனல் அவனுக்கு அது முக்கியமானதாகத் தோன்றிற்று. மாடியில் தன் அறையில் அவன் உட்கார்ந்திருந்தான். அந்தச் சமயம் திடீரென்று சிவகாமி அங்கே தோன்றி, ''அம்மா பலகாரம் சாப்பிடக் கூப்பிடுகிருன்'' என்ருள்.

அவன் கீழே இறங்கிச் சென்ருன்.

''எண்டி சிவகாமி, இலை போட்டுத் தண்ணீர் எடுத்து வைத்தாயே. பலகாரத்தைப் பரிமாறுகிறது தானே?'' என்று லட்சுமியம்மாள் சொன்னுள்.

''நீயே எடுத்து வையம்மா'' என்று சமையலறைக்கு வெளியில் நின்றுகொண்டிருந்த சிவகாமி சொன்னுள்.

அவளே வந்து தனக்குப் பலகாரம் பரிமாறக்கூடாதா என்று பாலகிருஷ்ணன் நினைத்தான். பலகாரங்களைச் சாப்பிட்டுவிட்டு அவன் மாடிக்குச் சென்றபொழுது, தான் ஏதோ ஒரு புது உலகில் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. இதுவரைக்கும் அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்காத சிவகாமி அவன் முன்னல் நேருக்கு நேர் தோன்றினுள். அவனை நேருக்கு நேர் பார்த்தாள். அவனுடன் பேசவும் செய்தாள். அவன் சாப்பிடுவதற்காக இலை போட்டிருந்தாள். தண்ணீரும் எடுத்து வைத்திருந்தாள். அவைகளைப் பற்றி எண்ண எண்ண அவனுக்கு இன்பமாக இருந்தது. அவளை மறந்துவிட வேண்டும்; அவளைப் பற்றி இனி நினைக்கவே கூடாது என்று அவன் தீர்மானித்தபோது, அந்தச் சம்பவம் நடந்தது. அது அவனுடைய உறுதியைக் குலைத்தது.

சில தினங்களுக்குப்பின் ஒரு நாள் பாலகிருஷ்ணன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்தபோது, அவன் ஓர் அதிசயத்தைக் கண்டான். அவனுடைய அறை சுத்தமாகக் கூட்டியிருந்தது. புத்தகங்களையும்யாரோ அழகாய்அடுக்கி வைத்திருந்தார்கள். மேஜை மேல் அழகிய துணி ஒன்று விரித்

திருந்தது. அவைகளைச் செய்தது யார்?

இந்தச் சம்பவம் நடந்த மறுநாள் லட்சுமியம்மாள் திடீரென்று காய்ச்சலாய்ப் படுத்துக்கொண்டாள். அவளுக்குப் பணிவிடை செய்வதில் பாலகிருஷ்ணனும் சிவகாமியும் அடிக்கடி சந்தித்தார்கள்.

அப்பொழுது பாலகிருஷ்ணனுக்குச் சிவகாமியே உணவு பரிமாற வேண்டியிருந்தது. அவள் பரிமாறத் தான் சாப்பிட வேண்டுமென்று பாலகிருஷ்ணன் மிகுந்த அவாக் கொண்டிருந்தான். ஆனால் அந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டபோது, அது அப்படி முடியும் என்று அவன் நினைக்கவில்லை.

பாலகிருஷ்ணன் சாப்பிட உட்கார்ந்தான். சிவகாமி பரிமாறினாள். அவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, சிவகாமி சமையலறை வாசலில் வந்து நின்றுகொண்டாள். அவனுக்கு ஏதாவது வேண்டும்போது மட்டும், உள்ளே சென்று இலையில் அதை வைத்துவிட்டு மறுபடியும் வாசலுக்கு வந்துவிடுவாள்.

இப்படியிருக்கும்போது ஒரு நாள் இரவு பாலகிருஷ்ணன் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், சிவகாமி தன் வழக்கத்துக்கு விரோதமாக அவன் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் உணர்ச்சி பொங்கியிருந்தது. அவனுக்கும் உணர்ச்சி மேலிட்டது. ஏதாவது சொல்ல வேண்டும், செய்ய வேண்டும்போல் அவனுக்குத் தோன்றியது. அவளும் அவனிடமிருந்து ஏதோ எதிர்பார்ப்பதுபோல் நின்றுகொண்டிருந்தாள். அவன் சாப்பிட்டு முடித்ததும் போக எழுந்து நின்றான். அவளும் நின்றுகொண்டிருந்தாள். அவன் சில அடிகள் எடுத்து வைத்துச் சமையலறை வாசல் வரைக்கும் சென்றான். அவள் தான் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தாள். அவன் திடீரென்று திரும்பி வந்து, "தண்ணீர்" என்றான். அவள் தண்ணீர் எடுத்துக்கொடுத்தாள். அதில் கொஞ்சம் குடித்துவிட்டு அவன் போய்விட்டான்.

அவனுடைய உள்ளத்தில் ஏமாற்றம் குடி கொண்டது. அவளும் ஏமாற்றம் அடைந்திருப்பாளோ?

மறுநாள் இரவு அவள் வந்து சாப்பிடக் கூப்பிட்டபோது, அவன் போக மறுத்துவிட்டான்.

சிவகாமியை ஓர் அவசர காரியத்தின் நிமித்தம் உடனே கொண்டு வந்துவிடுமாறு, அவள் கணவனிடமிருந்து கடிதம் வந்து சேர்ந்தது. பாலகிருஷ்ணனே அவளைக் கொண்டுபோய் விட்டு வருவதென்று ஏற்பாடாயிற்று. அவர்கள் இருவருடைய உள்ளங்களிலும் புயல் சற்று ஓய்ந்திருந்தபோது, அந்த இருவரையும் விதி தனிமையில் ஒன்று சேர்த்தது.

"சிவகாமி!"

"என்ன?"

"இன்றைக்குத் தென்காசியில் இறங்கி, குற்றாலத்து அருவியில் முழுகிவிட்டு நாளைக்குத் திருநெல்வேலி போகலாமா?"

சிவகாமியின் உள்ளத்தில் ஒரு விதமான திகில் குடி கொண்டது.

ரெயில் தென்காசியை அடைந்தது. பாலகிருஷ்ணனும் சிவகாமியும் ரெயிலைவிட்டு இறங்கிக் குற்றாலத்தை அடைந்தார்கள். வாடகைக்கு ஓர் அறையை அமர்த்தி, சிவகாமியைப் பாலகிருஷ்ணன் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

"சாப்பிடு, சிவகாமி."

"எனக்கு வேண்டாம்."

"புறப்படலாமா?"

"உம்."

அவர்கள் இருவரும் அறையை அணுகி, வாசற்படி ஏற யத்தனித்தார்கள். முதலில் பாலகிருஷ்ணனுக்குக் கால் இடறியது. சிவகாமிக்கும் கால் இடறியது. அவர்கள் மேலே சென்றார்கள். அறைக் கதவு திறந்தது. அப்போது எங்கிருந்தோ, "சிவகாமி! சிவகாமி!" என்று ஒரு குரல் கேட்டது.

அது யாருடைய குரல்?

சிவகாமியும் பாலகிருஷ்ணனும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். சிறிது தூரத்தில் பகவான் செட்டியாரும், அவருடைய மகளும் வந்துகொண்டிருந்தார்கள். சிவகாமியைத் திருநெல்வேலிக்கு உடனே கொண்டு வந்து விடுமாறு பகவான் செட்டியார் எழுதிய கடிதத்தைப் பார்த்ததும், சுந்தரம் செட்டியார் அதற்கு உடனே பதில் எழுதிவிட்டார்; லட்சுமியம்மாளுக்கு உடம்பு அசௌகரியமாக இருப்பதாயும், தனக்குக் கடையில் அவசர வேலைகள் இருப்பதாயும், ஆகையினால் பகவான் செட்டியாரே வந்து சிவகாமியைக் கூட்டிக்கொண்டு செல்லும்படியும் அவர் எழுதியிருந்தார். ஆனால் பின்னால் லட்சுமியின் யோசனைப்படி பாலகிருஷ்ணனே சிவகாமியைக் கொண்டுவிடுவதாக முடிவாயிற்று. அதற்குள் சுந்தரம் செட்டியாரின் கடிதம் கிடைத்துவிடவே பகவான் செட்டியாரே புறப்பட்டுவிட்டார். குற்றாலத்தில் ஒரு ஜாகை அமர்த்தி, மகள் ருக்மிணியை அதில் வைத்துவிட்டு, தாம் மட்டும் வெற்றிபுரம் சென்று, சிவகாமியைக் கூட்டிக் கொண்டு மறு ரெயிலிலேயே வந்துவிடலாம் என்று அவர் அங்கு வந்திருந்தார்.

"நான் குற்றாலம் பார்த்ததில்லை. சிவகாமியும் பார்த்ததில்லை. அருவியில் ஸ்நானம் செய்துவிட்டுப் போகலாம் என்று நடுவில் இங்கே இறங்கினோம்" என்றான் பாலகிருஷ்ணன்.

"அது சரிதான்! அது சரிதான்! எனக்கு ஒரு சிரமம் குறைந்தது" என்றார் பகவான் செட்டியார்.

"என்னைத் தடுத்தாட்கொண்ட சுவாமி, என்னை மன்னியுங்கள், மன்னியுங்கள்" என்று பலமுறை சிவகாமி தன் மனத்திற்குள் சொல்லிக்கொண்டாள்.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ருக்மிணி பாலகிருஷ்ணனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்களிருவருடைய கண்களும் சந்தித்தன.

பாலகிருஷ்ணன் இரண்டு நாட்களுக்கப்புறம் தூத்துக்குடி சென்றுவிட்டான்.

"பாலகிருஷ்ணனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நம்ம ருக்மிணிக்கு ஏற்ற மாப்பிள்ளை அல்லவா?" என்று சிவகாமி தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

அவருக்கு அது பிடித்திருந்தது. ஜாதகமும் பிடித்திருந்தது.

"பார்க்கலாம்" என்றார் அவர்.

"நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அங்கே பெண் வீட்டுக்காரர்கள் நெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் அங்கே இருந்த பொழுதே ஜாதகம் பிடித்திருப்பதாக இரண்டொரு பெண்வீட்டார் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் வந்து பேசி முடிந்துவிட்டால், அப்புறம் நம்முடைய எண்ணம் என்னவாகிறது? நமக்கு இந்த மாதிரி அபிப்பிராயம் இருக்கிற விஷயமும்

அவர்களுக்குத் தெரியாது. தெரிந்தாலாவது, இதைக் கருதிக்கொண்டு அவர்கள் வேறு இடத்தைக் கவனிக்காமலிருப்பார்கள்'' என்றாள் சிவகாமி.

இவ்வளவு தூரம் சிவகாமி சொன்ன பிறகு ஒரு நாளிரவு இந்த அபிப்பிராயத்துடன், சுந்தரம் செட்டியார் வீட்டுக்குப் பகவான் செட்டியார் போனபோது, ''வாருங்கள்! வாருங்கள்! சரியான சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள். பாலகிருஷ்ணனின் கல்யாணப் பேச்சு நடந்துகொண்டிருக்கிறது. உட்காருங்கள்'' என்று சுந்தரம் செட்டியார் அவரை உபசரித்தார்.

அதைக் கேட்டதும் பகவான் செட்டியாருக்குத் துணுக்கென்றது. அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. சுந்தரம் செட்டியாரை ஜாடை செய்து வீட்டுக்குள் கூப்பிட்டு, ''நானும் அதே காரியத்துக்காகத்தான் வந்திருக்கிறேன்'' என்றார்.

''இப்பொழுது காரியம் முடியப்போகிற சமயத்தில் திடீரென்று வந்திருக்கிறீர்களே!'' என்றார் சுந்தரம் செட்டியார்.

''இப்பொழுது யோசனை?''

''யோசனை என்ன? கல்யாணத்துக்கு எல்லாரும் வந்துசேருங்கள்.''

பகவான் செட்டியார் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த லட்சுமியம்மாள், ''பாவம்! அவர் இதற்காகவே திருநெல்வேலியிலிருந்து வந்து ஏமாற்றம் அடைந்துபோவது நல்லாயில்லை. ஒன்றுக்குள் ஒன்று பின்னிக்கொண்டு கிடக்கும். அதை, இதை யோசிக்காமல் இவர் பெண்ணைத்தான் முடியுங்கள்'' என்றாள் லட்சுமியம்மாள்.

''அவர்களுக்கு என்ன சொல்வது?''

'' 'சகுனம் சரியில்லை. ஓர் அசந்தர்ப்பம் நடந்துவிட்டது' என்று சொல்லிவிடுங்கள்.''

அப்புறம் இருவரும் கூடத்துக்குள் நுழைந்தார்கள். தம் பெண்ணுக்கு மாப்பிள்ளை பேச வந்திருந்த உமையொருபாகம் செட்டியாரும் அவருடன் வந்திருந்த மற்றவர்களும் விஷயம் இன்னதென்று ஊகித்துக்கொண்டார்கள்.

''அபசகுனம் ஒன்றுமில்லை, அண்ணே. இந்த மனுஷன் இந்தச் சமயத்தில் வந்து சேர்ந்தானல்லவா? அதுதான் அபசகுனம்! எழுந்திருங்கள், அண்ணே; போகலாம். மனுஷன் பேசின பேச்சு மாறும்பொழுது, அப்புறம் என்ன இருக்கிறது?'' என்றார் ஒருவர்.

சுந்தரம் செட்டியார் ஒன்றும் பேசவில்லை. தாம் செய்வது சரியல்ல என்று அவருக்குத் தோன்றியது.

அவர்கள் போன பின்பு கல்யாணப் பேச்சுத் தொடர்ந்து நடந்து, வெற்றிலை பாக்கும் பரிமாறிக்கொண்டார்கள். லட்சுமியம்மாள் மிகவும் சந்தோஷமடைந்தாள்.

உமையொருபாகம் செட்டியாரின் மகள் சகுந்தலையையும், பகவான் செட்டியார் மகள் ருக்மிணியையும் சீர்தூக்கிப் பார்த்தால், சகுந்தலையே அதிக அழகானவள். அவளைத்தான் பாலகிருஷ்ணனுக்கும் அதிகம் பிடித்திருந்தது. ஆயினும் அவனும் இந்தச் சம்பந்தத்தில் திருப்தியே அடைந்தான்.

கல்யாண ஏற்பாடுகள் இரண்டு வீடுகளிலும் ஆரம்பமாயின. சிவகாமி தன் சொந்தப் பெண்ணின்

கல்யாணத்தைப் போலவே அதில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டாள்.

"இந்த வைரப் பதக்கத்தைப் பார், சிவகாமி. நன்ருயிருக்கிறதா?" என்று பகவான் செட்டியார் கேட்டார்.

"நன்ருய்த்தான் இருக்கிறது. என்ன விலே?"

"ஐந்நூறு ரூபாய் சொல்கிருர்கள்."

"வாங்கிவிடுங்கள். நன்ருய்த்தான் இருக்கிறது."

"இரண்டாக வாங்கி விடலாம். உனக்கு வைரப் பதக்கம் இல்லையல்லவா?"

"எனக்கு எதற்கு? ருக்மிணிக்கு வாங்குங்கள்; போதும்."-ருக்மிணிக்குச் செய்வதெல்லாம் பாலகிருஷ்ணனுக்கே செய்வதாக அவள் மதித்தாள். பாலகிருஷ்ணனை அவளால் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியவில்லை. எனவே, அவனுக்கு மாமியாராகவாவது இருக்கலாமல்லவா என்று அவள் நினைத்தாள்.

ஆனல் மனிதர்கள் நினைத்தபடியே காரியங்கள் நடக்கின்றனவா? நடப்பதில்லை. இந்தக் கல்யாணம் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் அதைப்பற்றி என்னவெல்லாமோ கற்பனை செய்துகொண்டிருந்தார்கள். பலரும் பலவிதமாக இந்தக் கல்யாண விஷயத்தில் உற்சாகம் கொண்டார்கள். அவர்களுடைய கற்பனைகள் எல்லாம் வீணுயின. பாலகிருஷ்ணனுக்கும் ருக்மிணிக்கும் நடக்கவிருந்த விவாகம் நின்றுவிட்டது. பெரிய நதிகள் எல்லாம் சிறிய மூலத்தையே கொண்டுள்ளன. அதுபோல் பெரிய காரியங்களும் சிறிய காரணத்தையே கொண்டுள்ளன. ஒரு சிறிய காரணத்தினுல் கல்யாணம் நின்றுவிட்டது. பகவான் செட்டியார் வாக்கு மாறிவிட்டார்! சுந்தரம் செட்டியார் மிகுந்த வருத்தமடைந்தார். அவர் பகவான் செட்டியாரைக் குறை கூறவில்லை. தம்மைத் தாமே நொந்து கொண்டார். உமையொருபாகம் செட்டியாரிடம் பேசிவிட்டு, அவர் உடனே மாறினுரல்லவா? அதற்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டதென்று அவர் கருதினுர். ஊரார் இதைப்பற்றி இகழ்ச்சியாய்ப் பேசுவார்களே என்று அவர் வெட்கினுர்.

திருநெல்வேலியில் ருக்மிணிக்கும் அவளுடைய மாமன் மகனுக்கும் நடக்கவிருந்த கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. ஆனல் சிவகாமி அந்த விஷயத்தில் சிறிதேனும் உற்சாகம் கொள்ளவில்லை. அவளுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. 'இவளுடைய மாமன் மகனுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்ரு நான் இத்தனை நகைகளையும் செய்யச் சொன்னேன்?' என்று அவள் நினைத்தாள்.

இந்தத் துக்கத்தில் அவளுக்கு டைபாயிட் ஜுரம் வந்துவிட்டது. மிகவும் அபாயமான நிலையில் இருந்தாள். அவளைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று லட்சுமியம்மாள் துடியாய்த் துடித்தாள்.

"என்னை மதியாதவன் வீட்டுக்கு நீ என்ன போவது?" என்ருர் சுந்தரம் செட்டியார்.

"நான் அவர்கள் வீட்டுக்குப் போகாமல், வேறு யார் வீட்டிலாவது இறங்கிச் சிவகாமியை மட்டும் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்."

"கூடாது."

இப்படிச் சுந்தரம் செட்டியார் குடும்பத்துக்கும், பகவான் செட்டியார் குடும்பத்துக்கும் பேச்சு வார்த்தையற்றுப் போக்குவரவும் அற்றுப் போய்விட்டது.

"சுந்தரம் செட்டியார் பேரன் கல்யாணம் நின்றுவிட்டதாமே? இப்பொழுது அவருடைய அபிப்பிராயம் எப்படி இருக்கிறதென்று தெரியவில்லையே" என்று ஒரு நாள் உமையொருபாகம் செட்டியார் தம் நண்பர்களிடம் கூறினுர்.

"அதென்ன, அப்படிக் கேட்கிறீர்கள்? அங்கே சம்பந்தம் செய்து கொள்ள உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா?"

"பெண் பெற்றவனுக்கு மானம் ஏது? மரியாதை ஏது, ஐயா?" என்ருர் உமையொருபாகம் செட்டியார்.

"அது நிஜந்தான்" என்று அங்கிருந்தவர்களும் அவருடைய அபிப்பிராயத்தை ஆமோதித்தார்கள்.

பின்பு வந்தவர்கள் போனவர்களையெல்லாம் உமையொருபாகம் செட்டியார் விசாரிக்க ஆரம்பித்தார். சுந்தரம் செட்டியாரும் தம்முடைய சம்பந்தத்தை விரும்புகிருரென்றும், அவர் முன்பு பேச்சு மாறியதற்கு அதை ஒரு பிராயச்சித்தமாகக் கருதுகிருர் என்றும், அவருக்குத் தெரிய வந்தது. அப்புறம் கேட்பானேன்?

பாலகிருஷ்ணனுக்கும் சகுந்தலைக்கும் ஒரு நல்ல முகூர்த்தத்தில் திருமணம் நிறைவேறியது.

புது மணத் தம்பதிகளின் வெட்கம், கூச்சம் எல்லாம் சற்று மறைந்தபோது, ஒரு நாள் பாலகிருஷ்ணன் தான் கேட்க நினைத்த கேள்வியைக் கேட்டே விட்டான்.

"ஏன் சகுந்தலா, நீ என்னையே கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று பிடிவாதம் செய்தாயாமே! நான் உனக்கு என்ன அபராதம் செய்தேன்? நீ ஏன் என்னை இப்படித் தண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தாய்?"

இதைக் கேட்டதும் சகுந்தலை கோபத்துடன் அவனை விழுங்கி விடுபவள்போல் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். பின்பு திடீரென்று சிரித்துக்கொண்டு, "அந்த ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில் அத்தனை பேர் இருக்க, என்னையே ஏன் அப்படி வெறிக்க வெறிக்கப் பார்த்தீர்கள்? அந்தக் குற்றத்துக்காகத்தான் தண்டிக்க வேண்டுமென்று தீர்மானித்தேன்!" என்று சொன்னுள்.

பாலகிருஷ்ணன் சிரித்தான். பாலகிருஷ்ணனுடைய இல்லற வாழ்க்கை இன்பகரமாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு நாள் பாலகிருஷ்ணன் தன் மனைவிக்காகப் பூவும் பலகாரங்களும் வாங்கி வந்தான். சகுந்தலை அந்தப் பலகாரங்களைச் சாப்பிடவில்லை. அவன் வாங்கிக்கொண்டு வந்த பூவையும் அவள் தன் தலையில் வைத்துக் கொள்ளவில்லை. இதை அவன் கவனித்தான்.

"நான் வாங்கி வந்த பூவை நீ ஏன் வைத்துக்கொள்ளவில்லை?"

"நான் வைத்துக்கொள்ள இஷ்டப்படவில்லை!"

"இஷ்டமில்லையா?"

"ஆமாம்?."

"என், நான் தொட்ட பூ உனக்கு ஆகாதோ?"

"நீங்கள் தொட்ட பூ எனக்கு ஆகும்."

"அப்புறம்?"

"நான் வைத்துக்கொள்ள இஷ்டப்படவில்லை!"

பாலகிருஷ்ணன் மிகுந்த கோபத்துடன் அவளைப் பார்த்தான்.

"ஐயோ! உங்கள் கோபத்தைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. இப்படி எல்லாம் என்னைப் பார்க்காதீர்கள்!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே தன் மடியிலிருந்து பூவை எடுத்து, "நான் வைத்துக்கொள்ள இஷ்டப்படவில்லை. நீங்களே அதைச் சூட்ட வேண்டும் என்பது என் ஆசை!" என்று அவன் கையில் கொடுத்தாள்.

பாலகிருஷ்ணனுக்குச் சந்தோஷம் கரைகொள்ளவில்லை. அவளுக்குப் பூச் சூட்டினன். இப்படி அவர்களுடைய இல்லறச் சகடம் இனிது ஓடிக்கொண்டிருந்தது.

பாலகிருஷ்ணனுடைய பள்ளிப் படிப்பு முடிந்துவிட்டது. திருநெல்வேலி ஹிந்துக் கல்லூரியிலிருந்து அவனுக்குப் பிரவேச உத்தரவு வந்திருந்தது. அவன் மறுநாள் திருநெல்வேலிக்குப் புறப்பட இருந்தான். அன்றிரவு லட்சுமியம்மாள் மாடிக்கு வந்தாள்.

"எண்டா பாலு, மேற்படிப்புக்குத் திருநெல்வேலிக்கா போகிருய்?"

"ஆம்."

"அங்கே சிவகாமியைப் பார்ப்பாயல்லவா?"

"அவளை என் பாட்டி பார்க்கப் போகிறேன்?"

"அப்படியானல் அவளை நீ பார்க்கவே மாட்டாயா?"- அவளுடைய கண்களில் நீர் மல்கியது.

"எதற்காக, பாட்டி, கேட்கிருய்?"

"அவள் சௌக்கியமா யிருக்கிருளா என்று பார்த்து எனக்கு ஒரு கடிதம் போட மாட்டாயா?" அவளுடைய கண்களினின்றும் நீர்த்துளிகள் உதிர்ந்தன. "அல்லது, நீ திரும்பி வரும்பொழுது அவளைப் பார்த்துவிட்டாவது வருகிருயா?" என்ருள்.

பாட்டியின் குரலும் அவள் பேசிய முறையும் பாலகிருஷ்ணனுடைய உள்ளத்தைத் தொட்டன. திருநெல்வேலிக்குப் படிக்கச் செல்வதென்று அவன் தீர்மானித்த தன் ஆதிகாரணம் வேறுதான். ஆயினும், அப்பொழுது தனக்கு முன்னல் நின்ற பிள்ளையில்லாத அந்தப் பெண் ஜன்மத்தைத் திருப்தி செய்வதற்காகவேனும் எத்தகைய தடைகளையும் மீறிக்கொண்டு, தான் திருநெல்வேலிக்குப் போகலாம் போல அவனுக்குத் தோன்றியது.

"மறந்து விடாதே, தம்பீ!" என்று பிள்ளையில்லாத அந்தப் பெண் ஜன்மத்தின் குரல் மீண்டும் கெஞ்சியது.

பாலகிருஷ்ணன் திருநெல்வேலிக்கு வந்து ஏறக்குறைய ஒரு மாதமாகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சிவகாமியைப் பார்க்க வேண்டுமென்று அவன் தீர்மானித்துக்கொள்வான். ஆனல் ஏனே அதுவரைக்கும் அது நிறைவேறவில்லை. அந்த ஞாயிற்றுக்கிழமை அவளைக் கட்டாயம் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்து, அவன் வேகமாய் நடந்தான். சிவகாமியின் வீடு வந்துவிட்டது. சிவகாமி வாசலிலேயே நின்றுகொண்டிருந்தாள். அதே பழைய மோகன உருவம்! பாலகிருஷ்ணன் அவளைப் பார்த்தான். பார்த்ததும் அப்பால் வேகமாய் நடந்துவிட்டான். இதற்கப்புறம்

ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை நேரத்தில் சிவகாமியின் வீட்டு வழியாகச் செல்வதையும், அவளைப் பார்ப்பதையும் ஒரு முக்கியமான காரியமாக வைத்திருந்தான் பாலகிருஷ்ணன்.

இப்படி ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சிவகாமி திண்ணையில் உட்கார்ந்திருந்தபோதுதான், அந்தச் சம்பவம் நடந்தது. எப்பொழுதும் போல் தெரு வழியே போகாமல், பாலகிருஷ்ணன் அன்று அவளை நோக்கி நடந்து சென்றான். சிவகாமியின் உள்ளம் படபடத்தது. அவன் அவளை அணுகி, "சிவகாமி!" என்று அழைத்தான். அவள் ஒன்றும் பதில் சொல்லாமல், கதவை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு பேசாமல் நின்றாள்.

"நான் நாளை ஊருக்குப் போகிறேன். பாட்டி உன்னைப் பார்த்துவிட்டு வரச் சொன்னாள்."

சிவகாமி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"சௌக்கியமாய்த்தான் இருக்கிறேன்."

"சந்தோஷமாக இருக்கிறாயல்லவா?"

இது யாருடைய கேள்வி? பாட்டியினுடைய கேள்வியா? அல்லது பாலகிருஷ்ணனுடைய சொந்தக் கேள்வியா?

"உம்."

"நான் நாளைக்குப் புறப்படுகிறேன். பாட்டிக்கு ஏதாவது சமாசாரம் உண்டா?"

"சமாசாரம் என்ன இருக்கிறது? அம்மா சுகமாயிருக்கிறாளல்லவா?"

"சுகமாய்த்தான் இருக்கிறாள். சரி. நான் போய் வரட்டுமா?" என்று சொல்லிவிட்டுப் பாலகிருஷ்ணன் புறப்பட்டான்.

அவன் ஊர் போய்ச் சேர்ந்தபோது, பாட்டியும் சகுந்தலையும் அவனை முகமலர்ச்சியுடன் வரவேற்றார்கள்.

"சிவகாமியைப் பார்த்தாயா, தம்பி?"

"பார்த்தேன், பாட்டி. நீ சுகமாயிருக்கிறாயா என்று பாட்டி பார்த்துவிட்டு வரச்சொன்னாள் என்றேன். அப்படிச் சொன்னேனோ இல்லையோ, அவளுடைய கண்களிலிருந்து 'பல பல' என்று கண்ணீர் உதிர்ந்தது, பாட்டி!"

பாலகிருஷ்ணன் இந்த வார்த்தைகளைச் சொன்னதும் பாட்டியின் கண்களிலும் நீர் மல்கியது.

"அவள் சுகமாயிருக்கிறாளா, தம்பி?"

"சுகமாயிருக்கிறாள்."

பாலகிருஷ்ணனுடைய கல்லூரிப் படிப்பு இடையிலேயே அகாலத்தில் நின்றுவிட்டது. சுந்தரம் செட்டியாருக்கும் மகன் ராமநாதம் செட்டியாருக்கும் சிறிது சிறிதாகப் புகைந்துகொண்டு வந்த மனஸ்தாபம் கடைசியில் வியாஜ்யம் நடக்கும் நிலைமையை அடைந்தது. இறுதியில் சுந்தரம் செட்டியார் சொத்து முழுவதையும் இழந்தார். லட்சுமியம்மாள் நோய்வாய்ப்பட்டாள். அவள் படுக்கையிலிருந்து எழுந்திருப்பாள் என்ற நம்பிக்கையே ஒருவருக்குமில்லை. "லட்சுமி போய்க்கொண்டிருக்கிறாள்" என்றார் சுந்தரம் செட்டியார். அது இரண்டு விதங்களிலும் பொருத்தமாயிருந்தது. ஒரு நாள் லட்சுமி கண்களை மூடினாள். பின்பு ஒரு

நாள் வியாஜ்யம் முடிந்தது. அது முடிவதற்குள் சொத்தும் முடிந்து விட்டது!

பாட்டியின் கடைசிக் காலத்தில் பாலகிருஷ்ணன் அவளைப் பார்ப்பதற்குக்கூட முடியவில்லை. ஆனால் அவள் வளர்த்த பெண்ணாகிய சிவகாமி அவள் பக்கத்திலேயேதான் இருந்தாள். அவளுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையெல்லாம் குறையில்லாமல் சிவகாமி செய்து வந்தாள்.

இறப்பதற்கு முன் ஒரு நாள் லட்சுமியம்மாள் சிவகாமியைத் தன் பக்கத்தில் அழைத்து, "நீ சந்தோஷமாயிருக்கிறாயா, சிவகாமி?' என்று கேட்டாள்.

"சந்தோஷத்துக்கு என்னம்மா குறை? எனக்கும் பெண்ணென்றும் ஆணென்றும் உண்டல்லவா?"

"இந்தக் கல்யாணம் எல்லாம் என்னடி கல்யாணம்? வீட்டையும் வாசலையும் பார்த்து நான் அந்தக் காலத்தில் ஆறுதல் அடைந்தேன் என்பது நிஜந்தான். ஆனால் உண்மையில் சொல்கிறேன். கல்யாணத்தைப்பற்றி எனக்குத் துளிக்கூடச் சந்தோஷமில்லை. நீ ஏழைப் பெண்ணும்! உன்னைத் தன் பேரனுக்குக் கட்டிவிடுவேன் என்று பயந்துதானடி அவசரமாய் உன் கல்யாணத்தை அவர் நிச்சயித்துக்கொண்டு வந்தார். உன்னை ஏழை என்று நினைத்தார்களே, நீ இப்பொழுது ஏழையாகவா இருக்கிறாய்? தங்களைப் பணக்காரர்களாக மதித்துக் கொண்டார்களே, அவர்கள் பணக்காரர்களாகவே இருக்கப் போகிறார்களா? இந்த வழக்கு முடியும் போது, அவர்கள் அப்பனும் மகனும் இருக்க வீடில்லாமல், குடிக்கக் கஞ்சியில்லாமல் தெருவில் நிற்கிறார்களா, இல்லையா என்று பார். அந்தப் பயல் பாலுவின் கதி என்ன ஆகுமோ என்றுதான் என் மனம் நோகிறது. உன்னை அவனுக்குக் கட்டியிருந்தால், இந்தக் குடும்பம் இந்தக் கதிக்கு வருமாடி?" என்று தேம்பித் தேம்பி லட்சுமியம்மாள் அழுதாள்.

சிவகாமியும் விம்மி விம்மி அழுதாள்.

பாலகிருஷ்ணன் ஒரு சிறிய உத்தியோகத்தில் இருந்தான். அவனுக்குக் கிடைத்த வருமானம் சொற்பமே. ஆயினும் அதைக் கொண்டு அவன் திருப்தியாகவே வாழ்ந்து வந்தான். சகுந்தலை அவன்மீது அளவுக்கு மிஞ்சி அன்புடன் இருந்தாள். ஆயினும் அவனுடைய இல்வாழ்க்கை நிறைவுள்ளதாகத் தோன்றவில்லை.

சிவகாமியை மறந்துவிட வேண்டும் என்று அவன் முயன்றான். ஆனால் அது முடியவில்லை. பல வருஷங்கள் கடந்துவிட்டன. ஆயினும் அவளைப்பற்றிய நினைவு என்றும் பசுமையாகவே இருந்தது. "சிவகாமியை என் பேரனுக்குத் தான் கல்யாணம் செய்வேன் என்று பாட்டி பிடிவாதம் செய்திருந்தால் நடந்திருக்காதோ?" என்று அடிக்கடி அவன் நினைப்பான். ஆயினும் அவனுடைய இல்லறச் சகடம் நேராகத்தான் போய்க்கொண்டிருந்தது. இப்படி இருக்கும்போதுதான் ஒரு நாள் தபால்காரன், "உங்களுக்கொரு புக்-போஸ்ட் இருக்கிறது, ஸார்" என்று அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அது ஒரு திருமண அழைப்புப் பத்திரிகை. இப்பொழுது பாலகிருஷ்ணனுக்கு, திருமணம்

என்றாலே வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அது திருநெல்வேலியிலிருந்து வந்திருந்தது. சிவகாமியின் மகளுக்குக் கல்யாணமாம்!

அதில் கண்டிருந்த இன்னொரு விஷயம் அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. "காலம் சென்ற பகவான் செட்டியாரின் புத்திரி சௌபாக்கியவதி........" என்று குறிப்பிட்டிருந்தது.

அப்படியானால்?

சிவகாமி விதவையா? ஐயோ! அது எப்பொழுது நடந்தது?

பத்திரிகையின் அடிப்பாகத்தில் விருந்ினரை எதிர்பார்ப்பவர்களின் பெயர்களில் பாலகிருஷ்ணன் பெயரும் இருந்தது. அவனுடைய உள்ளம் துடித்தது. கட்டாயம் திருமணத்துக்குப் போகவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்.

ரெயிலில் வழி நெடுகப் பாலகிருஷ்ணனுக்குச் சிவகாமியின் சிந்தனையாகவே இருந்தது. அவனை அவ்வளவு தூரம் கவருவதற்குச் சிவகாமியின் அழகில் என்ன விசேஷ அம்சம் பொருந்தியிருந்தது? அதுதான் அவனுக்கு விளங்கவில்லை.

சிவகாமியின் வீட்டை அடைந்தான். அங்கே மேளம் முழங்கிக்கொண்டிருந்தது. "என் இப்படித் துரும்பாய் இளைத்துவிட்டீர்கள்? அடையாளமே தெரியவில்லையே!" என்று சிவகாமி வியப்புடன் பாலகிருஷ்ணனைப் பார்த்துக் கேட்டாள். வாழ்க்கைப் புயலில் அடிபட்டு, வாடி வதங்கிய அவனுடைய உருவத்தைக் கண்டபோது அவளும் பிரமித்தாள்.

"சகுந்தலையை ஏன் கூட்டிக்கொண்டு வரவில்லை? உங்கள் இருவரையுமல்லவா தாரை வார்க்கச் சொல்லலாமென்றிருந்தேன்? கல்யாணம் முடிந்ததும், ஊருக்குப் போய்க் குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு இங்கே வந்து விடுங்கள். சொத்தில்லையே என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். என் சொத்தெல்லாம் இனி உங்கள் சொத்துத்தான்!" என்றாள் சிவகாமி. பாலகிருஷ்ணனுடன் அவள் முதல் முதலில் பன்மையில் பேசியது இந்தச் சந்திப்பில் தான்.

அப்புறம் இருவரும் மணவறைக்குச் சென்றார்கள். வாத்தியம் முழங்கிக்கொண்டிருந்தது. எல்லாச் சடங்குகளும் முடிந்த பின், மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் திருமங்கலியத்தைக் கட்டினான்.

சிவகாமி பாலகிருஷ்ணனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். ஒரே நேரத்தில் இருவருடைய இதழ்களிலும் ஓர் அழகிய புன்முறுவல் பூத்தது!

கொட்டு மேளம் கொட்டியது. திருமணம் நிறைவேறியது. அவர்களுடைய உள்ளங்களுக்கிடையே நிறைவேறியது.

அடங்காத தாகம் அடங்கியது.

காதல் தீபம் சுடர் விட்டது!

முன்பு சிவகாமியைப்பற்றி நினைத்தபோதெல்லாம் பாலகிருஷ்ணனின் உள்ளத்தில் குழப்பமும் கலவரமுமே தோன்றின. ஆனால் இப்பொழுதோ அவளைப்பற்றி நினைக்க நினைக்க, அவனுடைய மனத்தில் மாசற்ற மகிழ்ச்சி உண்டாகிறது. அவளுடைய நினைவு அவனுடைய சிந்தனைக்குத் தெளிவும், சொல்லுக்கு இனிமையும், செயலுக்கு இங்கிதமும் கொடுக்கிறது. ★

உண்மை என்ன?

"ஆகா! என்ன அழகு, என்ன அழகு!" என்று திடீரென்று கூவியது கண்.

"எதைப்பற்றிச் சொல்கிறீர்கள்? எது அழகு? எப்படிப் பட்ட அழகு?" என்று காதும் மூக்கும் கையும் ஆவலோடும் பரபரப்போடும் கண்ணைக் கேட்டன.

"அதோ எதிரே தெரிகிறது பாருங்கள், பசுங்குன்று! அருவிக்குப் பின்னால் ஒய்யாரமாகத் தலைநிமிர்ந்து நிற்கிறதே, அந்தக் குன்று! அதன் உடலில் நீலப் பட்டுப் போர்த்ததுபோல முகில்கள் எப்படி மிதந்து செல்கின்றன, பாருங்கள்" என்றது கண்.

காது உற்றுக் கேட்டது. அதற்கு எதுவும் புலப்பட வில்லை. "பசுமையான குன்றா? அது எங்கே இருக்கிறது? அதன் ஒலி எனக்கு அடியோடு கேட்கவில்லையே!" என்றது.

கை கலகலவென்று நகைத்தது. "குன்றாவது, மண்ணாங் கட்டியாவது! அண்ணா கண்ணப்பன் ஏதோ புரளி பண்ணு கிறார். அவர் சொன்னதிலிருந்து நானும் அந்தக் குன்றைத் தொட்டுப் பார்க்க வேண்டுமென்று படாத பாடு படுகிறேன்; அது இருந்தால்தானே ஐயா, என்னால் தொட முடியும்?" என்றது.

உடனே மூக்கு, கிண்டலாகக் கோணிக்கொண்டே, "அட சே! எதிரே எங்கிருந்து அப்பனே வந்தது குன்று? அது உண்மையிலே அங்கே இருந்தால் அதன் மணம் எனக்கு வீசாதா?" என்றது.

பாவம், கண் இவற்றுக்கு என்ன பதில் சொல்லும்?

அது தன் பார்வையை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டது.

மூக்கும் காதும் கையும் தமக்குள்ளே ரகசியமாகப் பேசிக் கொண்டன.

"இந்தக் கண் வரவர மகா மோசமாகிவிட்டது. அதற்கு இப்போதெல்லாம் என்னவோ பிரமை வந்துவிட்டது. உலகிலே இல்லாத பொருள்களெல்லாம் அதற்குத் தென் படுகின்றன. பாவம், அதற்கும் வயதாகிவிட்டதோ இல்லையோ?" என்று அவை பேசின.

—கலில் கிப்ரான்

மஞ்சரி

டிசம்பர் '51—நவம்பர் '52

ஐந்தாம் வருஷ அட்டவணை

அரசியல்

அமெரிக்கத் தேர்தல். அக். '52. 10
ஊரும் உலகமும். . டிச. ' 51 . 1
ஜன. '52. . 1. பிப்.' 52. 1.
மார்ச் '52. . 1. எப்.'52. . 1.
மே '52. 2 . ஜுன்'52. . 1
ஜுலை '52. 2. ஆக.'52. . 1
செப். '52. . . 1 அக்.'52. . 1
நவம் '52. . . 1
சட்டசபை உறுப்பினர் கடமை
டிச. '51. . 3
சுவரால் .. வினை எப். '52 57
பிளந்த பாலஸ்தீனம். எப்.'52 . 42
மலேயாக் குழப்பம். மார்ச் '52 . 33
ருஷியாவில் சம்பளம்.
செப். '52. .48

உணவு

உணவு என்ன செய்யும்?
நவ. '52 . . 8
உலகப் பசி. மே '52. . . 49
கரும்புப் பயிர். ஜுன் '52. . 30
திருந்திய இட்டிலி - தோசை
செப். '52 . . 50

உருவகக் கதைகள்

உண்மை என்ன?—கலில் கிப்ரான்
நவ. '52 . . 75
தங்கத்தைவிட உயர்ந்தது.
எப். '52 . . 80
தொழிலும் கலையும். மார்ச். '52 . .
3-ஆம் அட்டை.
வாளும் தலையும். ஜுன் '52
3-ஆம் அட்டை.

க்விஸ்

டிச. '51 . 10 பிப். '52 . 65
எப். '52 . . 15 ஜுன் '52 . 10
ஆக. . . '52 9 செப். '52 . . 12

கல்வி

சீன மொழி. . : மார்ச் '52 . . 36
மாண்டிஸோரி கல்வி. செப். '52. 14

கற்பனை உலகம்

கி. பி. 2000-ஆண்டில்
டிச. '51. . . 33
வருங்கால மனிதன். செப்.'52 . 33
விடுதலை நாடு. ஆக. '52 . . . 30

கார்ட்டூன் கதம்பம்

டிச. '51 . . 14 ஜன. '52 . . 40
பிப். '52 . . 40 மார்ச். '52 . 40
எப். '52 . . 40 மே '52 . . 48
ஜுன் '52. 14 ஜுலை '52 . 40
ஆக. '52 . . 40 செப். '52 . 40
அக். '52 . . 40 நவ. '52 . 40

சமூகம்

ஆங்கிலோ - இந்தியர் அவதி
ஆக. '52 52
ஆடைப் பொருத்தம். ஆக. '52. 18
இந்திய ஜனத்தொகை
அக். '52 . 38
உலக அழகி போட்டி. ஜுலை '52. 42
எது நாகரிக பாணி? மார்ச் '52... 16
கல்யாணம். . ஜுலை '52 4
வங்காள விரதம்
ஜுலை '52 . . . 23
ஜீவனும்சக் கொள்ளை.
ஆக. '52 38

சிறுகதை

அம்மன் அருள்—ஜான் ஹாம்ஸன் . . . . அக். '52. . . 73

காதல், சாதல், தியாகம்—வில்லியம் சரோயன். மே '52 . 74
கிறிஸ்துமஸ் பூஜை—விளாடிமிர் ஸ்டெட்ரி. ஜன. '52 . 61
கொடி-கே. ஏ. அப்பாஸ் டிஸ. '51 . 61
கொலைகாரன் - அலெக்ஸாண்டர் குப்ரின் நவ. '52 . 52
சிரித்த முகம்—ஸுரேச ராஜூத் . . மார்ச் '52 . . . 67
சுதந்தரக் கூத்து—ஆலன் மங்க் ஹவுஸ் . . ஜூன் '52 . . 69
ஞானோதயம்—ரவீந்திரநாத் டாகுர் . . . மே '52 . .70
நம்பாதவன்—கெரால்டு கெர்ஷ் மார்ச் '52. . . 72
பனிப்புயல்—அலெக்ஸாண்டர் புஷ்கின் . . . செப். '52 . .71
பெற்ற மனம்—ஸுசீலா சிகாடே ஜூலை '52 . . .76
மனச்சாட்சி—பி. சாய்னவ்ஸ்கி ஏப். '52 . . 59
மனத்தத்துவ நிபுணர்—அசோக் சட்டர்ஜி . . பிப். '52 . . 69
வெள்ளியும் சனியும்—மஞ்சேரி எஸ். ஈச்வரன் ஆக. '52 . . 71

சுக வாழ்வு

ஆரோக்கியத்தில் அழகு மார்ச் '52 . 59
சுகத்துக்கு நான்கு வழி ஏப். '52 . 12

தத்துவம்

தெய்வ அறிவு . . .டிச. '51 . 16
மகான்கள் கண்ட உண்மை ஆக. '52 . 68

தனிப்படம்

கம்யூனிஸ்ட் பெருமை மே '52. 65
காத்திருக்கும்போது பிப். '52 . 41
சில கட்சிகளின் தேர்தல் சின்னங்கள் . . ஜன. '52 . 16
சுலபமாய் இந்தி கற்கும் முறை . . ஏப். '52 . 7
பணம் போகிற விதம். அக். '52 . 48

தாய்மையும் குழந்தைவளர்ப்பும்

கருத்தடையில் புது முறை பிப். '52 . 54
குழந்தையிடம் அதிகப் பேச்சு பிப். '52 . 25
குழந்தையின் சுகவாழ்வு ஜூலை '52 . 30
குறைமாதக் குழந்தை ஜன. '52 . 35
பால் நிறுத்தும் சமயம் டிச. '51 . 25

தொழில்

ஆயிரம் வருஷத் தொழில் ஜூன் '52 . 51
இந்தியக் கார் . . அக். '52 . 30
என்றும் ஒளிவிடும் வைரம் ஆக. '52 . 55
எனக்குப் பிடித்தவர் வக்கீல்கள் மார்ச் '52 . 55
கொம்பின் உச்சியில் அக். '52 . 15
சினிமாவில் வானலோகம் டிச. '51 . 5
துணியில் கொள்ளை லாபம் ஜூலை '52 . 61
நம் நாணயச்சாலை ஏப். '52 . 28
நம் பத்திரிகைகள் அக். '52 . 57
நாடி ஜோஸ்யம். பிப். '52 . 49
பஞ்சு படும் பாடு . டிச. '51 . 36
பத்திரிகை மாறுதல் செப். '52 . 29
பள்ளி செல்லும் பாங்கி ஆக. '52 . 4
பஸ் சவாரி. செப். '52 . 53
புதிய சீனாவில் சம்பளம் பிப். '52 . 47
முத்து மாலை. அக். '52 . 33
ருஷியாவில் சம்பளம் செப். '52 . 48
ரேகை சாஸ்திரம். ஏப். '52 . 24
'வலை' விமர்சனம் அக். '52 . 22

விரல் குறி மோசடி. எப். '52 . 49
ஹாலிவுட் படத்தடைகள்
ஜூலை '52 . 36

நடைச் சித்திரம்

அபேட்சகரைச் சந்தியுங்கள்
ஜன. '52 . 18
சேட்ஜீயின் தினக் குறிப்பு
செப். '52 . 45
பொடியும் புகையும்
ஆக. '52 . 63
யாருக்கு என்ன பதவி?
மார்ச் '52 . 20
ராஜதந்திரிகள் கலாசாலை
செப். '52 . 42

நாடும் மக்களும்

அழகு நிரம்பிய காஷ்மீர்
ஜன. '52 . 3
ஆப்பிரிக்காவில் இந்து நாகரிகம்
பிப். '52 . 29
இந்திய - அமெரிக்க உறவு
ஜன. '52 . 51
இந்தியப் பழங்குடிகள்
ஆக. '52 . 42
உல்லாச ராஜதானி டிச. '51 . 46
'கலைமான்' ஜாதியார்
நவ. '52 . 42
கவலையற்ற மலை ஜாதியார்
மே '52 . 12
காஷ்மீரின் கனிச் செல்வம்
ஜூலை '52 . 49
துருக்கியும் இந்தியாவும்
ஜன. '52 . 42
தூக்கி வந்து மணம் புரிவோர்
ஜூன் '52 . 16
பெருமை வாய்ந்த இந்தியா
மே '52 . 37
மலாயாத் தமிழன் ஆக. '52 . 46
மருமக்கள் தாயம் நவ. '52 . 14
மாறி வரும் சிங்களவர்
செப். '52 . 58

பாபுராவ் பதில்

டிச. '51 . 18 ஜன. '52 . 59
ஜூலை '52 . 74 ஆக. '52 . 66
செப். '52 . 7 நவ. '52 . 47

பிரபல இடங்கள்

ஆசியாவில் பெரிய புத்தகசாலை
ஜூன் '52 . 25
உலகத்தின் உச்சி. நவ. '52 . 32
கீதை பிறந்த ஊர். ஜூன் '52 . 49
கோலூர் அழகன். நவ. '52 . 11
சிற்பத்தில் அற்புதம்
ஜூலை '52 . 18
மெக்கா யாத்திரை பிப். '52 . 33
வன சங்கரி பிப். '52 . 42

பிராணிகள்

அமெரிக்காவை வென்ற மைனு
டிச. '51 . 11
அரக்கும் அரக்குப் பூச்சியும்
மே '52 . 25
காட்டு விலங்கின் காதல்
ஜன. '52 . 45
குருவிக் குடிசை அக். '52 . 25
சண்டித்தனம் மிகுந்த பிராணி
ஜூலை '52 . 16
சிறந்த காவல் நாய் மே '52 . 54
நத்தைகள் சங்கம். மார்ச் '52 . 28
நீர்க் குதிரை பிப். '52 . 22
பவிபிக் பிசாசு ஜன. '52 . 25
பிராணிகள் விந்தை மே. '52 . 9
யானை பிடிக்கும் குழி
அக். '52 . 3

புத்தகச் சுருக்கம்

ஆண் உள்ளம் - ஜியார் ஜெரி காண்ட்ரி . . பிப். '52 . 73
என் வாழ்க்கை - ராஜேந்திர பிரசாத். . . ஜூன் '52 . 73
காலைப் பிறை - எப். டபிள்யூ. பெயின். . . ஜன. '52 . 65
கோபாலகிருஷ்ண பாரதியார் - டாக்டர் உ. வே. சாமிநாதையர் . . . டிச. '51 . 65
திருமணம் - சு. குருசாமி
நவ. '52 . 57

பொது

அழகு தரும் எண் . எப். '52 . 16
ஆவி பேசுகிறது . ஜன. '52 . 56
இருபது லட்ச ரூபாய்ப் பூனை டிச. '51 . 20
உலகம் சுற்றிய நாணயம் ஜூன் '52 . 3
கண்ணிலே தெரியுமா? மார்ச் '52 . 49
சிரிக்கும் உலகம். செப். '52 . 20
சுங்க மோசடி.... மே. '52 . 44
தர்ம உபதேசம் அக். '52 . 55
நாட்டிய சாலை . . அக். '52 . 17
பத்து லட்சம் இனும் நவ. '52 . 37
பணக் குண்டு. அச். '52 . 12
பழைய வாத்தியங்கள் எப். '52 . 3
பார்லிமெண்ட் 'க்யூ' அக். '52 . 45
முயல் குட்டி பெண் டிச. '51 . 31
ராணுவம் பயன் பட வழி அக். '52 . 42

பொழுதுபோக்கு

இது உங்களுக்குத் தெரியுமா? பிப். '52 . 16
ஒலிம்பிக் விளையாட்டு ஜூலை '52 . 7
சென்னை டெஸ்ட். பிப். '52 . 9
பரிசு பெற்றவர் ஜூலை '52 . 57
பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டி நவ. '52 . 20
போட்டிப் பந்தயங்கள் ஜூன் '52 . 65
விசித்திரப் பந்தாட்டம் ஜன. '52 30

மனத் தத்துவம்

அங்க அபிநயங்கள் பிப். '52 . 57
தன்னை மறந்த டாக்டர் செப். '52 . 36
மறதி வேண்டும் . எப். '52 . 55
மனித மனம் . . மே '52 . 20

மூன்றும் அட்டை

அரசியல் நுட்பம் . . பிப். '52
தேர்தலின்போது . . டிச. '51
தேனீ பாஷை . . . செப். '52
தொழிலும் கலையும் . மார்ச் '52
ராம ராஜ்யத்திலே . ஜன. '52
வாலும் தலையும் . . ஜூன் '52
வையை வெள்ளம். மே '52

ரமணர்: வாழ்வும் வாக்கும்

டிச. '51 . 22 ஜூன் '52 . 21
ஜன. '52 . 11 ஜூலை '52 . 68
பிப். '52 . 66 ஆக. '52 . 14
மார்ச் '52 . 8 செப். '52 . 65
எப்ரல் '52 . 8 அக். '52 . 66
மே '52 . 34 நவ. '52 . 17

ராமாயணம்

அங்கதன் சோர்வு மார்ச் '52 . 12
இந்திரஜித்து வதம் செப். '52 . 68
கும்பகர்ணன் கண் விழித்தல் ஆக. '52 . 26
சீதை சோகம். ஜூலை '52 . 52
ராமனின் தாபம் டிச. '51 . 40
ராமனின் பிரதிக்ஞை அக். '52 . 6
ராவண வதம் நவ. '52 . 26
ராவணன் மந்திராலோசனை ஜூன் '52 . 40
லட்சுமணன் கோபம் பிப். '52 . 4
வாலி வதம் . . . ஜன. '52 . 7
ஹநுமான் கடல் கடந்தது எப். '52 . 20
ஹநுமானும் சீதையும் மே '52 . 40

ரேடியோ - டெலிவிஷன்

டெலிவிஷன் வந்தது. மே. '52 . 66
ரேடியோ ஒலிப்பதிவு அக். '52.49
ரேடியோ நாடகம் செப். '52 . 4

வழி வழி வந்த வசன நடை

இது நியாயமா? ஜன. '52 . 21
சீவகாருணியம் . டிச. '51 . 29

விஞ்ஞானம்

ஒலியை மிஞ்சும் விமானம் ஜூலை '52 . 64
கடலில்...செல்வம் ஆக. '52 . 59
கறையானுடன் போர் பிப். '52 . 38
குடிகார டிரைவர் டிச. '51 . 52

சூரிய அடுப்பு மே '52 . 58
சூரியன் மறைந்த . . ஜூன் '52 . 45
தண்ணீர் உண்மைகள் ஜூன் '52 . 19
நீஞ்சாமல் மிதக்க . . அக். '52 . 62
நீராவி மோட்டார் - கார் ஜூன் '52 . 11
பத்து லட்சம் வருஷத்தில் ஆக. '52 . 49
பறக்கும் தட்டு ஜூலை 52 . 46
புதிதாய்க் கண்ட பொருள்கள் மே '52 . 56
புதிய அணுச் சோதனை நவ. '52 . . 49
மனித குல வரலாறு மே '52 . 30
மின்சார சப்ளை... மார்ச் '52 . 45

வைத்தியம்

கண் விஷயம் டிச. '51 . 44
திக்குவாய் நீங்க ஜூலை '52 . 12
புஷ்ப வைத்தியம் ஜன. '52 . 49
வாயிலே தெரியுமா? செப். '52 . 8

ஜீவிய சரித்திரம்

அரசியலில் புகுந்த வேதாந்தி ஜூன் '52 . 58
இத்தாலியைக் காப்பாற்றியவர் செப். '52 . 25
இளம் மேதைகள் செப். '52 . 63
ஈரான் சூத்திரதாரி அக். '52 . 69
உலகின் . . புருஷர் டிச. '51 . 56
எகிப்தின் சர்வாதிகாரி நவ. '52 . . 3
எலிஸபெத் ராணி மார்ச் '52 . 3
ஓவியர் அவனீந்திரர் மார்ச் '52 . 25
கத்தி... சூரர் ஜூலை '52 . 71
கண் கொடுத்த குருடர் ஆக. '52 . 45
கவி போதனா டிச. '51 . 49
கனவில் அருள் பெற்ற நிபுணர் ஜூலை '52 . 25
கிருஷ்ணதேவ ராயர் டிச. '51 . 57
கிரெம்லின் கைதி பிப். '52 . 17
குஞ்சன் நம்பியார் ஏப். '52 . 32
சித்திரப் பித்தன் ஜூன் '52 . 36
தத்ரூப இரட்டையர்கள் மே '52 . 62
நட்சத்திரத்திலே பெயர் பொறித்தவன் மார்ச் '52 . 42
நானக் தேவி ஏப். '52 46
நேரு பற்றி செப். '52 . 52
பலரை ஏமாற்றிய பெருஞ் சீமான் ஜூன் '52 . 60
பறக்கும் ராஜ குடும்பம் மே '52 . 16
பெரியோரின் சிறு கதைகள் ஆக. '52 . 23
பொம்மை மாளிகை ஜூலை '52 . 33
மலானுக்குப் போட்டி மலான் ஆக. '52 . 33
மறக்காத சாணைக்கல் ஜூலை '52 . 56
மறந்துபோன சம்பவம் நவம். '52 . . 25
மறு பிறப்பு - உண்மையா, கற்பனையா? ஆக. '52 . 10
மீண்டும் பதவி ஏற்ற நேரு ஜூன் '52 . 8
மேதைக்கு மதிப்பு நவ. '52 . . 30
ராணி கல்யாணம் ஏப். '52 . 34
லிங்கன் தாடி வளர்த்த கதை மார்ச் '52 . 62
விநோபா யாத்திரை மே '52 . 4
விநோபா யார்? அக். '52 . 52
ஜீஸ்...நிபுணர் பிப். '52 . 62
ஸேப்டி - பின் . . ஏப். '52 . 52
ஹர்ஷ மகாகவி ஜூன் '52 . 33

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

மற்றும் தமிழ் நாடெங்கும் நடைபெறுகிறது.

November '52 Regd. No. M. 4975

மஞ்சரி

நந்தன - கார்த்திகை

ஊரும் உலகமும்		1
எகிப்தின் சர்வாதிகாரி		3
உணவு என்ன செய்யும்?		8
கோவூர் அழகன்	ஹிந்து	11
மருமக்கள் தாயம்	கர்மவீர்	14
ரமணர் : வாழ்வும் வாக்கும்		17
பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டி	ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்	20
மறந்துபோன சம்பவம்	பிரபாவலி	25
ராவண வதம்		26
மேதைக்குரிய மதிப்பு		30
உலகத்தின் உச்சி	பம்பாய் கிரானிக்கிள்	32
பத்து லட்சம் டாலர் இறும்		37
கார்ட்டூன் கதம்பம் (படம்)		40
'கலைமான்' ஜாதியார்	ஜான் அவ் லண்டன் வீக்லி	42
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	பிலிமிண்டியா	47
புதிய அணுச் சோதனை	சுதேசமித்திரன்	49
கொலைகாரன் (சிறு கதை)	அலெக்ஸாண்டர் குப்ரின்	52
திருமணம் (நாவல் சுருக்கம்)	சு. குருசாமி, பி.ஏ., எல்.டி.	57
உண்மை என்ன?	கலில் கிப்ரான்	75
மஞ்சரி வருஷ அட்டவணை		76